# பொருளியலாளன்

மலர் 3 இதழ் 1 மார்ச் 1989

* பண நிரம்பல்
* குழந்தைகள் இறப்பு
* கோல்புறூக் சீர்திருத்தம்
* மத்தியவங்கியின் அபிவிருத்திப்பணி

# PORULIYALALAN

## YOUNG ECONOMISTS ASSOCIATION



EDITOR

**Mr. N. Perinpanathan**
*B. A. Hons. (Cey.) M. A. (Jaffna)*
Senior Lecturer, Dept of Economics,
University of Jaffna.

ASSISTANT EDITOR

**Mr. M. Sinnathamby**
*B. A. B., Phil Hons (Cey), Dip. in Ed.*
Tutorial staff
Jaffna Hindu College

MANAGING EDITOR

**Mr. C. S. Ananthan**
*B. A. Hons. (Cey.)*

ADVISORY COMMITTEE

**Prof. S. Rajaratnam** *B. A. Hons. (Cey). M. Sc. (Lon.)*
Head, Dept. of Commerce and Management, University of Jaffna.

**Prof. N. Balakrishnan** *B. A. Hons. (Cey.), M. Phil. (Leeds)*
Dean, Faculty of Arts, University of Jaffna.

**Mr. M. Sinnathamby** *B. A. Hons. (Cey.) M. A. (Manchester)*
Senior Lecturer, Dept. of Economics, University of Peradeniya.

**Dr. V. Nithianandan** *B. A. Hons. (Cey.) Ph. D. (Reading)*
Head, Dept. of Economics, University of Jaffna

EDITORIAL BOARD

**Mr. V. P. Sivanathan** *B. A. Hons. (Cey.) M. A. (Jaffna).*
Lecturer in Economics, University of Jaffna.

**Mr. A. Senthilvadivel** *B. A. (Cey.) M. A. (Jaffna) S. L. A. S*
Deputy Director, General Treasury, Colombo.

**Mr. R. Nanthakumaran** *B. A. Hons (Jaffna) M. A. (Jaffna), M. Sc. (England)*
Deputy Director
National Planning Division
Ministry of Financial Planning Colombo.

**Miss S. Ambikadevi** *B. A. Hons. (Cey.)*
Assistant Lecturer in Economics, University of Jaffna.

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம், 18-8-85)

YOUNG ECONOMISTS ASSOCIATION
Social Justice Through Knowledge
SRI LANKA

# பொருளியலாளன்

ஏப்ரல் 1989


- *பண நிரம்பல்* — 1
  **மா. சின்னத்தம்பி**
- *இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியிற் கோல்புறாக் சீர்திருத்தங்கள் ஒரு திருப்பு முனை!* — 9
  **வி- நித்தியானந்தன்**
- *இலங்கையில் குழந்தைகள் இறப்புக்களின் போக்கு* — 27
  **கார்த்திகேசு குகபாலன்**
- *இலங்கை மத்திய வங்கியின் அபிவிருத்திப் பணி* — 34
  **சி. அம்பிகாதேவி**
- *உயர்தர வகுப்புக்களில் பொருளியல் கற்பித்தல் சில குறிப்புகள்* — 45
  **மா. சின்னத்தம்பி**
- *வறுமை தணிப்புத் திட்டம்* — 48
- *சர்வதேச நாணய நிதியமும் கடன் வசதிகளும்* — 54
  **இ. நந்தகுமாரன்**


**கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்களுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.**

## கட்டுரையாளர்கள்:


- மா. சின்னத்தம்பி
  B. A., B. Phil. Hons. (Cey.) Dip - in - Edu.
  துணை ஆசிரியர், பொருளியலாளன்
  ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி.

- வி. நித்தியானந்தன்
  B. A. Hons. (Cey.) Ph. D. (Reading)
  தலைவர், பொருளியற்துறை,
  யாழ்பாணப் பல்கலைக் கழகம்.

- கார்த்திகேசு குகபாலன்
  B. A. Hons. (Cey.) M. A. (Jaf.) D. P. S. (Madras)
  சிரேஷ்ட விரிவுரையாளர்
  புவியியல்துறை
  யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

- சி. அம்பிகாதேவி
  B. A. Hons. (Cey.)
  உதவி விரிவுரையாளர்
  பொருளியற்துறை
  யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

- இ. நந்தகுமாரன்
  B. A. Hons, (Jaf.) M. A. (Jaf) M. Sc. (Eng.)
  உதவிப்பணிப்பாளர்
  தேசிய திட்டமிடல் பிரிவு
  நிதித் திட்டமிடல் அமைச்சு
  கொழும்பு.

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)

YOUNG ECONOMISTS ASSOCIATION SRILANKA
Social Justice Through Knowledge

# பொருளியலாளன்

ஏப்ரல் 1989


- பண நிரம்பல்
  **மா. சின்னத்தம்பி** — 1
- இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியிற் கோல்புறாக் சீர்திருத்தங்கள் ஒரு திருப்பு முனை!
  **வி- நித்தியானந்தன்** — 9
- இலங்கையில் குழந்தைகள் இறப்புக்களின் போக்கு
  **கார்த்திகேசு குகபாலன்** — 27
- இலங்கை மத்திய வங்கியின் அபிவிருத்திப் பணி
  **சி. அம்பிகாதேவி** — 34
- உயர்தர வகுப்புக்களில் பொருளியல் கற்பித்தல் சில குறிப்புகள்
  **மா. சின்னத்தம்பி** — 45
- வறுமை தணிப்புத் திட்டம் — 48
- சர்வதேச நாணய நிதியமும் கடன் வசதிகளும்
  **இ. நந்தகுமாரன்** — 54


கட்டுரைகளில் காணப்படும் கருத்துக்களுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

## கட்டுரையாளர்கள்:

- **மா. சின்னத்தம்பி**
  B. A., B. Phil. Hons. (Cey.) Dip - in - Edu.
  *துணை ஆசிரியர், பொருளியலாளன்*
  *ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி.*

- **வி. நித்தியானந்தன்**
  B. A. Hons. (Cey.) Ph. D. (Reading)
  *தலைவர், பொருளியற்துறை,*
  *யாழ்பாணப் பல்கலைக் கழகம்.*

- **காத்திகேசு குகபாலன்**
  B. A. Hons. (Cey.) M. A. (Jaf.) D. P. S. (Madras)
  *சிரேஷ்ட விரிவுரையாளர்*
  *புவியியல்துறை*
  *யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்*

- **சி. அம்பிகாதேவி**
  B. A. Hons. (Cey.)
  *உதவி விரிவுரையாளர்*
  *பொருளியற்துறை*
  *யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்*

- **இ. நந்தகுமாரன்**
  B. A. Hons, (Jaf.) M. A. (Jaf) M. Sc. (Eng.)
  *உதவிப்பணிப்பாளர்*
  *தேசிய திட்டமிடல் பிரிவு*
  *நிதித் திட்டமிடல் அமைச்சு*
  *கொழும்பு.*

# பணநிரம்பல் (Money Supply)

— மா. சின்னத்தம்பி

*வரைவிலக்கணம்:*

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு நாட்டு மக்களின் கையில் அல்லது புழக்கத்தில் கிடைக்கத்தக்க பணத்தின் மொத்த அளவு பண நிரம்பல் எனப்படும்.

கொடுப்பனவுகளைச் செய்வதற்கும், கடனைத் தீர்ப்பதற்கும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப் படும் எந்த ஒரு சாதனமும் பணமாகும். உலோக நாணயம், தாள் நாணயம், காசோலை கள் போன்றன இலங்கையில் இவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன. தாள், உலோக நாணயங்களை ரொக்கப்பணம் என்றும், வணிக வங்கிகளில் பேணப்படும் கேள்வி வைப்புக்களை வங்கிப் பணம் என்றும் கூறு கிறோம்.

ரொக்கப் பணம், கேள்வி வைப்புக்கள் என்பன அரசாங்கம், வங்கிகள், ஆகியவற்றிடம் காணப்படுவதுண்டு. இவையெல்லாம் பண நிரம்பல் ஆகமாட்டாது. இவற்றில், பொது மக்களிடம் உள்ள ரொக்கப்பணமும், வங்கிப் பணமும் மாத்திரமே பணநிரம்பலாகும்.

## 1987 டிசெம்பர் மாதப்படியான நிலைமை

| துறை | நாணயம் | கேள்வி வைப்பு |
|---|---|---|
| | | (மில்லியன் ரூபாவில்) |
| அரசாங்கம் | 2·6 | 3806·5 |
| வங்கிகள் | 1565 2 | 4811 2 |
| பொதுமக்கள் | 13495.3 | 11588·0 |

ஆதாரம்: இலங்கை மத்தியவங்கி பொருளாதார மீளாய்வு 1987.

இவற்றில் பொது மக்களிடமுள்ள (13495·3 + 11588) 25083 3 மில்லியன் ரூபா மாத்திரமே பண நிரம்பலாகும்.

இதை வேறுவிதமாகக் கூறுவதானால், அரச திறைசேரியிலும் கச்சேரிகளிலும் வைத்திருக் கும் நாணயம், மத்தியவங்கி, வணிக வங்கி கள் ஆகியவற்றிடமுள்ள நாணயம் பண நிரம் பலில் அடங்குவதில்லை. அவ்வாறே உள் நாட்டு, வெளிநாட்டு வணிக வங்கிகளிட

முள்ள கேள்வி வைப்புக்கள், மத்திய வங்கியிலான சர்வதேச நிறுவனங்களினதும், வணிக வங்கிகளினதும் கேள்வி வைப்புக்கள் போன்றன இதில் சேர்க்கப்படுவதில்லை. மத்திய வங்கியிடமும், வணிக வங்கிகளிடமுமுள்ள அரசாங்கத்தின் கேள்வி வைப்புக்களும் பணநிரம்பலில் அடங்குவதில்லை. இதனால் பணநிரம்பல் என்பது தனியே பொது மக்களிடமுள்ள நாணயம், கேள்வி வைப்புக்கள் என்பவற்றையே குறிப்பதாயமையும்.

இவற்றுடன் வணிக வங்கிகளில் பொது மக்களின் பெயரில் உள்ள சேமிப்பு, தவணை வைப்புக்களும் பணநிரம்பலுக்குள் அடக்கப்படுகின்றது.

வகை

நாடுகளின் பணச் சந்தை நிலைமைகளைப் பொறுத்து பண நிரம்பல் வகைப்படுத்தப்படுவதுண்டு. இங்கிலாந்தில் 1986ன் கட்டிடச் சங்கங்கள் சட்டத்தின் அறிமுகத்துடன் வங்கிகளுக்கும் கட்டிடச் சங்கங்களுக்குமான வேறுபாடு தெளிவற்றதாயுள்ளது. கட்டிடச் சங்கங்களும், பாதுகாப்பற்ற நுகர்வோர் நிதியை ஓரளவுக்கு வழங்கக்கூடியனவாயுள்ளன. இதனால் அகன்ற பணம் (Broad Money) பற்றிய வரைவிலக்கணத்துள் வணிக வங்கிகளினதும், கட்டிடச் சங்கங்களினதும் பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் கட்டிடச் சங்க வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாயில்லை. வீடமைப்பு ஆண்டான 1987ல் தான் அதிகளவு வீடுகளை நிர்மாணிக்க நிதி வழங்கும் நோக்குடன் ஒன்று உருவாக்கப்பட்டது. ஆயினும் அது அதிகளவு செயற்பாடுடையதாக விளங்க முடியவில்லை. ஆனால் நிதிக் கம்பனிகளின் வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாக வளர்ச்சி பெற்றுள்ளது. இத்தகைய வளர்ச்சி நிலைமைகள் பணநிரம்பல் பற்றிய கருத்து நிலைகளில் மாற்றம் ஏற்படுத்தக் கூடியன.

பிரித்தானியாவில் பணநிரம்பல் பற்றிய பல பாகுபாடுகள் காணப்படுகின்றன. அவை

**M0:** இது கைப்பணமாக (Till Money) கருதப்படும். இது புழக்கத்திலுள்ள தாள், குத்தி நாணயங்களைக் குறிக்கும். இத்துடன் இங்கிலாந்து வங்கியுடனான வங்கியாளர்களின் தொழிற்படுவைப்புக்களும் சேர்த்துக்கொள்ளப்படும். இதை ஒடுங்கிய பண நிரம்பல் என்பர்.

**M1:** இதில் தாள், குத்தி நாணயங்களும், தனியார் துறை ஸ்ரேலிங் பக்க வங்கி வைப்புக்களும் அடங்கும்,

**M2:** M1ல் உள்ள வட்டி பெறாத மூலங்களும், தனியார் துறையின் வட்டி பெறும் சில்லறை ஸ்ரேலிங் வங்கி வைப்புக்கள், தனியார்துறையிடம் இருக்கும், சில்லறைக் கட்டிடச் சங்கங்களின் பங்குகளும், வைப்புக்களும் தேசிய சேமிப்பு வங்கியின் சாதாரண கணக்குகள் என்பனவும் இதில் உள்ளடக்கப்படுகின்றன..

**M3:** M1 உடன் தனியார் துறையிலிருக்கும், ஸ்ரேலிங் தவணை வைப்புக்கள், ஸ்ரேலிங் வங்கி வைப்புச் சான்றிதழ்கள் போன்றன இதில் அடங்குகின்றன.

**M3c:** M3 உடன் தனியார் துறையினர் வைத்திருக்கும் அந்நியச் செலாவணி வங்கி வைப்புக்களைக் கூட்டுவதால் பெறப்படும் தொகையாக இது அமையும்.

**M4:** M3 உடன் தனியார் துறையிடமுள்ள கட்டிடச் சங்கங்களின் பங்குகளின் வைப்புக்கள், வைப்புச் சான்றிதழ்கள், என்பவற்றால் சேரும் தொகையிலிருந்து கட்டிடச் சங்கங்களின் வங்கி வைப்புக்கள், வங்கி வைப்புச் சான்றிதழ்கள், தாள், குத்தி நாணயங்கள் என்பவற்றைக் கழிக்க வருவதாகும். அகன்ற பண நிரம்பல் என இது அழைக்கப்படுகிறது.

**M5:** M4 உடன் தனியார் துறையிடமிருக்கும் (கட்டிடச் சங்கங்கள் தவிர) பணச் சந்தை ஆவணங்களாகிய வங்கி உண்டியல்கள் (Bank Bills), திறைசேரி உண்டியல்கள் (Treasury Bills), உள்ளூர் அதிகாரிகளின் வைப்புக்கள் போன்றவற்றுடன் வரி வைப்புச் சான்றிதழ்கள், தேசிய சேமிப்பு ஆவணங்கள் (இதில் சான்றிதழ்கள், உழைக்கும் போதே சேமித்தல், பிற நீண்ட தவணை வைப்புக்கள் என்பன அடங்குவதில்லை) போன்றவற்றைக் கூட்ட வரும் தொகையாக இது அமையும்.

பணநிரம்பலின் பல்வேறு வகைகளும், மக்களின் வங்கிப் பழக்கம், வங்கிகளினதும், ஏனைய நிதி நிறுவனங்களினதும் வளர்ச்சி, நாணயமற்ற ஆவணங்களில் முதலிடும் கவர்ச்சி, அரச ஊக்குவிப்புகளின் மாதிரியும், அளவும், உப சந்தைகளின் வளர்ச்சி நிலை போன்றவற்றில் தங்கியுள்ளது. அண்மைக்

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)

காலங்களில் இங்கிலாந்தில் கட்டிடச் சங்கங்களும், இலங்கையில் நிதிக் கம்பெனிகளும் பண நிரம்பல்-மாற்றங்களை நிர்ணயிப்பனவாயுள்ளன.

## இலங்கையில் பணநிரம்பல் பற்றிய பாகுபாடு

இலங்கை மத்திய வங்கியானது இரு வகையான பணநிரம்பலை ஏற்றுக்கொண்டுள்ளது. அவை ஒடுங்கிய பணநிரம்பல் (M1), அகன்ற பண நிரம்பல் (M2) என்பனவாகும். இவற்றை விரிவாக நோக்குவோம்.

## ஒடுங்கிய பண நிரம்பல் (M1)

**Narrow Money Supply**

குறிப்பிட்ட நேரத்தில் பொதுமக்களிடம் (தனியார் துறையில்) உள்ள தாள், குத்தி நாணயமும், பொது மக்களிடமுள்ள கேள்வி வைப்புக்களும் ஒடுங்கிய பணநிரம்பல் எனப்படும்.

$$M1 = C + D$$

இதில் C என்பது தாள், குத்தி நாணயத்தையும், D என்பது கேள்வி வைப்புக்களையும் குறிப்பதாயுள்ளது. M1 என்பது ஒடுங்கிய பணத்தைக் குறிக்கின்றது.

1987ம் ஆண்டின் இறுதி நிலைமையின்படி எண் தொடர்பில் இதைப் பின்வருமாறு காட்ட முடியும்.

| பண அலகுகள் | மில்லியன் ரூபாய்கள் |
|---|---|
| பொதுமக்களிடமுள்ள நாணயம் (தாள் + குத்தி) | 13,495 |
| பொதுமக்களிடமுள்ள கேள்வி வைப்புக்கள் | 1,588 |
| ஒடுங்கிய பணம் | 25,083 |

ஆதாரம்: இலங்கை மத்தியவங்கி பொருளாதார மீளாய்வு 1987.

## விரிந்த பணநிரம்பல் (M2) BROAD MONEY SUPPLY

ஒடுங்கிய பணத்துடன் போலிப்பணமாகிய (QUASI MONEY) பொது மக்களிடமுள்ள தவணை வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள் என்பவற்றையும் கூட்டுவதால் பெறப்படுவதாகும். இதனைப் பின்வருமாறு காட்ட முடியும்.

$$M2 = M_1 + SD + TD$$ அல்லது
$$M2 = (C+D) + SD + TD$$

இவற்றில் சேமிப்பு தவணை வைப்புக்கள் பொது மக்களின் பெயரில் வணிக வங்கிகளிடமுள்ள தொகைகளையே குறிப்பதாகும்.

இலங்கை மத்திய வங்கியின் கருத்துப்படி பொதுமக்களிடம் உள்ள போலிப்பணம் என்பதற்குள் கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், ஏனைய தனியார்துறை ஆகியன வைத்திருக்கும் சேமிப்பு, தவணை வைப்புக்களும் அடங்கும் 1987 ம் ஆண்டின் இறுதி நிலையின் படி எண் தொடர்பில் இதைப் பின்வருமாறு காட்டமுடியும்.

| பண அலகுகள் | மில்லியன் ரூபாய்கள் |
|---|---|
| பொது மக்களிடமுள்ள நாணயம் | 13,495 |
| பொது மக்களிடமுள்ள கேள்வி வைப்புக்கள் | 1,1588 |
| ஒடுங்கிய பணம் (M1) | 25,083 |
| போலிப்பணம்: | |
| பொது மக்களிடமுள்ள சேமிப்பு, தவணை வைப்புக்கள். | 33,252 |
| விரிந்த பணம் (M2) | 58,335 |

**ஆதாரம்:** இலங்கை மத்தியவங்கி பொருளாதார மீளாய்வு 1987

கடந்த இரண்டு தசாப்தங்களில் பணநிரம்பல் அளவுகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டு வந்துள்ளது.

| வருடங்கள் | நாணயம் (மில்லியன் ரூபாய்கள்) | கேள்வி வைப்புக்கள் (மில்லியன் ரூபாய்கள்) |
|---|---|---|
| 1967 | 979.9 | 827.7 |
| 1977 | 2791.7 | 2574.2 |
| 1987 | 13495.0 | 11538.0 |

**ஆதாரம்:** இலங்கை மத்திய வங்கி அறிக்கைகள்

நாணய அளவானது இங்கு முதற் பத்தாண்டில் மூன்று மடங்காகவும் அடுத்த பத்தாண்டில் ஐந்து மடங்காகவும் அதிகரித்துள்ளது. ஆனல் கேள்வி வைப்புக்கள் முதற் பத்தாண்டில் மூன்று மடங்காகவும் அடுத்த பத்தாண்டில் நான்கு மடங்கிலும் கூடுதலாகவும் அதிகரித்துள்ளன.

இலங்கையில் நாணயத்தாள்களில் நூறு ரூபாய்த் தாள் நாணயமே 1980 வரையும் மிக உயர்ந்த பெறுமதியுள்ள அடையாள நாணயமாக இருந்துள்ளது. 1981 இலிருந்து 500 ரூபா, 1000 ரூபா தாள்கள் புழக்கத்

திற்கு வந்து முதன்மையான பரிமாற்று ஊடகமாகி விட்டன. இவற்றின் வெளியீட்டளவு கூடிவந்ததை அறிய முடியும்.

| வருடங்கள் | தாள் நாணயம் (மில்லியன் ரூபாவில்) | |
|---|---|---|
| | 1000 ரூபா | 500 ரூபா |
| 1981 | 28.7 | — |
| 1982 | 1115.9 | 969.0 |
| 1983 | 2011.5 | 1533.5 |
| 1984 | 2688.[illegible] | 1984.3 |
| 1985 | 3762.4 | 2286.1 |
| 1986 | 4352.8 | 2806.9 |
| 1987 | 5552.0 | 3662.7 |

இப் பெறுமதி உயர்ந்த தாள் நாணயங்கள் 1946 இல் பாவனையிலிருந்து நீக்கப்பட்டன என்பது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். இதே போல் இரண்டு தசாப்தங்களுக்கு முன் அதிகளவில் புழக்கத்திலிருந்த ஒரு சதம், இரண்டு சதம் போன்ற குத்தி நாணயங்கள் தற்போது புழக்கத்திலிருந்து அகன்று விட்டன என்பது மிகையாகாது. எந்தளவு பெறுமதியான அடையாள நாணயங்கள் அதிகம் புழக்கத்திலிருக்கும் என்பது சனத்தொகை, பொருளாதார நடவடிக்கையின் மட்டம், பரிமாற்றங்களின் அளவு, பணவீக்க வீதம், பொதுவான நாட்டின் செழிப்பு நிலை போன்ற பலவற்றில் தங்கியுள்ளது.

இதே போன்று கேள்வி வைப்புக்களின் பெருக்கம் என்பதும் வங்கி முறைப்பழக்கம் காசோலையின் வர்த்தகப் பரிமாற்ற அளவு வங்கிக் கிளைகளின் விரிவாக்கம் பொருளாதார வளர்ச்சிமட்டம், நடுத்தர, உயர்தர வருமான வகுப்பினரின் வருவாயில் ஏற்படும் மாற்றங்கள் நாட்டின் வங்கித் தொழிலைப் பாதிக்கும் சமூக நிலைமைகள், இவ்வைப்புக்கெதிராக வழங்கப்படும் வணிகத்துறையினருக்கான நிதியுதவிச் சலுகைகள் இவற்றுக்கான வட்டி வீதங்கள் (வழங்கப் படுவதாயின்) போன்ற பலவற்றில் தங்கியிருக்கும்.

கேள்வி வைப்புக்கள் வங்கிப்பணம் எனப்படுகின்றன. அது பின்வரும் காரணங்களினால் பணமாகக் கருதப்படும்.

(1) வாடிக்கையாளன் விரும்பிய போது இவ்வமைப்பிலுள்ள முழுவதையும் கூட எவ்வித முன்னறிவித்தலுமின்றி வெளியே எடுக்க முடிதல்.

(2) ஒருவர் மற்றவருக்குக் கொடுத்துத் தீர்க்க வேண்டிய கடனை இக் கணக்கினூடாக பதிவினை மாற்றிக் கொள்வதன் மூலம் தீர்த்து விட முடிதல்.

வாடிக்கையாளன் ஒருவன் வங்கியில் வைப்புச் செய்யும் போதும், வாடிக்கையாளன் ஒருவனுக்கு கடன்வழங்கும் போதும் கேள்வி வைப்புக்கள் ஏற்படுகின்றன. கடன் வழங்குதல் வணிக வங்கியின் பிரதான தொழிற்

பாடாக இருப்பதால் கேள்வி வைப்புகளின் எண்ணிக்கை அதிகரிப்பது பொதுவானதாயுள்ளது.

ஒரு நாட்டின் சேமிப்பு, தவணை வைப்புக்கள் எந்தளவு மாறும் என்பதும் பல காரணிகளில் தங்கியுள்ளது. மக்களின் வருமான உயர்வு வீதங்கள், பணவீக்க வீதம், புதிய தொழில் வாய்ப்பு அதிகரிப்பு, புதிய ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதி நிலைமை, வட்டி வீத மாற்றங்கள், ஒழுங்கற்ற பணச் சந்தையிலான வட்டி வீதங்கள், சேமிப்பு, காலவைப்பு சான்றிதழ்களுக்கான பணச் சந்தை அங்கீகரிப்புக்கள் போன்ற பலவற்றில் தங்கியிருக்கும்.

சேமிப்பு வைப்புக்களைப் பணமாக கருதுவதற்குரிய காரணங்கள் வருமாறு.

(1) தற்போது தேசிய சேமிப்பு வங்கியில் மட்டுமன்றி எல்லா வணிக வங்கிகளிலும் கேள்வி வைப்புக்களைப் போன்று முன்னறிவித்தலின்றி முழுத் தொகைகளையும் வெளியே எடுக்க முடிதல்.

(2) அகன்ற பணம் என்ற வகை ஏற்கப்பட்டதோடு அதில் ஒரு அங்கமாக சேமிப்பு வைப்பு சேர்த்துக் கொள்ளப்பட்டிருத்தல்.

இதே போல் தவணை வைப்புக்களும் பணமாக கருதப்படுகிறது. இதற்குப் பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

(1) முதிர்வுக்கு முன்னதாகவே தேவையான போது வைப்புத்தாரர் தவணை வைப்புத் தொகைக்கு சமனான தொகையை முற்பணமாக பெறமுடிதல்.

(2) அகன்ற பணம் என்ற பகுப்பினுள் தவணை வைப்புக்களும் ஒரு அங்கமாக சேர்த்துக் கொள்ளப் பட்டிருத்தல்.

இலங்கையின் தனியார் துறையில் சேமிப்பு தவணைவைப்புக்களின் தொகை படிப்படியாக கூடியே வந்துள்ளது.

| வருடங்கள் | சேமிப்பு வைப்புக்கள் (மில்லியன் ரூபா) | தவணை வைப்புக்கள் (மில்லியன் ரூபா) | மொத்தம் (மில்லியன் ரூபா) |
|---|---|---|---|
| 1980 | 2499.8 | 6954.5 | 9454,3 |
| 1984 | 7167.4 | 17883.0 | 25050.4 |
| 1987 | 13871.3 | 11265.8 | 30137.1 |

1980–84 காலப்பகுதியில் சேமிப்பு வைப்புகளும், தவணை வைப்புக்களும் கூடியே சென்றுள்ளன. ஆனால் 1984-87 காலப்பகுதியில் சேமிப்பு இருமடங்கிற்கு மேலாக கூடியுள்ள போதிலும், தவணை வைப்புக்கள் குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் போலிப்பணத்தின் அளவு தொடர்ந்து அதிகரித்தே சென்றுள்ளது.

## கட்டமைவு: (COMPOSITION)

ஒரு நாட்டின் குறிப்பிட்ட வருட மொத்தப்

பண நிரம்பலில் ஒவ்வொரு கூறுகளும் என்ன சதவீதத்தில் காணப்படுகின்றன என்பதே பண நிரம்பலின் கட்டமைவு அல்லது சேர்க்கை எனப்படும்.

ஒடுங்கிய பணநிரம்பலில் நாணயம், கேள்விவைப்புக்கள் என்பன என்ன நூற்றுவீதத்தில் காணப்படுகின்றன எனக் கூறுவதே பணநிரம்பலின் கட்டமைவாகும். இதன்படி நாணயத்தின் பங்களிப்பானது ஒடுங்கியபண நிரம்பலின் சதவீதமாகவே கூறப்படுவதுண்டு. இதே போல் கேள்வி வைப்புக்களின் பங்களிப்பும் ஒடுங்கிய பணநிரம்பலின் சதவீதமாகவே கூறப்படுவதுண்டு. இதே போல் கேள்வி வைப்புக்களின் பங்களிப்பும் ஒடுங்கிய பணநிரம்பலின் சதவீதமாகவே கூறப்படுவதுண்டு. இந்த கட்டமைவானது இலங்கையில் குறிப்பிடத்தக்களவில் மாற்றமடைந்துள்ளது.

| வருடம் | பொது மக்களிடமுள்ள நாணயத்தின் சதவீதம் | பொது மக்களின் பெயரில் உள்ள கேள்வி வைப்புக்கள் | ஒடுங்கிய பண நிரம்பல |
|---|---|---|---|
| 1967 | 54.2 | 45.8 | 100.0 |
| 1970 | 47.6 | 52.4 | 100.0 |
| 1977 | 52.0 | 48.0 | 100.0 |
| 1980 | 44.0 | 56.0 | 100.0 |
| 1987 | 54.0 | 46.0 | 100.0 |

கடந்த இரண்டு தசாப்தங்களில் நாணயத்தின் பங்கு ஏறக்குறைய 50 சத வீதமாக இருந்தமை கவனிக்கப்பட்டுள்ளது. 1984லிருந்து தொடர்ச்சியாக நாணயத்தின் பங்கு 50 சதவீதத்திலும் கூடுதலாகவே அமைந்தது 1986 ல் மிகக் கூடியளவான 55 சதவீதமாயும் 1987ல் 54 சதவீதமாயும் காணப்பட்டன.

மறுபுறம் கேள்வி வைப்புக்கள் 1983ல் 51 சதவீதமாகக் காணப்பட்டன. எனினும் 1984லிருந்து 50லும் குறைந்த வீதத்தில் காணப்பட்டன. 1986 ல் மிகக் குறைந்த வீதமான 45 ஆகவும் 1987ல் 46 ஆகவும் காணப்பட்டன.

இதே போன்று விரிந்த பணநிரம்பலின் (M2) சதவீதமாக ஒடுங்கிய பணநிரம்பல், சேமிப்பு, தவணை வைப்புக்கள் என்பவற்றைக் கூறுவதும் பணநிரம்பலின் கட்டமைவு ஆகும். இந்த விரிந்த பணநிரம்பலின் கூறுகளின் சத வீதத்திலும் மாற்றங்கள் காணப்பட்டன.

| வருடம் | ஒடுங்கிய பண நிரம்பல் (M1) | சேமிப்பு, தவணை வைப்புக்கள் | விரிந்த பண நிரம்பல் (M2) |
|---|---|---|---|
| 1980 | 48 | 52 | 100.0 |
| 1982 | 39 | 61 | 100.0 |
| 1984 | 39 | 61 | 100.0 |
| 1986 | 42 | 58 | 100.0 |
| 1987 | 43 | 57 | 100.0 |

பொதுவாக அகன்ற பண நிரம்பல் பற்றிய பகுப்பாய்வு மத்திய வங்கியினால் 1980 களிலிருந்தே ஒழுங்கு முறையாக கையாளப்படலாயின. இக்காலப் பகுதியில் சேமிப்பு, தவணை வைப்புக்களின் சதவீதப் பங்கு சராசரியாக 50 சத வீதத்திலும் கூடுதலாகவே காணப்பட்டது. 1982, 84, 85 காலப்பகுதிகளில் மிகக் கூடுதலான 61 சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது.

## நிர்ணயிக்கும் காரணிகள்

ஒரு நாட்டின் பணநிரம்பலின் கூறுகளான நாணயம், கேள்வி வைப்பு, சேமிப்பு, தவணை வைப்புக்கள் என்பவற்றின் அளவை பல்வேறு காரணிகள் நிர்ணயிக்கின்றன. இக்காரணிகள் மாற்றமடைய, அதன்படி நாட்டின் பணநிரம்பலிலும் மாற்றங்கள் ஏற்படும். ஏற்கனவே பணநிரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தும் காரணிகளை தெளிவு கருதி மீண்டும்விபரமாக தனித்தனியே நோக்குவோம்.

## நாணயம்

இலங்கையில் தாள், குத்தி நாணயங்கள் போன்றவற்றை இலங்கை மத்தியவங்கியானது நாணயச் சட்டத்தின் 49 ஆவது பிரிவின் கீழ் (Section 49 of the Monetary Law Act) வெளியிடுகிறது. இது மத்திய வங்கியின் தனியுரிமை. நிதித்திட்டமிடல் அமைச்சரின் அனுமதியுடன் நாணயச்சபை குறிப்பிட்ட பொறுமானங்களில் வடிவங்களில் அளவுகளில் மத்திய வங்கி வெளியிடும்.

புழக்கத்திலுள்ள பணத்தைத் திரும்பப் பெறவும் அதற்குப் பதிலாக வேறுபணத்தை புழக்கத்திற்கு விடவும் நாணய விதிச்சட்டம் மத்திய வங்கிக்கு அனுமதி அளிக்கிறது.

மத்திய வங்கியின் உள்நாட்டு, வெளிநாட்டுச் சொத்துக்கள் உயரும் போது அதற்குச் சமனாக பண வெளியீட்டைச் செய்யலாம். இதற்கு ஏற்ப பண நிரம்பல் கூடுகிறது.

(1) உள்நாட்டுச் சொத்துக்கள்
- 1.1 கடன்களும், முற்பணமும்
- 1.2 அரசிற்கான கடன்கள்
- 1.3 அரசபிணைகளும், அரச உத்தரவாதப் பிணைகளும்

(2) வெளிநாட்டுச் சொத்துக்கள்
- 2.1 வெளிநாடுகளிலுள்ள பணமும், மீதியும்
- 2,2 வெளிநாட்டுப் பிணைப் பத்திரமும், திறைசேரி உண்டியல்களும்
- 2·3 சிறப்பு எடுப்பனவு உரிமை (SDR) ஒதுக்கங்கள்

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)

இவற்றின் அளவுகளில் அதிகரிப்பு ஏற்படும் போதெல்லாம் அதற்குச் சமனுக பண வெளியீடும் கூடி பண நிரம்பல் உயர்வதுண்டு. இலங்கையின் பாதீடுகளின் பற்றுக்குறைக்கு நிதியிட்டுதற்கு மத்திய வங்கியிடம் அரசாங்கம் கடன்களும், முற்பணங்களும் பெறுதல் கடந்த தசாப்த காலத்தில் கூடியுள்ளது. இதனுல் நாணய அளவும் அதிகரித்தது. 1950ல் 353.2 மில்லியனுக வெளியிடப்பட்ட நாணய அளவு 1980ல் 4807.6 மில்லியனுகவும் 1987ல் 15063.1 மில்லியனுகவும் அதிகரித்தது.

## கேள்வி வைப்புக்கள்

வணிக வங்கிகளில் தனியார் துறையினர் வைத்திருக்கும் கேள்வி வைப்புக்கள் வங்கிப் பணமாக கருதப்படுகின்றன. வணிக வங்கிகள் கடனுக்கம் செய்யும் போது அவை கேள்வி வைப்புக்களை உருவாக்குகின்றன. இதன்படி கடனுக்கம், பணவாக்கம் என்ற வகையில் கடனுக்கம் அதிகரிக்க கேள்வி வைப்புக்களும் கூடிச் செல்லுகின்றன.

வங்கிகளின் உள்நாட்டுக் கடன் வழங்கல் நடவடிக்கை கேள்வி வைப்புக்களின் அதிகரிப்பைத் தீர்மானிக்கின்றது.

நாட்டின் வங்கி வீதங்களைக் குறைக்கும் போதும் மத்திய வங்கியின் கொடுகடன் திட்ட (Credit Plan) அடிப்படையிலான கட்டுப்பாடுகளை குறைக்கும் போதும் கடனுக்கம் கூடி பணநிரம்பல் கூடுவதுமுண்டு.

அதே போன்று, கேள்வி வைப்புக் கெதிரான மேலதிகப் பற்று அல்லது முற்பணம் வழங்கும் நடவடிக்கைகளை குறைக்கும் போது மொத்தக் கேள்வி வைப்புக்கள் குறைந்து விடுகின்றன.

நாட்டின் வங்கிப் பழக்கவழக்கம் கூடுதலாகக் கொண்ட நடுத்தர, உயர்தர வகுப்பினர் கூடுதலான வருமான உயர்ச்சியைப் பெறும் நிலைமைகள் விருத்தியடையும் போதும் கேள்வி வைப்புக்களினளவு கூடிச் செல்ல முடியும்.

மக்களின் தேவைப் பெருக்கத்துக் கேற்ப வங்கிகளின் நடைமுறை இலகுவானதாயும் நவீன மயமானதாகவும் மாற்றப்படுமாயின் மக்கள் பெயரில் பேணப்படும் கேள்வி வைப்புக்களினளவு உயரமுடியும். பணச்சந்தை நடவடிக்கைகளில் வளர்ச்சி ஏற்பட்டு காசோலைப் புழக்கம் கூடிச் செல்லும் நிலைமை ஏற்படுமாயின் அப்போது கேள்வி வைப்புக்கள் கூடிச்செல்லும்.

## சேமிப்பு, தவணை வைப்புக்கள்

இவை கிட்டிய பணமாகவும் (Near Money) கருதப்படுகின்றன. இவை எதிர்கால பாதுகாப்புக் குரிய சொத்துக்களேயாகும். இவை வட்டி வருமானம் உழைக்கக் கூடியவை. சேமிப்பு வைப்புச் சான்றிதழ்கள், தவணை வைப்புச் சான்றிதழ்கள் போன்றவற்றை பணமாகப் பயன்படுத்தி கொடுப்பனவுகளைத் தீர்க்கலாம். அவை பெரிதும் ஏற்றுக் கொள்ளப்படும் தன்மையைப் பெறுகின்றன. இவ்வாறு ஏற்கப்படும் தன்மை அவற்றைப் பணமாக கருதும்படி செய்துள்ளது. நிலம், கட்டிடம் போன்றவற்றை காசாக மாற்றிக் கொள்ள நீண்ட காலம் தேவைப்படும் அத்தோடு எதிர்பார்க்கும் விலைக்கே விற்றுவிடல் கடினமாகும். எதிர்பார்க்கப்படும் பெறுமதியிலும் குறைத்தே விற்க வேண்டியேற்படும். இதனுல் சொத்துக்களைக் காசாக மாற்றும் போது மதிப்பிடப்பட்ட பெறுமதியை அவை பெற்றுக் கொள்வதில்லை. இவ்வியல்புகளிலிருந்து சேமிப்பு, தவணை வைப்புக்கள் வேறுபடுகின்றன. இவற்றை மிகவும் குறைந்தளவு நிதியிழப்புடன் அல்லது அத்தகைய இழப்பின்றி காசாக மாற்றிக் கொள்ள முடியும். இதனுலேயே இவற்றைக் ''கிட்டிய பணம்'' என்பர்.

இவை வணிக வங்கிகளில் தனியார் துறையினர் (நேரடி அரசாங்கம் அல்லாத) வைத்திருக்கும் வைப்புக்களையே குறிக்கின்றன. நாட்டின் கூட்டுறவு நிறுவனங்கள், அரச கூட்டுஸ்தாபனங்கள் போன்றவற்றின் வைப்புக்களும் ஏனைய தனியார் துறையும் அடங்கும். நாட்டில் வதிவற்றோர் வெளிநாட்டு

நாணய வைப்பு (NRFCA) தவிர்ந்த ஏனைய வைப்புக்களே இதில் கவனிக்கப்படும். தனியார் துறை சார்ந்த நிதி நிறுவனங்கள் பெருந்தோட்ட நிறுவனங்கள் வியாபார நிறுவனங்கள், தயாரிப்புநிறுவனங்கள், வியாபாரத் தொடர்பற்ற நிறுவனங்கள், மாநகர சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், தனியாட்கள் என்போரது வைப்புக்களும் இதில் உள்ளடக்கப்படும். இவற்றில் தனியாட்களின் பங்கே மிகவும் அதிகமாக இருந்துள்ளது. 1987ல் தவணை வைப்புக்களில் 41 சதவீதத்தையும் சேமிப்பு வைப்புக்களில் 95 சதவீதத்தையும் தனியாட்கள் கொண்டிருந்தனர். நாட்டின் வட்டி வீத மாற்றங்கள் இவ் வைப்புக்களை அதிகரிப்பதற்கு ஊக்கமளிக்கும் வலுவான காரணியாக அமைந்துள்ளது. 1977 – தவணை வைப்புக்கள் 1461.3 மில்லியனுயிருந்து 1987 – ல் 18,871.3 மில்லியனுக உயர்ந்திருந்தது. இதே காலப் பகுதியில் சேமிப்பு வைப்புக்கள் 1491.1 மில்லியனுயிருந்து 11,265.8 மில்லியனுக உயர்ந்திருந்தது. 1987 ல் சேமிப்பு வைப்புக்கள் 18 சத வீதத்தினுலும், தவணை வைப்புக்கள் 6 சத வீதத்தினுலும் கூடியிருந்தன.

## மத்தியவங்கியும் பணநிரம்பலும்

பணநிரம்பலின் தொடர்ச்சியான அதிகரிப்பை ஒழுங்குபடுத்தும் நாட்டின் உயர்ந்த நாணய அதிகாரியாக இலங்கை மத்தியவங்கி செயல்படுகிறது. மத்திய வங்கியின் நாணய சபையானது வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள், சென்மதிநிலுவை உள்நாட்டு விலை மட்டம், போன்ற பொருளாதார மாறிகளுடன் இணைந்த வகையில் பணநிரம்பலை நோக்குகின்றது. நாட்டின் நாணயக் கொள்கையில், பணநிரம்பலை ஒழுங்குபடுத்துவதன் மூலம், விலை உறுதியை ஏற்படுத்துவதும். இலங்கை ரூபாவின் வெளிநாடடுப் பெறுமதியைப் பாதுகாப்பதும், பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதும் முதன்மை நோக்கங்களாயுள்ளன.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரமொன்றில், பணநிரம்பலை பொருள் நிரம்பலுடன் தொடர்புபடுத்தி நோக்குவதே பயனுடையது. நாட்டின் பணநிரம்பல், பொருள் நிரம்பலுடன் தொடர்பற்ற முறையில் அசைவுறும், போது மத்தியவங்கி தகுந்த முறையில் மாற்று நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பொறுப்புடையதாகும். நாணய விதிச் சட்டம், நாணயக் கொள்கையின் கருவிகளாகப் பயன்படுத்தப்படுவதற்கு பல தரப்பட்ட அதிகாரங்களை வழங்கியுள்ளது.

நாணயக் கொள்கை நிர்வகிக்கப்படும் போது அரசாங்கக் கொள்கையுடன் மத்திய வங்கி இணங்கிச் செயல்படுகின்ற தென்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பொருளாதாரத் தேவைகளுக்கேற்பவே நாணய விரிவு ஏற்படுகின்ற தென்பது மத்திய வங்கியினுல் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

நாட்டின் பணநிரம்பல் மிதமிஞ்சிக் கூடிச் சென்ருல் பணவீக்கம் தோன்றிவிடும். அப்போது பொருளாதாரத்தில் பல்வேறு குழம்பிய நிலைகள் தோன்றும். பணவீக்க காலத்தில் பணப்பெறுமதி வீழ்ச்சியுறுவதால் மக்கள் தமது பணத்தை பண்டமாக மாற்ற முயல்வார்கள். இதனுல் மொத்தக் கேள்வி கூடிவிடும் அதை ஈடுசெய்ய இறக்குமதியை அதிகரிக்கவேண்டியேற்படும். இதனுல் வர்த்தக நிலுவை பாதகமாகி சென்மதி நிலுவையை முகாமைப்படுத்துவது கடினமாகிவிடும் இதனுல் உள்நாட்டு விலைகள் உயரவும், சர்வதேச நிலைமைகள் பாதகமாக மாறக் கூடிய வகையில் பணநிரம்பல் மிதமிஞ்சி ஏற்படும் போது பொருளாதாரத்தில் மேலதிக திரவத் தன்மை ஏற்பட்டு விடும். அதைத்திட்டவட்டமாக வழிப்படுத்தும் பொறுப்பு மத்தியவங்கிக்கு உண்டு.

வங்கித்துறைக் கடனுக்கத்தினுல் பணநிரம்பல் கூடுகிறதெனக் கருதும் பட்சத்தில் பணநிரம்பலைக் குறைப்பதற்கு பல்வேறு கருவிகளை மத்திய வங்கி கையாள முடியும். அதி வர்த்தக வங்கிகளுக்கு வழங்கும் கடன்கள் முற்பணம் போன்றவற்றைக் குறைத்துக் கொள்ளலாம். அவ்வாறு மத்திய வங்கி

குறைக்கும் போது வணிக வங்கிகளும் தமது வாடிக்கையாளருக்குக் கொடுக்கும் கடன்களைக் குறைக்க வேண்டி ஏற்படும்.

மத்திய வங்கியானது பண நிரம்பலை ஒழுங்கு படுத்துவதற்காக, வங்கி வீதம், சட்டப்படியான ஒதுக்கு வீதம், சிறப்பு ஒதுக்கங்கள் போன்றவற்றை உயர்த்திக் கொள்ளக் கூடியது. நாணய விதிச்சட்டத்தின் 90 ம் பிரிவின்படி பகிரங்க சந்தை நடவடிக்கையில் ஈடுபட்டு திறைசேரி உண்டியல்கள் வைப்புச் சான்றிதழ்கள் போன்றவற்றை விற்பதன் மூலமும் கடனுக்கத்தைக் குறைக்கக் கூடியது.

நாட்டின் நாணய வெளியீட்டைக் குறைப்பதற்கு ஏற்ற வகையில் இயன்றளவு பாதீட்டு (Budget)ப் பற்றுக்குறையை நிரப்புதற்கு வங்கித்துறை அல்லாத மூலகங்களைப் பயன்படுத்தும்படி ஆலோசனைகளையும் கூறி, தன்னாலியன்றளவு உதவிகளையும் வழங்குகிறது. தற்போது தனது இலாபத்தையும் திறைசேரிக்கு வழங்கி வருவதும், திறைசேரி உண்டியல்களை ஏனைய நிறுவனங்கள் வாங்கும்படி உத்தரவாதமளித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

கடனுக்க ஒழுங்குகள் நாட்டின் முதலீடுகள் உற்பத்தி, தொழில் வாய்ப்பு, ஏற்றுமதி என்பவற்றை அதிகரிக்கக் கூடிய முறையில் அமையக் கூடியதாக பண்பு முறைக் கட்டுப்பாடுகளிலும் அதிக கவனம் செலுத்துகிறது உற்பத்தித் திறனற்ற துறைகளுக்கு வழங்கப்படும் கடன் அளவுகளுக்கு கட்டுப்பாடு விதிப்பதிலும் அவ்வாறான துறைக்கடன்களின் முதிர்வுக் காலத்தைக் குறைப்பதிலும் அவற்றுக்கெதிரான பிணைகளின் பெறுமதியை உயர்த்துவதிலும் ஈடுபடுகிறது. இவ்வகை வேண்டாத துறைக்கடன் பெறுதற்கு வணிக வங்கிகளில் அதன் வாடிக்கையாளர் பேண வேண்டிய இழிவு ஒதுக்கு அளவுகளையும் அதிகரித்துக் கொள்கிறது. இதே போல் வணிக வங்கிகள் தமது வெவ்வேறு வைப்புக்களுக்கும் கொடுக்கும் வட்டி வீதங்களையும் மாற்றியமைக்கும் அதிகாரத்தையும் நாணயச் சபை கொண்டுள்ளது. அவற்றினால் வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி வீதங்களை மாற்றும் படியும் அது கேட்கலாம். இவற்றை மீறி நடக்கும் வணிக வங்கிகளினால் குறிப்பிடப்பட்ட கொடுகடன் கருவிகளை கழிவு செய்யவோ மறுக்கவோ மத்திய வங்கியின்நாணயச் சபைக்கு அதிகாரமுண்டு.

1987 காலப்பகுதியில் இத்தகைய கட்டுப்பாடான நாணயக் கொள்கையில் ஓரளவு தளர்வு காணப்பட்டது. 1984 லிருந்து ஒதுக்கு விகிதங்களைக் குறைக்கும் முறை தொடங்கியிருந்தது 1986 முற்பகுதியிலிருந்தே சிறப்பு ஒதுக்குகளைப் பேணும் முறையைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கியிருந்தன. எல்லா வகை வைப்புக்களின் மீதும் விதிக்கப்படும் நியதிச்சட்ட ஒதுக்குகள் குறைந்து 10 சதவீதமாக பேணப்பட்டிருந்தன. மத்திய வங்கியின் மீள் நிதியிடல் நடவடிக்கைகளும் இவ்வாண்டில் கடன் வழங்குதலைத் தூண்டுவதாயிருந்தது.

பொருளாதார தேவைக்கேற்ப பணநிரம்பலை மாற்றியமைக்கும் மத்திய வங்கியின் செயல் முறை வெற்றியளிக்குமாயின் பொருளாதார நலன்களை அதிகரிப்பது சாத்தியமாக முடியும்.

## உசாத்துணை நூல்கள்:


1. இலங்கை மத்திய வங்கி — 1950 — 1975 நினைவு மலர் (1975)
2. பொருளதார மீளாய்வு — இலங்கை மத்தியவங்கி 1978, 1982, 1987.
3. Central Bank of Srilanka — Functions and Working (1986)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியிற் கோல்புறூக் சீர்திருத்தங்கள்:ஒரு திருப்புமுனை...?

வி. நித்தியானந்தன்

## பொருளாதாரச் சீர்திருத்தங்கள்

கோல்புறூக் இலங்கைக்கு வந்திருந்த சந்தர்ப்பத்தில் நாடு இரு தசாப்தங்களுக்கு மேலான பிரித்தானியராட்சிக் குட்பட்டிருந்த போதும் கூட அது முன்னரும் அரசினால் இறுக்கமாகக் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு பொருளாதார அமைப்பினையே கொண்டிருந்த தெனலாம். கோப்பிச் செய்கை போன்ற ஒரு சிலவற்றில் ஓரளவான தாராண்மை அவதானிக்கப்பட்டாலும் பிரதான வர்த்தகப் பொருட்கள் பலவும் அரசாங்கத்தின் கைகளிலேயே இருந்தன. கறுவா, உப்பு, சாராயம் என்பன அவற்றுட் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவற்றின் தனியுரிமையிலிருந்து கிடைத்த வருமானமே அரசாங்க நிர்வாகத்தைத் தாங்கி கொண்டிருந்தது. எனினும் கோல்புறூக் விசாரணைகளின் போது அவருக்கு முன் வைக்கப்பட்ட சாட்சியங்கள் இத்தகைய தனியுரிமைகள் பொதுவாக மக்களுக்கும், குறிப்பாக அவர்களுடைய பொருளாதார அலுவல்களுக்கும் எத்துணை தீங்கு விளைவிக்கிறதென்பதை எடுத்துக் காட்டுவதற்குதவின. அதனைக் கோல்புறூக்கும் நன்குணர்ந்து கொண்டிருந்தார். உதாரணமாக, நன்கு பேணப்பட்ட தனியுரிமைகளுள் ஒன்றாகிய, கறுவாத் தனியுரிமைபற்றி அவர் குறிப்பிடும் போது பின்வருமாறு கூறினார்.

> 'நிலவுகின்ற ஒழுங்குகளின் தீவிரம், அநீதி என்பவற்றுக்குப் புறம்பாகவும் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட பெரும் செலவுக்குப் புறம்பாகவும் தனியுரிமையிலிருந்து பெறப்பட்ட லாபம் நாட்டு மக்களுக்கும் பொதுவாக நாட்டின் வளங்களுக்கும் உண்டான தீங்குடன் எந்த வகையிலும் விகிதாசாரமானதாயிருக்கவில்லை.' (Mendis, ed. 1956 I : 93 - 94)

அரசியல் துறையை விடப் பொருளாதாரத் துறையில் முன் வைக்கப்பட்ட சீர்திருத்தங்களிற் பிரித்தானிய தாராண்மைவாதத்தின் செல்வாக்கு நன்கு பிரதிபலிப்பதைக் காணலாம். கட்டற்ற வர்த்தக இயக்கமும் தனியுரிமை அதிகாரங்களுக்கெதிரான, அது

வும் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் தனியுரிமை அதிகாரத்திற்கெதிரான, போராட்டமும் கோல்புறூக் மீது பலத்த தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன. இந்தியாவில் வர்த்தகருக்கும் ஆட்சியாளருக்குமிடையிலான வேறுபாட்டைத் தெளிவாக வரையறுத்துக் கொள்ள முற்பட்டிருக்கும் ஒரு நிலையில், அயல் நாடாகிய இலங்கையில், அரசாங்கம் ஆட்சியாளனாகவும் அதே நேரத்தில் ஒரு வர்த்தகனாகவும் விளங்குவதாக அவர் குற்றம் சாட்டினார். எனவே பொருளாதார அலுவல்களை அரசிடமிருந்து பிரித்துத் தனியாரிடம் ஒப்படைப்பதே கோல்புறூக்கின் நோக்கமாயிருந்தது.

அரசாங்கம் தான் ஈடுபட்டிருந்த எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளிலிருந்தும் வாபஸ் பெற வேண்டுமென்பதே கோல்புறூக்கின் முக்கிய சிபாரிசாயிருந்தது. பொருளாதாரத் துறை தனியார் முயற்சிக்கென வெறுமையாக விடப்பட வேண்டும். ஆகவே நடைமுறையில் இது தலையிடாக் கொள்கையைப் பிரகடனப்படுத்துவதாகவே இருந்தது. அரசாங்கம் தனது வருமானத்திற்கு நேரில் வரிமூலகங்களில் தங்கியிருக்க வேண்டுமென இவர் எடுத்துக் கூறினார். இவருடைய பரிந்துரைகளைத் தொடர்ந்து 1833 ம் ஆண்டு கறுவாத் தனியுரிமை ரத்துச் செய்யப்பட்டது. அத்துடன் கறுவாச் சட்டங்களும் செல்லுபடியாகாதெனப் பிரகடனப் படுத்தப்பட்டன. அரசாங்கம் தான் வைத்திருந்த ஏனைய தனியுரிமைகளையும் கைவிட்டது மாத்திரமன்றி தான் இதுவரை ஈடுபட்டிருந்த விவசாய மற்றும் வர்த்தக நடவடிக்கைகளிலிருந்தும் வாபஸ் வாங்கிக் கொண்டது. அரசாங்கக் கோப்பி, மிளகுத் தோட்டங்கள் விற்பனை செய்யப்பட்டு தேங்காயெண்ணெய், காரீயம் என்பவற்றின் ஏற்றுமதியையும் அது நிறுத்திக் கொண்டது. நேர் வரிகளும் விவசாயம், கைத்தொழில் என்பவற்றில் அரசாங்கத் தலையீட்டுக்கு வழிவகுக்கின்றன என்பதே கோல்புறூக் கருத்தாயிருந்தது. நில வரிகளும் ஏற்றுமதித் தீர்வைகளும் நிலங்களிலான உற்பத்திகளின் அபிவிருத்தியைத் தடுப்பதுடன் அவற்றின் விற்பனையிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அவர் கருதினார். எனினும் கோல்புறூக் அவற்றைச் சடுதியான முறையிலன்றிப் படிப்படியாகவே நீக்கமுறப்பட வேண்டுமெனப் பரிந்துரைத்தார். ஏனெனில் இவை முக்கிய அரசாங்க வருமான மார்க்கங்களாயிருந்த காரணத்தினால் திடீரென அவற்றை நிறுத்திக் கொள்வது பொது வருவாயிற் பலத்த பாதிப்பை ஏற்படுத்தி வருமான இழப்புக்கு வழி வகுக்குமென அவர் கருதினார். அதே நோக்கத்திற்காகக், கறுவாத் தனியுரிமை நீக்கப்பட்டாலும், கறுவா மீது ஏற்றுமதித் தீர்வையொன்று விதிக்கப்பட வேண்டுமெனச் சிபாரிசு செய்தார்.

இவ்வாறு பல வகைகளிலும் பொருளாதார அலுவல்களிலிருந்து அரசாங்கம் தனது பங்கினைத் துண்டித்துக் கொண்டு அவற்றைத் தனியார் பொறுப்பேற்க வேண்டுமெனத் தீர்மானித்த போது அதற்கான ஒரு சில தூண்டுதல்களையாவது வழங்க வேண்டியது அவசியமாயிருந்தது. தனியார் பொருளாதார முயற்சிகளில் ஈடுபடுவதற்குரிய மூலதன ஆக்கத்தையும் முதலீட்டையும் வழங்கும் வகையில் 'வைப்புக்களின் வங்கி' ஒன்று நிறுவப்பட வேண்டுமெனச் சிபாரிசு செய்தார். வங்கியில் இடப்படும் வைப்புக்கள் வருடத்திற்கு ஐந்து சத வீத வட்டியைப் பெறும். வங்கியிலிருந்து மிதமான விகிதங்களில் விவசாய முயற்சிகளில் ஈடுபடுவோருக்கு முற்பணங்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் அதன் மூலம் வட்டிக்குப் பணம் கொடுப்போரின் சுரண்டலிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படுவார்களென்றும் கோல்புறூக் எடுத்துக் கூறினார்.

கோல்புறூக் எவ்வகையிலும் திட்டமிட்ட குடியேற்றநாட்டு வாதத்தை ஆதரித்த ஒருவரெனக் கூற முடியாவிட்டாலும் (Samaraweera 1973:86) இரு விடயங்களைப் பற்றித் தெளிவான கருத்துடைய வராயிருந்தாரெனலாம்.

1. பொருளாதாரத்தைத் தனியாருக்கெனத் திறந்து விட்டாலும் அதனை உடனடியாக இலங்கையர் பயன்படுத்துவதற்கு வாய்ப்பில்லை. ஆகவே ஐரோப்பிய இந்திய முதலாளிகளின் குடியேற்றத்தினல் தான் இலங்கைப் பொருளாதாரம் நன்மையடைய முடியும்.

2. இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதொன்ருகவே இருக்க முடியும். ஆகவே இந்த இரு எதிர்பார்க்கைகளும் இணைந்த வகையிற் பிரித்தானிய முதலாளித்துவத்துக்குதவுவதாயின் இலங்கைப் பொருளாதாரம் மேற்கத்திய முதலீடுகளின் துணையுடன் ஒரு பெருந்தோட்டப் பொருளாதாரமாக எழுச்சியடைவதே சாத்தியமான வளர்ச்சிப் படிவமாயிருந்தது. அதனை வசதிப்படுத்துவதாகவே நிலத்துடன் தொடர்புடைய அவருடைய பரிந்துரைகள் அமைந்திருந்தன.

ஐரோப்பிய, இந்திய முதலாளிகளைக் கவரக் கூடியவாறு தாராளமான நில மானியங்கள் வழங்கப்பட வேண்டுமென்று கோல்புறூக் குறிப்பிட்டார். அதனைத் தடுக்கக் கூடிய வகையில் அமைந்திருந்த மரபுரீதியான நாட்டின் நிலச் சட்டத்தைத் திருத்தித் தனியார் நிலத்தை உடைமையாக வைத்திருப்பதை ஊக்குவிக்க வேண்டும். ஆனல் நிலவியிருந்த நிலம் தொடர்பான சட்டங்கள் நிலத்தின் சமூக ரீதியான உடமையை ஊக்குவிப்பனவாகவே காணப்பட்டன இவ்வாருன சமூக உடமையை அடியோடு ஒழிப்பதாகவே கோல்புறூக்கின் பிரதான சீர்திருத்தங்களுள் ஒன்ருகிய 'ராஜகாரிய' எனப்பட்ட சேவைமானிய முறையை நீக்கி விடுவதென்பது அமைந்திருந்தது. மானிய காலத்தின் சமூக நிறுவனங்களுள் ஒன்ருகிய இது பிரித்தானியரைப் பொறுத்தவரையிலும் பெரிதும் பயனுடைய தொன்ருயிருந்தது. (விபரங்களுக்கு de Silva 1962 II : 385 – 413). முக்கியமாக நாட்டு மக்களுடனன பிரதான பொதுத் தொடர்பு மார்க்கமாக அது செயற்பட்டது. எனினும் கோல்புறூக் கொண்ட முழு முதல் நோக்கமாகிய தனியார் முயற்சியை மேம்படுத்துவதுடன் 'ராஜகாரிய' எவ்வகையிலும் ஒத்துப் போக முடியவில்லை. அரசு தனியார் முயற்சி செழித்து வளரக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதிலே அக்கறை கொள்ள வேண்டுமென இவர் கருதினர். எனவே ஹோட்டன் தேசாதிபதி தலைமையிலான இலங்கை அரசாங்கத்தின் எதிர்ப்பின் மத்தியிலும் ஏகாதிபத்திய அரசாங்கம் 1832 ம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒரு பிரகடனத்தில் நில உடைமை காரணமாகவோ அல்லது சாதி காரணமாகவோ அரசாங்கத்துக்கு யாரும் சேவையாற்ற வேண்டியதில்லையென நிர்ணயித்தது. எனினும் கண்டிய அதிகாரிகளினதும் பிக்குமாரினதும் எதிர்ப்பின் மத்தியில் அவ்விரு சாராருடன் தொடர்பு கொண்ட 'ராஜகாரிய' முறையின் நிந்தகம், தேவாலகம், விகாரகம் என்பன தொடர்ந்திருக்க அனுமதிக்கப்பட்டன. 1870ம் ஆண்டு தான் அவற்றில் உள்ளடங்கியிருந்த சேவைக்குப் பதிலாகக் கொடுப்பனவு செலுத்தும் முறை அமுலுக்கு வந்தது.

கோல் புறூக் பரிந்துரைத்த பொருளாதாரச் சீர்திருத்தங்களின் பொருளாதார முக்கியத்துவத்தைப் பல கோணங்களிலிருந்து எடுத்துரைக்க முடியும். ஒருபுறம் பிரித்தானியாவைப் பொறுத்தவரையிலும் மறுபுறம் இலங்கையின் நிலையிலிருந்தும் அவை முக்கியத்துவம் வாய்ந்தவையாயிருந்தன.

பிரித்தானியாவின் பரந்த குடியேற்ற நாட்டுச் சாம்ராச்சியத்தில் இலங்கை சின்னஞ்சிறிய தொன்ருயிருந்த போதும் பிரித்தானிய மூலதனத் திரட்டற் செய்முறையில் அதன் பங்கினை எவ்வகையிலும் குறைவாக மதிப்பிட்டு விட முடியாது. இது விடயத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் சர்வதேச பொருளாதாரத் தொடர்புகள் பற்றிய போல்பறன் கூற்றுச் சிறப்பாகக் கவனிக்கத்தக்கதாகும். (Baran 1957 : 109)

'வெளிநாட்டு வர்த்தகத்தினூடாகவே அவை தமது உற்பத்தி, நுகர்வு, மூதலீடு என்ப

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)

வற்றின் அமைப்பு வேண்டிநிற்கும் வகைப் படுத்தப்பட்ட இயற் பொருட்கள் பலவற் றையும் பெற்றுக் கொள்ள முடியும்...... புதிய மலிவான அல்லது சிறந்த மூலப் பொருட்கள், மற்றும் எரிபொருள் போன் றவற்றுக்கான மூலகங்களைத் திறந்து விடு வதன் மூலம் சமநிலைப்படுத்தப்பட்ட வெளி நாட்டு வர்த்தகம் கூடப் புதிய கைத் தொழில்கள், புதிய தொழில் நுட்பம் அல் லது புதிய உற்பத்திகளுக்கு இடமளித்து மேலதிக முதலீட்டைத் தூண்டி விடும்'

ஆகவே இவ்வகையிற் கைத்தொழிற் புரட்சி யின் உச்சக்கட்டத்தை எட்டிக் கொண்டிருந்த இங்கிலாந்தில் உருவாகியிருந்த பாரிய கைத் தொழிற் சமூகத்திற்கு மலிவான அதே நேரத்தில் வெறிச் சார்பற்ற கிளர்ச்சியூட்டும் குடிபானங்கள்-கோப்பி, தேநீர் போன்றவை அவசியமாயிருந்தன (Rajaratnam 1961:170) அயன மண்டலத்தில் இவை உற்பத்தி செய் யப்பட வேண்டியவிடத்து இவற்றைப் போதி யளவு நிரம்பல் செய்யக்கூடிய குடியேற்றங் கள் பிரித்தானியாவுக்கு அவசியமாயிருந்தன இலங்கை இது விடயத்திற் பயனுடைய ஒரு குடியேற்ற நாடாக மாறுவதை உண்மையில் கோல்புறூக் சீர்திருத்தங்களே உத்தரவாதப் படுத்தியிருந்தன. எனவே பறன் குறிப்பிடு வது போல, மேலதிக முதலீட்டைத் தூண்டி முதலாளித்துவத்தை விரைவுபடுத்துவதில் இலங்கையின் இயற் பொருட்களுக்கும் ஒரு முக்கிய பங்கிருந்தது. முதலிற் கோப்பியும் அதனைத் தொடர்ந்து தேயிலையும், சற்றுப் பிந்திய நிலையில் றப்பரும் இது தொடர்பா கத் தமது பங்களிப்பைச் செலுத்தியிருந்தன. எனவே இலங்கையில் விவசாயம் தான் முக் கிய இடம் பெற வேண்டுமென்று கருதிய போது பிரித்தானிய முதலாளித்துவத்துக்கான இலங்கையின் பயன்பாட்டை அவர் சரியாகவே எடை போட்டிருந்தாரெனலாம்.

ஆனால் இந்தச் செய்முறையின் போது, லெனின் குறிப்பிடுவது போல (Lenin 1960 : 761), குடியேற்ற நாடுகளிலும் முத லாளித்துவ அபிவிருத்தி விரைவு படுத்தப்படு கின்றது. கோல்புறூக் சீர்திருத்தங்கள் இலங் கையைப் பொறுத்தவரை பெரும் முக்கியத் துவம் இலங்கையின் இடம் பெற்ற முதலா ளித்துவ வளர்ச்சியினூடாகவே ஏற்படுவதா யிருந்தது. இந்த வளர்ச்சி எவ்வளவு தூரம் இலங்கைக்கு நன்மை பயப்பதாயிருந்ததென் பதே சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை நிர்ணயிப்பதாயிருந்தது.

கோல்புறூக் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட முதலாளித்துவ அபி விருத்தி லெனின் கூற்றிலிருந்து நாம் அநு மானிப்பது போல பிரித்தானிய முதலாளித் துவத்தைத் தொடர்ந்து வருவதொன்றாக வோ அல்லது அதன் பக்க வளர்ச்சி என்ற முறையிலோ இடம் பெறவில்லையென்பது முக் கியமாகக் கவனிக்கத்தக்கது- அதற்குப் பதி லாக அது கோல்புறூக்கினால் திட்டமிட்ட வகையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அவர் வெளியிட்ட பொருளாதாரச் சிபாரிசு களை எடுத்து நோக்குமிடத்துத் தனி யாண்மை வாதத்தை இலங்கையில் அபி விருத்தி செய்வதே அவருடைய முதன்மை யான நோக்கமென்பது நன்கு புலனாகும். அது மாத்திரமன்றி அது எடுக்கக்கூடிய வடி வம் பற்றியும் அவர் தெளிவான கருத்துக் களைக் கொண்டிருந்தார் எனலாம். இலங்கை யின் முதலாளித்துவம் அந்நிய முதலாளி களினால், அதாவது ஐரோப்பிய, இந்திய முதலாளிகளினால் தான் வளர்க்கப்படலா மென்பதுடன் அது விவசாயத்தை அடிப்படை யாகக் கொண்டதொன்றாகவே இருக்க வேண் டுமென்றும் அவர் கருதியிருந்தார். அர சாங்கம் பொருளாதார அலுவல்களில் ஊக் கத்துடன் பங்கு பற்றக் கூடாது. ஆனால் தனி யார் முயற்சிக்குச் சாதகமான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதே அதன் கடமையா யிருக்க வேண்டும். உள்நாட்டு முயற்சியாள ரும் வெளிநாட்டு முதலாளிகளைப் போலவே நன்மையடைவார்களென கோல்புறூக் நம் பியபோதும், தம்முடைய தாராண்மைத் தத்துவத்தைப் பயன்படுத்தக் கூடிய வகுப் பொன்று உள்நாட்டில் வளர்ச்சியடைந்திருக்க வில்லையென்பதை அவர்முற்றாக அறிந்திருக்க வில்லை யென்பதை ஒப்புக் கொள்வது கடின

மானது. சமரவீர குறிப்பிடுவது போல (Samaraweera 1973 : 86), தலையிடாக் கொள்கையின் அடிப்படையிலமைந்த பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்ப வேண்டுமென்று கோல்புறூக் கொண்ட பரந்த நோக்கு உள்நாட்டுப் பொருளாதாரம் பற்றிய அவரது நடைமுறை நோக்கினை மறைத்துவிட்டதென்பதை ஒரு மட்டத்தில் ஏற்றுக் கொண்டாலும், உள்நாட்டு முயற்சியாளர் புதிய (தாராண்மைச்) சூழலைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடியளவிற்கு முன்னேற்றமடைந்திருக்கவில்லை யென்பதை உறுதி செய்து கொண்ட பின்னரே தாராண்மைக் கொள்கையைக் கோல்புறூக் பரிந்துரைத்தாரென வாதிடுவதும் சாத்தியமானதே. இலங்கையிலிருந்த தனியார் நன்மையடைவதற்கான வாய்ப்புக்கள் அவர்களுக்கு மரபுரீதியான பரிச்சயமுடைய உணவுப் பொருள் விவசாயத்தில் தான் உண்டென்பதைக் கோல்புறூக் முற்றாகவே மறந்திருப்பதற்கு நியாயமில்லை. உணவுப் பொருள் துறையில் அபிவிருத்தி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாயின் அரசாங்கம் அதிலிருந்து முற்றாக ஒதுங்கியிராது மட்டுப்படுத்தப்படுத்தப்பட்ட வகையிலாவது தான் தலையிடுவது அவசியமாயிருந்ததெனலாம். எனினும் கோல்புறூக் அத்தகைய ஒரு நிலைக்கு இடம் கொடுப்பதற்குத் தயாராயிருக்கவில்லை. அதற்குப் பதிலாக ஓரளவிற்காவது பொருளாதார அலுவல்களில் ஈடுபட முன்வந்த இலங்கையிலிருந்த தனியாரின் அக்கறையை உணவு விவசாயத்திலிருந்து திசை திருப்பி விடுவதே அவருடைய நோக்கமாயிருந்ததெனலாம். இந்த வகையில் நடுமட்ட நிர்வாகப் பதவிகள், பெருந்தோட்ட முயற்சிக்கான ஆதார வசதிகள் என்பன (நித்தியானந்தன் 1984 : 87 – 88) பிரித்தானியருக்குதவக் கூடிய வகையில் உள்நாட்டில் மூலதன வசதி படைத்தோரைக் கவரக்கூடியவையாகக் காணப்பட்டன. இந்தச் செய்முறையை வசதிப்படுத்துவனவாகவே கோல்புறூக் நிர்வாகம், கல்வி என்பவை தொடர்பாக முன்வைத்த சீர்திருத்தங்கள் அமைந்திருந்தன.

எனவே பொருளாதாரச் சீர்திருத்தங்களைத் தொகுத்து நோக்குமிடத்து முக்கியமாக வலியுறுத்தப்பட வேண்டியதென்னவெனில் அவருடைய தாராண்மைக் கொள்கையைப் பயன்படுத்தி இதிலிருந்து நன்மை பெறுமளவிற்கு நாடு பக்குவமடைந்திருக்கவில்லையென்பதேயாகும். இலங்கைக்கு இக்கட்டத்தில் மிக அவசியமாக வேண்டப்பட்டது ஒரு வழி நடத்தும் பொருளாதாரமேயாகும். அந்தப் பொறுப்பினை அரசாங்கம் இலகுவாகத் தட்டிக் கழிக்கக் கூடிய வகையில் அல்லது அதற்குத் துணை புரியும் வகையில் தான் கோல்புறூக் சீர்திருத்தங்கள் அமைந்திருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில் அந்நிய முதலாளிகள், குறிப்பாகப் பிரித்தானிய முதலாளிகள், நன்மையடைவதற்குக் கோல்புறூக் முன்வைத்த தாராண்மை வழி வகுத்ததென்பதிற் சந்தேகமில்லை.

## நிர்வாகச் சீர்திருத்தங்கள்:

மேற்கூறிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் ஓரளவுக்கு நீண்ட காலத்திலேயே பலன் கொடுக்கும் தன்மையின என்பதைக் கண்டு கொள்ளலாம். இவ்வகையிற் கோல்புறூக் இலங்கையின் குடியேற்ற நாட்டு நிதிகளிலான மீண்டெழும் குறைநிலைகளை ஓர் உடனடிப் பிரச்சினையாகவன்றி நீண்ட காலப் பிரச்சினையாகவே கருதி எதிர் காலத்தில் இது பிரித்தானிய அரசாங்கத்திற்குத் தலையிடி கொடுக்காத ஒரு முறையில் அதனை அணுக முற்பட்டிருந்தாரெனலாம். குறைநிலையை நீக்குவதற்கு முதலில் வருமான அதிகரிப்பை உத்தரவாதப்படுத்த வேண்டும்; அது வருமானம் உழைக்கப்படும் அடிப்படையை மாற்றினாலன்றிச் சாத்தியமாகாது என்பதே கோல்புறூக் அணுகுமுறையின் சாரமாயிருந்ததெனலாம். ஆகவே குறைநிலை பற்றிய பிரச்சினையை இந்நடவடிக்கைகள் உடனடியாகத் தீர்க்காத காரணத்தினாற் குறைநிலையிலிருந்து நிவாரணமளிக்கக் கூடிய சில உடனடிச் செயற்பாடுகள் பற்றியும் கோல்புறூக் சிந்திக்க வேண்டியதாயிருந்தது. இவை நிலவுகின்ற செலவுகளைக் குறைப்பன

வாக அல்லது கட்டுப் படுத்துவனவாகவன்றி வேறு வகையில் அமைய முடியவில்லை. நிர்வாக மட்டச் சீர்திருத்தங்கள் அதற்குரிய சிறந்த கருவியாக இயங்க முடிந்தன.

இலங்கையிலிருந்த சிவில் நிறுவன அமைப்பு, சிவில் சேவை என்ற இரண்டுமே நாட்டில் மிகைச் செலவு ஏற்படுவதற்குரிய சாதனங்களெனக் கோல்புறூக் கண்டறிந்தார். சிவில் நிறுவன அமைப்பிலிருந்த அதிகாரிகளின் உயர்ந்த எண்ணிக்கையும் அவர்களுக்கு வழங்கப்பட்ட உயர் வேதனங்களும் அதனைப் பெரிதும் விரிவுடைய தொன்றாகவும் செலவுடைய தொன்றாகவும் ஆக்கியிருந்தன. கோல்புறூக் இலங்கைக்கு வருவதற்கு முன்னதாகவே இலங்கையின் சிவில் நிறுவன அமைப்பு முறை பிரித்தானிய சாம்ராஜ்யத்திலேயே அதிக செலவுடைய தொன்றென்பதைக் குடியேற்ற நாட்டுக் காரியாலயம் கண்டறிந்திருந்தது. எனவே கோல்புறூக்கின் செலவைக் குறைக்கும் முயற்சிக்கு அது தகுந்த வாய்ப்பளிக்கக் கூடியதாயிருந்தது.

சிவில் நிறுவன அமைப்பு அரசாங்க வருமானத்தைப் பெறுவதற்கென்றே இயங்கிய போதும், நடைமுறையில், வரிசேகரிப்பதை ஏலத்தில் எடுத்துக்கொண்ட தரகர்களே அதிக வருமானம் உழைத்துக் கொண்டிருப்பதைக் கோல்புறூக் கண்டார். எனவே இது தனதுஅடிப்படை நோக்கத்தினை எவ்வகையிலும் நிறைவேற்றாது, மிகக் கூடிய செலவை ஏற்படுத்துவதொன்றாகக் காணப்பட்டது. ஆகவே கோல்புறூக் எதுவித தயக்கமுமின்றிச் சிவில் நிறுவன அமைப்பிற் பல வெட்டுக்களை மேற்கொண்டார். அவர் ஏற்கனவே அரசாங்க முறைமை, பொருளாதார அமைப்பு என்பவற்றில் அறிமுகப்படுத்த முற்பட்ட சீர்திருத்தங்கள் அதனைப் பெருமளவு சுலபப்படுத்தியிருந்தன. அரசாங்க நிர்வாகத்திலிருந்த மாகாணங்களின் எண்ணிக்கையைப் பதினாறிலிருந்து ஐந்தாகக் குறைத்தமை மாகாண நிர்வாகத்தில் வேண்டப்பட்ட பல முக்கிய பதவிகளின் எண்ணிக்கையையும் குறைப்பதற்குதவிற்று. பொருளாதாரத் துறையிலிருந்து அரசாங்கம் ஒதுங்கிக் கொண்டமை பல அதிகாரிகளின் சேவையைத் தேவையற்றதாக்கி அவர்களை விடுவிப்பதற்கும் வாய்ப்பளித்தது, இத்தகைய நடவடிக்கைகள் மூலம் சிவில் நிறுவனத்தின் செலவை வருடமொன்றுக்கு £ 341, 572 அளவிலிருந்து £ 227, 532 ஆகக் குறைக்கலாமென அவர் கருதியிருந்தார்.

சிவில் சேவையை நோக்கின், அதுவே இலங்கை அரசாங்கத்தின் பிரதான கிளையாயிருந்தது. நாட்டின் முழு நிர்வாக அமைப்புமே அதனைச் சுற்றித் தான் கட்டியெழுப்பப்பட்டிருந்தது. எனினும் அந்த முக்கியத்துவத்திற்கேற்றளவு தரத்தினை அது ஒரு போதும் அடையவில்லை. அதனை இலங்கையிற் கடமையாற்றிய தேசாதிபதிகள் சிலரே ஏற்றுக் கொண்டிருந்தனர். உதாரணமாக, 1831 – ம் ஆண்டு பதவியேற்ற வில்மற் ஹோட்டன் தேசாதிபதி அப்போது இலங்கையிலிருந்த 36 சிவில் சேவையாளரில் 14 பேர் மாத்திரமே திறமையுடையவர்களெனச் சுட்டிக் காட்டினார். அது மாத்திரமன்றிக் கோல்புறூக் குழுவினரே தமது விசாரணைகளின் போது ஒருவரை மாத்திரமே திறமை, முயற்சி கருதித் தேர்ந்தெடுத்தனர். (Samaraweera 1973 : 84) ஆகவே சிவில் சேவையைச் சீர்திருத்துவதென்பது ஏற்கனவே காலதாமதமடைந்து விட்டதென்ற கருத்துத்தான் பொதுவாக நிலவியிருந்தது.

ஆனால் கோல்புறூக் சிவில் சேவையைச் சீர்திருத்தி அமைக்கும் செய்முறையைத் தனிநிலையில் மேற்கொள்ள முற்படவில்லை. அவர் அதற்கும் மேலாகச் சென்று இலங்கைச் சிவில் சேவையின் அடிப்படையை நிர்ணயித்த சில எண்ணக்கருக்களையே பிரச்சினைக்குரியதாக்கினார். அதன் மூலம் சிவில் சேவையின் தன்மை, இயல்புகள் என்பவற்றை அவருடைய சீர்திருத்தங்கள் மாற்றியமைக்கக் கூடியனவாயிருந்தன. வேதனம் வழங்கும் ஒரு நிறுவனம் என்ற வகையில் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டோரை மாத்திரம் கொண்டிருந்த

சிவில் சேவையை இலங்கை தாங்கிக்கொள்ள முடியாதென்பதே கோல்புறூக்கின் எண்ண மாயிருந்தது. அதனுல் ஆங்கிலேயருக்கு மாத்திரம் உரியதென்ற சிறப்புத் தன்மையை நீக்கி அதனைத் தேவைப்படும் தகைமையை யுடைய இலங்கையருக்கும் திறந்து விடுவதே அவருடைய நோக்கமாயிருந்தது. அதன் மூலம் ஆங்கில அதிகாரத்துக்கும் உள்நாட்டு உயர்ந்தோர் சூழாமுக்குமிடையிலான இணைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது பிரித்தானியருக்கும் இலங்கைய ருக்கு மிடையில் அது வரை நிலவியிருந்த எந்த வகையான உறவையும் விட நிரந்தர மான தொன்றெனக் கோல்புறூக் வர்ணித் தார் (Mendis, ed. 1956 I : 76). அவரு டைய அந்த அநுமானம் பெரிதும் சரியான தென்பதை இலங்கையிற் பின் தொடர்ந்து வந்த அரசியல், பொருளாதார, சமூக வளர்ச்சிகள் நிரூபித்திருந்தன. அதன் கார ணமாக நிர்வாகச் சீர்திருத்தங்களையும் மேல் வாரியாக அன்றி ஏனைய கோல்புறூக் சீர் திருத்தங்களைப் போன்றே, சிறிது நுணுகிப் பார்க்க வேண்டியது அவசியமாகின்றது.

கோல்புறூக், நிர்வாகத்தில் ஈடுபடும் பேர்வழிகளை மாற்ற விரும்பினுரேயன்றி வேறு வகையிற் பிரித்தானிய நிர்வாகத்தை மாற்ற விரும்பாமையினுற் பிரித்தானிய நடைமுறைகளை ஏற்றுக் கொள்ளும் உள் நாட்டவரே சிவில் சேவையிற் சேர்ந்து கொள் ளக் கூடியதாயிருந்தது. குறிப்பாக மொழி விடயத்தில் ஆங்கிலமே தொடர்ந்தும் நிர் வாக மொழியாக விளங்குமெனக் கூறப்பட்ட தால் ஆங்கிலம் கற்பதற்கு முன்வருவோர் மாத்திரமே சிவில் சேவை அதிகாரிகளாக வர முடிந்தது. பிரித்தானியர் தாம் இலங் கையருடைய ஒரு அல்லது அதற்கு மேற் பட்ட மொழிகளைக் கற்றுப் பின் அவர்களிட மிருந்து நமக்கு வேண்டிய சேவைகளைப் பெற் றுக் கொள்ளும் சிரமத்திற்குட்படுத்தப்படுவ தற்குப் பதிலாகச் சுதேசிகளைத் தமது மொழி யைப் படித்துத் தமக்குச் சேவையாற்றும்படி எதிர்பார்க்கும் சுலபமான ஒரு முறையைக் கோல்புறூக் தேர்ந்தெடுக்கத் தீர்மானித்தி ருந்தார். அவ்வாறு செய்வது ஆங்கிலேய ரைப் பொறுத்தவரை பெரிதும் கடினமா யிருந்ததென்று கூற முடியாது. ஏனெனில் தாம் ஏற்கனவே பெருமளவு உழைக்க முற் பட்ட லாபத்தின் ஒரு சிறு பகுதியை இலங் கையில் ஆங்கிலக் கல்வி வசதிகளை அபி விருத்தி செய்வதற்கெனத் திருப்பி விடுவதே அவர்கள் செய்ய வேண்டியதாயிருந்தது. கோல்புறூக் கல்வித் துறையில் முன்வைத்த பரிந்துரைகள் (Perera 1969 : 390 — 395) இந்த நோக்கத்தை நிறைவேற்றுவனவா கவே காணப்பட்டன.

அவருடைய கல்வி தொடர்பான சீர்திருத் தங்களைப் பொறுத்தவரை, ஏனைய நோக்கங் களுடன், கீழைத்தேயக் கல்வி பற்றி ஆங் கிலேயர் பொதுவாகக் கொண்டிருந்த கருத் தும் கோல்புறூக்கைச் செல்வாக்கினுக்குட் படுத்தியிருந்ததெனலாம். கீழைத் தேசக் கல்வி எந்த வகையான பெறுமதியுமற்ற தெனவும் ஆங்கில அறிவைப் பெறுவதன் மூலம் தான் இந்தப் பிராந்திய மக்கள் அறி வுத்திறன், ஒழுக்கமுறை என்பனவற்றில் முன்னேற முடியுமெனவும் ஆங்கிலேய ரிடையே பொதுவான ஓர் அபிப்பிராயம் நில வியிருந்தது. அதன் காரணமாகவே இலங் கையில் மாத்திரமன்றி இந்தியாவிலும் அது அறிமுகப்படுத்தப்பட்டது. அவற்றிற்கு மேலாக, மென்டிஸ் குறிப்பிடுவது போல, இலங்கை மானிய நிலையிலிருந்து வணிக சமூகமொன்ருக எழுச்சியடைவதாயின் ஆங்கில அறிவு அதற்கு அத்தியாவசியமான தென்பது கோல்புறூக் குழுவினரின் நம்பிக்கை யாக இருந் திருக்க முடியும் (Mendis 1945 : 41). ஆகவே இத்தகைய பல்வேறு எண்ணங்க ளாலும் தூண்டப்பட்ட கோல்புறூக் சுய மொழி பாடசாலைகளைக் கைவிட்டு ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவும்படி சிபாரிசு செய்தார். இந்தப் பாடசாலைகளை முகாமை செய்யும் பொறுப்பு ஆங்கில நாட்டுத் திருச்சபை (அங் கிலிக்கன்) மதகுருமார், அரசாங்க அதிகாரி கள் என்பாரைக் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனக் கூறப் பட்டது.

கல்வி தொடர்பான கோல்புறூக் பரிந்துரைகளை அந்தளவில் வைத்துக் கொண்டு பார்க்குமிடத்து அவை இரு வகையான கண்டனங்களுக்குள்ளாகின்றன எனலாம். ஒரு புறம், கீழைத்தேசக் கல்வி பற்றியும் சுய மொழிக் கல்வி பற்றியும் கோல்புறூக் கொண்ட கருத்துக்கள் தவறானவையென்பதை நிறுவதற்கு இன்று அதிகம் சிரமப்பட வேண்டியதில்லை. மறுபுறம், கிறித்தவரால்லாதோரைப் பெரும்பான்மையாகக் கொண்டதொரு நாட்டில் கிறிஸ்தவ மதகுருமாரிடம் கல்விக்கான பொறுப்பை ஒப்படைத்தமையும் பொருத்தமற்றதொரு நடவடிக்கையாகவே விளங்கியிருந்தது. எனினும் இங்கு கூட இங்கிலாந்திற் கல்விக்கான பொறுப்பு இன்னமும் தேவலாயங்களிடம் விடப்பட்டிருந்த நிலையில் இலங்கையில் அதனை விடச் சிறந்ததொரு முறையைக் கோல்புறூக் சிபாரிசு செய்வாரென எதிர்பார்க்க முடியவில்லை. தவிரவும் அவ்வாறு அவர் எண்ணியிருந்தாற் கூட, அப்போதைய இலங்கையின் பின்னணியில் வேறு தரகுடைய நிறுவனமெதனையும் அடையாளம் காண்பதும் அத்துணை சுலபமாயிருந்திராது. எனினும் இலங்கையின் நீண்ட கால அபிவிருத்தி நோக்கிற் கோல்புறூக் கல்விச் சீர்திருத்தங்கள் இத்தகைய உடனடிக் குறைபாடுகளிலிருந்து நீங்கிய வேறு பல பாரிய தாக்கங்களை நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல் மட்டங்களில் ஏற்படுத்தக் கூடியதாயிருந்தது.

ஆங்கிலக் கல்வியை இலங்கையில் அறிமுகப்படுத்தியமை மூலம் கீழ் நடு மட்டங்களிற் பிரித்தானியருக்குப் பதிலாக ஏற்கனவே இலங்கையரைப் பயன்படுத்துவதற்கிருந்த வசதிகளை விரிவுபடுத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. (Roberts 1973 : 271) அதே நேரத்தில் ஐரோப்பியர் மேற்பார்வை தொடர்பான கடமைகளை மாத்திரம் தம்முடன் தேக்கி வைத்துக் கொள்ளக் கூடியதாயிருந்தது, எனினும் நாளடைவிற் சிவில் சேவைப் பதவிகளுக்குக் கூட இலங்கையரைப் பயன்படுத்த வேண்டுமென்பதே நோக்கமாயிருந்தது. அரசாங்க சேவை எல்லா வர்க்கங்களைச் சேர்ந்தவர்களுக்கும் அவர்களுடைய தகைமைகளுக்கேற்பத் திறந்து விடப்பட வேண்டுமென்றும் சிவில் சேவையின் தனித்துவத் தத்துவம் தளர்த்தப்பட்டுக் கல்வியின் வழி சுதேசிகளும் உயர் பதவிகளை அடைவதற்கு வழி வகுக்கப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டது. (Perera 1969 : 389). கோல்புறூக் ஒரு தாராண்மைவாதி என்ற வகையில், துணிவுள்ள முறையிற் சிபாரிசுகளை முன்வைத்து, ஐரோப்பியருக்கும் சுதேசிகளுக்குமிடையிலான வேறுபாட்டை இல்லாமலாக்கி இலங்கை நிர்வாகத்தில் இலங்கையரை ஈடுபடுத்த முன்வந்திருந்தாரெனக் கூறலாம். ஆனால் எத்தகைய இலங்கையர் இவ்வாறு பங்கு பற்ற முன்வந்திருந்தனரென்பதுதான் இலங்கையின் பொருளாதார சமூக அபிவிருத்தியில் முக்கியமாயிருந்தது. உயர்வர்க்கத்தினரும் மத்திய வர்க்கத்தினரும் ஆங்கிலக் கல்வியைப் பெற்று இந்தத் தரத்தினை அடைய முடிந்த போது இலங்கைக்கும் பிரித்தானியாவுக்குமிடையே நிரந்தர உறவை ஏற்படுத்தி வைக்குமென்பதான் கோல்புறூக்கைப் பொறுத்தவரை உள்ளூற முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததெனலாம் (mendis , ed. 1956 I: 76). ஆங்கிலம் கற்றுச் சிவில் சேவைப் பதவிகளைப் பெற்றோர் உயர் குழாம் என்ற சமுதாயப் பிரிவினையடைந்து வர்க்கவேறுபாடொன்றின் வழி வருமானப் பரம்பலிற் பலத்த தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியதாயிருந்தது. இலங்கையில் உயர் குழாம் உருவாக்கத்தை விரிவாக ஆராய்ந்திருக்கும் றொபேட்ஸ் (Roberts 1973: 263 – 284; 1977 : xxix– ccxxii; 1979: 153 – 214) புதிய தொழில் முயற்சிகளில் முதலிடுவதற்கான வாய்ப்புக்கள், ஆங்கிலம் மூலம் அடையப்படும் கல்வித் தகைமைகள் என்ற இரண்டையும் அதற்கான முக்கிய சாதனங்களாகக் குறிப்பிடுகின்றார். இவையிரண்டும் ஒன்றுடனொன்று இணைந்த வகையில் எவ்வாறு செயற்பட்டனவென்பதை அவர் பின்வருமாறு விளக்குகின்றார் (Roberts, 1973: 265)

'முன்னோடி முயற்சியாளர் கஷ்டப்பட்டு

உழைத்த செல்வம் தமது மக்களைச் சிறந்த பாடசாலைகளிற் கற்பிப்பதற்கும் கல்விக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பவும் அத்துடன் உயர் மட்டங்களில் தொழில்சார் பயிற்சி கொடுக்கவும் வசதிசெய்வதாயிற்று. இரண்டாவது, மூன்றாவது தலைமுறைகள் கல்வியையும் தமது சமூகத் தொடர்புகளையும் உயர்குழாம் அந்தஸ்தை உறுதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தின.

ஆங்கிலக் கல்வி, அதனூற் கிடைத்த பதவிகள் வாழ்க்கைத் தொழில்கள் என்பவற்றை கொண்டு சிறந்த சீதனம் பெற்று மணம் முடிப்பதன் மூலம் செல்வப் பெருக்கம் வருமான வேறுபாடு என்பவற்றை மேலும் முடுக்கிவிடக் கூடியதாயிருந்தது (Roberts 1973: 273 - 274).

ஆகவே இலங்கையில் வர்க்க வேறுபாடு என்பது வெறுமனே பொருள் முதல் சார்ந்ததொன்றாக அல்லாமல் ஆங்கில மொழி சார்ந்த தொன்றாக வளர்ச்சியடைவதைக் கோல்புறூக் சீர்திருத்தங்கள் பெரிதும் தூண்டிவிட்டிருந்தன. ஆங்கில மொழி அறிவுடையோர் செல்வமுடையவரென்ற காரணத்தினு மாத்திரமன்றி அந்த மொழியைத் தெரிந்து கொண்டவரென்ற காரணத்தினாலும் நாட்டின் ஏனைய வர்க்கங்களிலிருந்து வேறுபட்டு நிற்கலாயினர். இது நவ - குடியேற்றநாட்டுவாத வளர்ச்சியில் ஒரு பிரதான பங்கு வகிப்பதாயிருந்தது (Amin 1976: 380). உள்ளத்தின் குடியேற்ற நாட்டுவாதம் என்பதை வளர்ப்பதற்குதவி ஏனைய குடியேற்ற நாட்டுவாதத் தாக்கங்கள் அகற்றப்பட்ட நிலையிலும் அதனை இலகுவாக அகற்ற முடியாத ஒரு நிலையை இலங்கையில் ஏற்படுத்தியிருந்தது.

நிர்வாக மட்டத்திலான சீர்திருத்தங்களைத் தமது பொருளாதாரப் பரிந்துரைகளுடன் கொண்டு வந்து இணைத்துச் சீர்திருத்தங்களில் ஓர் ஒருமைப்பாட்டையும் சீரான தன்மையையும் ஏற்படுத்துவதற்குக் கோல்புறூக் தம்மையறியாமலே உதவியிருந்தாரெனலாம். தமது நிர்வாக மட்டச் சிபாரிசுகள் உருவாக்கும் புதிய அரசாங்க முறைமையின் கீழ்ச் சிவில் சேவை அதிகாரிகளின் கடமைகளும் வெகுவாகக் குறைந்து விடுமென்றே அவர் எதிர்பார்த்தார். எனவே அதற்கேற்ப அவர்களுடைய வேதனங்களைக் குறைக்க வேண்டுமென எடுத்துக் கூறியது மூலம் மீண்டெழும் குறைநிலைகளைக் கட்டுப்படுத்தும் தமது உடனடி நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவர் முயன்றிருந்தார். ஆனால் அதன் மூலம் அதிகாரிகள் மத்தியில் உருவாகக் கூடிய அதிருப்திகளைத் தவிர்க்கும் வகையில் நில மானியங்கள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற யோசனையைக் கோல்புறூக் முன்வைத்தார். இது நிதி வடிவில் அதிகாரிகளுக்கு ஏற்படக் கூடிய நெருக்கடிகளிலிருந்து நிவாரணமளிக்கும் அதே நேரத்தில் தாம் உருவாக்க முனைந்திருக்கும் புதிய முதலாளி வர்க்கத்தின் முன்னோடிகளாகவும் அவர்களே விளங்குவரென்பதைக் கோல்புறூக் முற்றாக அறிந்திருக்கவில்லையென்றும் கூறிவிட முடியாது. பெருந்தோட்ட விவசாய அபிவிருத்தியின் தொடர் நிலையிற் கோப்பிச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்ட போது இவ்வாறு நிலம் பெற்ற சிவில் சேவை அதிகாரிகளே தோட்டங்களைத் திறப்பதில் முன்னணியில நின்றனர் (Vanden Driesen 1953 : 45). இலங்கையின் புதிய முதலாளி வர்க்கம அவர்களிடமிருந்து ஊற்றெடுத்து வளர்ந்து செல்லலாயிற்று.

## மதிப்பீடு:

கோல்புறூக் சீர்திருத்தங்களை, ஒரு முழு நிலையில், மதிப்பீடு செய்ய முனையும்போது, லக்ஷ்மன் பெரேரா குறிப்பிடுவது போல, 'அவர் எழுதாதவை அவர் எழுதியவற்றை விடக் கூடியளவு முக்கியத்துவம் வாய்ந்தவையெனலாம்'. (Perera 1969 : 388 - 389) அதற்குரிய முக்கிய காரணமென்னவெனில் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து இலங்கையில் இடம் பெற்ற அரசியல், பொருளாதார, சமூக வளர்ச்சிகளின் பின்னணியிலேயே சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை நிர்ண

யிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றமை யாகும். ஆனால் அவ்வாறு செய்யும் போது மென்டிஸ், கோல்புறூக் சீர்திருத்தங்களைப் பதிப்பித்து வெளியிட்ட தமது நூலில் (Mendis, ed. 1956 I & II), இழைத்த தவறு என்று கே. எம். டீ. சில்வா சுட்டிக் காட்டும் (Se Silva, 1959 : 247) நிலை ஏற் படுவதற்கான அபாயம் உண்டு. அதாவது கோல்புறூக் குழுவினரை மிக முக்கிய சீர் திருத்த வாதிகளாகக் கொண்டு 1833 க்குப் பின்பு இடம் பெற்ற எல்லாவற்றுக்கும் அவர் களே பொறுப்பு என்றவகையில் முக்கியத்து வத்தைப் பெரிதுபடுத்திக் காட்டுவது. ஆகவே கோல்புறூக் சீர்திருத்தங்களின் மதிப்பீடு என்பது அத்துணை சுலபமானதல்ல வென்பது இதிலிருந்து தெளிவாகும். கோல் புறூக் கருதியிருந்த உண்மையான நோக்கங் கள் யாவை, அவருடைய பரிந்துரைகள் நடைமுறையில் எவ்வாறு அமுலாக்கப்பட் டன என்ற இரண்டையும் தெளிவாக வேறு படுத்துவதன் மூலம் தான் சீர்திருத்தங்க ளின் முக்கியத்துவத்தைச் சரியான முறை யில் எடைபோட முடியும்.

கோல்புறூக் குழுவினர் இலங்கைக்குத் தரு விக்கப்பட்டமைக்கான நோக்கம் நாடு எதிர் நோக்கும் பொருளாதார மட்ட நெருக்கடியே யாயினும் குழுவினர் தமது பொறுப்பை அத்தகையதொரு குறுகிய நோக்கிற் பார்க் காது மிகப் பரந்த ஒரு கண்ணோட்டத்திலே யே பிரச்சினையை அணுகியிருந்தமை சீர் திருத்தங்களுக்கு மிகச் சாதகமான ஓர் அடிப் படையைக் கொடுத்திருந்தமை குறிப்பிடத் தக்கது. இந்த உறுதியான அடிப்படைதான் சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தைப் பல ரும் பெரிதுபடுத்துவதற்கும் காரணமாய மைந்ததெனலாம். அவ்வகையில் மென்டிஸ் அணுகுமுறை நியாயப்படுத்தக் கூடியதொன் றேயாகும். அவரே குறிப்பிடுவது போல, நாட்டு மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு தான் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. (Mendis, 1945 : 42) எனினும் அமுலாக்க மட்டத்தில் இரு முக்கிய குறைபாடுகள் தோன்றுவதற்கு இடம் ஏற்பட்டிருந்தது. முதலாவதாகக் கோல்புறூக் தமது பரிந்துரை கள் முழு நிலையில் நடைமுறைப் படுத்தப்படு வதன் மூலம் தான் தகுந்த பலன் கிடைக்கு மென எடுத்துக் கூறியிருந்த போதும் அவ் வாறு பூரண நிலையிற் சீர்திருத்தங்கள் அமு லாக்கப்படவில்லை. சீர்திருத்தங்களின் சில அம்சங்களை வேண்டிய விடத்துக் கைவிட்டுத் தான் அவை செயற்படுத்தப்பட்டிருந்தன. உதாரணமாகத் தேசாதிபதியின் அதிகாரக் குறைப்பு விடயத்திற் கோல்புறூக் கூறிய எல்லா அம்சங்களும் அமுல் நடாத்தப்பட் டிருக்கவில்லை. இரண்டாவதாகக் கோல் புறூக் பரிந்துரைகளை முன்வைத்த போதும் அவற்றை அமுலாக்கும் பொறுப்பு இலங்கை யிலிருந்த அரசாங்க அதிகாரிகளினுடையதா கவே இருந்தன. ஆனால் இலங்கை அரசாங்க அதிகாரிகள் பொதுவாகத் திறமை குறைந்த வர்களென்பது இக் கட்டுரையின் பிறிதோர் இடத்திற் சுட்டிக் காட்டப்பட்டது. குறிப்பாக இந்திய அதிகாரிகளுடன் ஒப்பிடுமிடத்து அவர் களுக்கிருந்த அறிவுத் திறமை, நிர்வாக ஆற் றல் என்பன இவர்களிடம் இருக்கவில்லை (de Silva 1959 : 246). அதனால் கோல்புறூக் கொண்ட இலட்சியம், நோக்கம் என்ப வற்றை உணர்த்து கொள்வதற்கோ அல்லது, அவ்வாறு உணர்ந்து கொண்டாலும், அதற்கேற்ப வேற்றிகரமாக அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கோ உரிய வல் லமை அவர்களுக்கு அப்பாற்பட்டதாயிருந் தது.

கோல்புறூக் சீர்திருத்தங்களின் பொருளா தார முக்கியத்துவம் என்று பார்க்குமிடத்துப் பொருளாதாரதில் தாராண்மைவாதத்தைப் புகுத்துவதற்கு அவர் எடுத்துக் கொண்ட முயற்சியும் அதில் அவர் அடைந்த வெற்றி யும் தான் முக்கியமாக முன்வைக்கப்படுகின் றன. இவ்வகையில் அவர் தலையிடாக் கொள்கை அரசொன்றிற்கான மேற்கட்டு மானத்தை இலங்கையில் அமைக்க முயன்றி ருந்தார். ஆனால் அதற்கான கீழ்க்கட்டுமான அமைப்பு இலங்கையில் நிலவியிருந்ததா என் பது தான் இது விடயத்திற் பிரச்சினைக்குரிய

தாகும். முதலாளித்துவ மேன்மை என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் தனியாண்மை வாதத்தை அவர் அறிமுகப்படுத்த முனைந்திருந்தார். சுருக்கமாகக் கூறின், பெந்தம்வாதிகள் இங்கிலாந்தில் நிறுவ முயன்ற அரசாங்க முறைமை, சமூக அமைப்பு என்பவற்றைக் கோல்புறூக் இலங்கையில் நிறுவுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டார். (de Silva 1959 : 249). ஆனால் இது விடயத்திற், கே. எம். டி. சில்வா சுட்டிக் காட்டுவது போல, பெந்தம்வாதிகளைப் பற்றி டைசி (Dicey) எடுத்துக் காட்டிய அதே குறைபாடு இலங்கைப் பின்னணியிற் கோல்புறூக் சீர்திருத்தங்கள் பற்றிக் கருத்திற் கொள்ளத்தக்கது. அதாவது பெந்தம் வாதிகளின் முக்கியமான பலவீனம் 19 – ம் நூற்றுண்டில் ஆங்கிலெயரிடையே நல்வாழ்வை மேம்படுத்திய அதே சட்டங்கள் எல்லா நேரங்களிலும் எல்லா நாட்டு மக்களினதும் நல்வாழ்வை மேம்படுத்துமென்பதாகும் (de Silva 1959 : 242). ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை பெந்தம்வாதிகள் கொண்ட லட்சியத்தை இலங்கைக்கு விரிவுபடுத்துவதிற் கோல்புறூக் பெரிதும் வெற்றியடைந்தாரென்றே கருதப்படுகின்றது. அதற்குரிய நடைமுறை ஆதாரமாகப் பெருந்தோட்ட முறைமையின் எழுச்சியும் அதனுடன் இணைந்த ஏனைய வளர்ச்சிகளும் சுட்டிக் காட்டப் படுகின்றன. ஆனால், சற்று நுணுகிப் பார்க்கின், டைசி முன்வைக்கும் அதே குறைபாடு இலங்கையின் விடயத்திலும் பெரிதும் அர்த்தம் நிறைந்ததொன்றென்பதைக் கண்டு கொள்ள முடியும்.

மானிய கால அம்சங்களைக் கொண்ட சமுதாய மொன்றில் தலையிடா அரசொன்றை நிறுவும் முயற்சி இரு கடமைகளை அரவணைத்ததொன்றெனலாம். (i) நிலவுகின்ற அமைப்பினை அழித்தல். (ii) புதிய அமைப்பொன்றினை உருவாக்குதல். கே. எம். டி. சில்வா கருத்துப்படி கோல்புறூக் குழுவினர் முதலாவது கடமையை நன்கு நிறைவேற்றியிருந்தனர். ஆனால் இரண்டாவது கடமையில் ஓர் அரைகுறை வெற்றியையே அடைந்தனர், அது கூடத் தற்செயலாக ஏற்பட்டதேயன்றி அவர்கள் எதிர்பார்த்ததொன்றல்ல (de Silva 1959 : 249 – 256).

நிலவுகின்ற அமைப்பினை அழிப்பதிற் கோல்புறூக் பெருவெற்றியடைந்த போதும் கூட இலங்கையின் சிக்கலான சமூக – பொருளாதார அமைப்பை அவர் நன்கு புரிந்து கொண்டிருக்கவில்லையென்பதுடன் அதன் பல்வேறு பகுதிகளும் தீமையன்றி எதுவித நன்மையையும் இலங்கைக்குப் பெற்றுக் கொடுக்கமாட்டா என்ற தவறான கருத்தினையும் கொண்டிருந்தார். அவருடைய நோக்கில் நிலவுகின்ற முறைமை அல்லது முறைமைகள் ஒழுங்கானதாகவோ, தர்க்க ரீதியானதாகவோ இருக்கவில்லை. அவர் சலுகை எங்கெங்கு காணப்பட்டதோ அங்கெல்லாம் அதனை எதிர்த்ததுடன் சலுகையுடன் இணைந்திருந்த தனியுரிமையையும் அழிக்க முயன்றார். அதே போலப் பாரபட்சமான நிர்வாக ஒழுங்குகளையும் அரசாங்கம் திட்டமிட்ட வகையிற் பொருளாதாரத்தில் தலையிடுவதையும் பெரிதும் கண்டித்தார். நீண்ட காலம் நிலவியிருந்த இம்முறைகளுக்கான தேவையாது, முற்றாக இல்லாவிட்டாலும், சிறிதளவாவது அவற்றை நியாயப்படுத்த முடியாதா என்பவை பற்றிக் கோல்புறூக் கருத்திலெடுத்ததாகத் தெரியவில்லை. சுருக்கமாகக் கூறின், வாணிபவாதத்தை அவர்கள் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளாது அவ்விடத்தில் தலையிடாக் கொள்கை, கட்டற்ற வர்த்தகம் என்பவற்றை அறிமுகப் படுத்தினர். அதன் வழி 1833 வரை நிலவியிருந்த பொருளாதார சமூக முறைமை ஏறக்குறைய முற்றாகவே அழிக்கப் பட்டிருந்தது.

ஆனால் அந்த இடத்தில் ஏற்கனவே இருந்ததை விடச் சிறந்ததொரு முறையை ஆக்கிக் கொடுத்தாரா என்பது தான் முக்கியமாக நோக்கப்பட வேண்டும். கோல்புறூக் வழங்கிய கட்டற்ற பொருளாதார சுதந்திரத்தை நாடு பயன்படுத்துமளவிற்குப் பக்குவமடைந்திருக்கவில்லை யென்றும் அந்நிய முதலாளிகள், அதுவும் குறிப்பாகப் பிரித்தானிய முதலாளிகள். தான் அதனால் நன்மையடைந்தார்களென்பதும் ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்

டது. அதன் விளைவாக உருவாகியதே பெருந்தோட்ட முறையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அமைப்பாகும். ஆகவே இந்தச் செய்முறையின் தாற்பரிய மென்னவெனில் அரசு பொருளாதார அலுவல்களிலிருந்து ஏறக்குறைய முற்றாகவே ஒதுங்கி அந்தப் பொறுப்பினைத் தனியார்வசம் ஒப்படைத்ததும் எங்கு மூலதனம் இருந்ததோ அங்கு தான் முயற்சிக்கான தூண்டுதலும் உருவாகியதென்பதே யாகும். அவ்வாறு மூலதனம் கிடைக்காத பொருளாதார அலுவல்கள் யாவும் பின்தங்கத் தொடங்கியிருந்தன. பெரும்பான்மை நாட்டு மக்களுக்கு மிக அண்மித்த நிலையிலிருந்த உணவுப் பொருள் விவசாயம் மூலதனப் பற்றாக் குறையை எதிர்நோக்கிய துறைகளுள் முக்கியமானதாயிருந்தது. அதனுடன் இணைந்த வகையிற் புதிய நீர்ப்பாசன வசதிகளை அமைத்துக் கொடுப்பது, ஏற்கனவே இருந்த பழையவற்றைப் புனரமைப்பது என்பவற்றுக்கும் நிதி வசதி கிடைக்கவில்லை. அரசாங்க ஆதரவு பெரிதும் வேண்டப்பட்ட இவை அரசாங்க அணுகுமுறை எதிர்க் கணியமாக இயங்கிய ஒரு நிலையில் மேற்கொண்டு முன்னேறுவதற்கு வாய்ப்பிருக்கவில்லை. ஆகவே, அதன் விளைவாகக், குடியாளர்கள் விவசாயத்துறை பின்தங்கிய நிலையிலிருக்கத் தாராள மூலதன வசதி கிடைத்த முதல் விளைவுத் துறை தொடர்ந்தும் முன்னேறிச் செல்ல நாளடைவில் இலங்கைப் பொருளாதாரம் ஓர் இரட்டை அமைப்புப் பொருளாதாரமாக மாறுவதற்கு வழி சமைக்கப்பட்டது. (Snodgrass, 1966 : 4 - 6). மறுபுறம், கல்வித்துறை பற்றிய கோல்புறூக் பரிந்துரைகள் ஆங்கிலக் கல்வி மூலம் இலங்கையர் நிர்வாக நீதித் துறைகளில் முன்னேறுவதற்கு, வாய்ப்பளித்தாலும் அது கூட எல்லார் மத்தியிலும் பரந்து செல்லாது சொத்துடையவர்களுடன் மாத்திரமே மட்டுப்படுத்தப்படுவதாயிருந்தது. அதனால் இரட்டைத் தன்மையானது பொருளாதாரத் துறையிலிருந்து சமூகத் துறைக்கும் விஸ்தரிக்கப்பட்டது. இலங்கையின் குறைவிருத்தி நிலையின் முக்கிய பண்புகளுள் ஒன்றாகக் குறிப்பிடப்படும் இரட்டைத் தன்மைக்கு, இவ்வகையிற் கோல்புறூக் சீர்திருத்தங்களே பெரிதும் காரணமெனின் மிகையாகாது.

கோல்புறூக் சீர்திருத்தங்கள் முதலாளித்துவ வளர்ச்சிக்கு இடமளித்தமையின் ஒரு வெற்றிகரமான எடுத்துக்காட்டாக இலங்கையின் கோப்பிச்செய்கை குறிப்பிடப்படுகின்றது ஆனால் இலங்கையின் கோப்பி உற்பத்தி எந்த வகையிலும் திட்டமிடப்பட்ட அபிவிருத்தியன்று. 1830 களின் ஆரம்பக் கட்டம் பல பெருந்தோட்டப் பயிர்கள் பரிசோதனை செய்யப்பட்ட ஒரு காலப்பகுதியாயிருந்தது. அவற்றுட் கோப்பிக்குப் புறம்பாகக் கரும்பு (யாழ்ப்பாணத்திற்) பருத்தி என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. ஆனால் கோப்பி என்ற ஒரு பயிரில் இலங்கை உயர் வெற்றியடைந்தமைக்கு உள்நாட்டுக் காரணிகளை விட மேற்கிந்தியக் கோப்பிச் செய்கையின் வீழ்ச்சி, பிரித்தானிய இறைக் கொள்கையிலான மாறுபாடுகளும் இறக்குமதித் தீர்வைக் குறைப்பும் என்ற வெளிநாட்டுக் காரணிகள் பெரிதும் பொறுப்பாயிருந்தன. இவை வழங்கக் கூடிய பங்களிப்புப்பற்றிக் கோல்புறூக் எதிர்பார்த்திருப்பாரெனக் கூற முடியாது. எனினும் கோப்பியை அடிப்படையாகக் கொண்ட பெருந்தோட்ட முறைமைக்கான அத்திவாரத்தைக் கோல்புறூக் சீர்திருத்தங்கள் தான் அமைத்துக் கொடுத்தன என்பதிற் சந்தேகமில்லை.

கோப்பிச் செய்கை வளர்ச்சியடையத் தொடங்கிய பின் அது நாட்டின் சகல துறைகளையும் அரவணைக்கக் கூடிய தாக்கங்களை ஏற்படுத்திக் கோல்புறூக் குழுவினர் தமது அரசியல், நிர்வாக, நீதித்துறைச் சீர்திருத்தங்களின் வழி எதிர்பார்த்த ஒருங்கிணைப்பை விடக் கூடியனவான ஒற்றுமையை நாட்டில் ஏற்படுத்தியதென்பது (de Silva 1959 254 – 255) உண்மையே எனினும் இந்த வளர்ச்சிகள் நாட்டின் ஏனைய பகுதிகளெல்லாவற்றையும் ஓரளவுக்காவது உள்ளடக்கியிருந்தாலும் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளை முற்றாக அரவணைக்கவில்லை

யென்பது பல சமயங்களில் மறக்கப்படுகின்றது. உதாரணமாக யாழ்ப்பாணத்தை நிலக்களனைக் கொண்டு போர்த்துக்கேயர், டச்சுக்காரர் காலங்களில் மட்டுப்படுத்தப்பட்ட முறையிலாவது வளரத் தொடங்கிய பொருளாதார அலுவல்களெதுவும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மேற்கொண்டு முன்னேறி அப்பிரதேசத்தின் பொருளாதார முக்கியத்துவத்தை மேம்படுத்த முடியாமற் போனமைக்கு முதலிற் கோப்பியின் துணை கொண்டும் பின்பு தேயிலை, றப்பர் என்பவற்றினூடாகவும் பெருந்தோட்டத்துறை அபரிமித வளர்ச்சியடைந்தமையே காரணமெனலாம். இந்தப் பயிர்களெல்லாம் யாழ்ப்பாணத்துக்குப் புறம்பாக இடப்படுத்தப்பட்டிருந்த அதே நேரத்தில் யாழ்ப்பாணத்தின் பிரதான பயிராகிய பனையின் உற்பத்திப் பொருள் எதுவுமே சர்வதேச மட்டத்தில் முக்கியத்துவம் பெறவோ அல்லது ஆங்கிலேயரின் கவனத்தை ஈர்க்கவோ முடியாது போயிற்று. ஆனால் மறுபுறம் கோல்புறூக் முன்வைத்த கல்வி பற்றிய பரிந்துரைகளை வாய்ப்பாகக் கொண்டு ஆங்கிலக் கல்வி மூலம் யாழ்ப்பாணத்தவர் நன்மையடைந்தனரென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் இது யாழ்ப்பாணப் பொருளாதாரத்தை வெளிநோக்கிய ஒரு (காசுக் கட்டளைப்) பொருளாதாரமாக மாற்றியமைத்ததுடன் எதிர்காலத்தில் சிங்களத் தேசியவாத மறுமலர்ச்சிக் காலத்தில் அரசியல் மட்டத்திற் பல பிரச்சினைகளையும் உருவாக்கக் கூடியதாயிருந்தது.

கோல்புறூக் சீர்திருத்தங்களின் பொது நிலை மதிப்பீட்டுப் புறம்பாக அவருடைய தனிப்பட்ட சீர்திருத்தங்களை, சில வேளைகளில், அவர் கருதியிருந்த நோக்கத்தை முறியடிப்பனவாகக் காணப்பட்டன. அவருடைய பொருளாதாரச் சீர்திருத்தங்களில், முக்கியமாக, இந்தக் குறைபாடு தோன்றுவது குறிப்பிடத்தக்கது. அரசு பொருளாதார அலுவல்களில் ஈடுபடுவதைத் தடுத்து அதனைத் தனியார் வசம் ஒப்படைப்பது கோல்புறூக் பரிந்துரைகளின் முதன்மையான நோக்கமாயிருந்தது. எனினும் ஈற்றிற் பொருளாதார அதிகாரம் பெற்ற தனியாரே அரசியல் ஆதிக்கம் பெறும் வர்க்கமாக வளர்ச்சியடைந்தனர். எனவே பொருளாதார அலுவல்களிலிருந்து அரசைப் பிரிக்கும் முயற்சி இயல்புக்கு மாறாயிருந்தது. சீர்திருத்தங்களின் பின்பு உண்டான ஒரேயொரு மாற்றம் யாதெனில் முன்பு அரசின் நேரடியான தலையீட்டுக்குப் பதிலாக இப்போது மறைமுகமான முறைகளில் தலையீடு இடம் பெற்றமையாகும். எனவே அரசியல் துறையிலான சீர்திருத்தங்கள், குறுகிய காலத்தில் இல்லாவிட்டாலும் நீண்ட காலத்தில், பொருளாதாரத் துறையின் சீர்திருத்தங்களைச் செல்லுபடியற்றதாக்கக் கூடியனவாயிருந்தன. அரசியல் விடயங்களிற் கோல்புறூக் ஏற்படுத்திய சட்டசபை காட்டிய தீவிரம் சபையிலிருந்த அங்கத்தவரின் பொருளாதார வாய்ப்புக்கள் மாறுபட்டுச் செல்லும் போக்கினாலேயே பெருமளவுக்கு நிர்ணயிக்கப்படலாயின. சுருக்கமாகக் கூறின் பிரித்தானிய முதலாளி வர்க்கத்தினர் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பலன் பெறுவதற்கான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பனவாகவே கோல்புறூக் சீர்திருத்தங்கள் விளங்கியிருந்தன. இந்நிலையிற் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் சிலவற்றை அரசு என்ற நிறுவனத்திடமிருந்து கோல்புறூக் எடுத்து விட்டாலும் பொருளாதார அலுவல்களின் மீது அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் செலுத்திய செல்வாக்கு, கட்டுப்பாடு என்பவற்றை அவரால் தடுக்க முடியவில்லை.

அதே போல, ஒரு முழு நிலை மட்டத்திற் பாரதூரமான சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்தவிடத்து அவற்றைச் சிறந்த முறையில் அமுலாக்குவதில் தான் அவற்றின் வெற்றி தங்கியிருந்தது. அமுலாக்கப் பொறுப்பிற் பெரும் பகுதி இலங்கையிலிருந்த அரசாங்க அதிகாரிகளைச் சார்ந்ததாகவே இருந்தது. ஆனால் கோல்புறூக் நிர்வாக மட்டத்தில் மேற்கொண்ட சீர்திருத்தங்கள் காரணமாக அவர்களுடைய வேதனங்கள் குறைக்கப்பட்டிருந்தன. அது மாத்திரமன்றி அவர்கள்

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)

இதுவரை அனுபவித்து வந்த சலுகைகள் பலவும் கட்டுப்படுத்தப் பட்டிருந்ததுடன் சாதாரண போக்கில் அவர்கள் பெற்றிருக்கக் கூடிய பதவி உயர்வுகள் பலவும் அப் பதவிகள் இல்லாமலாக்கப்பட்டமை மூலம் சாத்தியமற்றுப் போயின. ஆகவே அவர்களுடைய ஒத்துழைப்பு அதிகமாகத் தேவைப் பட்ட ஒரு நேரத்தில் அவர்களுடைய தூண்டுதலைக் குறைக்கக் கூடிய இத்தகைய நடவடிக்கைகள் கோல்புறூக்கின் தூரநோக்கற்ற தன்மையைப் புலப்படுத்துவதாகக் கூறலாம். ஆனால் மறுபுறம், கோல்புறூக் அவர்கள் அடையக்கூடிய அதிருப்தியை உணர்ந்து அதனை ஈடுசெய்யும் வகையிலேயே அவர்களை விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட வைப்பதற்குரிய நில மானியங்களை வழங்க முன்வந்தாரென நோக்கினோம். கோப்பிச் செய்கை, கோல்புறூக் சற்றும் எதிர்பாராத வகையில், உன்னத நிலையை நோக்கி முன்னேறியபோது அவர் ஏற்படுத்திக் கொடுத்த இந்தச் சலுகை அரசாங்க சேவையின் திறமையைக் குறைக்கும் வகையிற் செயற்பட முற்பட்டது. ஏனெனில் பெரும்பாலான அரசாங்க அதிகாரிகள் தமது அரசாங்கக் கடமைகளைப் புறக்கணித்துக் கோப்பித் தோட்டங்களிலேயே அதிகளவு நேரத்தைச் செலவிடலாயினர். ஏற்கெனவே திறமைக் குறைவு என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்த அவர்களுடைய செயற்திறமை அதனால் மேலும் பாதிக்கப் பட்டது. ஆகவே ஒருபுறம் கோல்புறூக் சீர்திருத்தங்களின் வெற்றியின் சின்னமாகக் குறிக்கப்படும் கோப்பிச் செழிப்பு, மறுபுறம், அவருடைய சீர்திருத்தங்களின் திறமையைக் குறைப்பதைக் காணலாம். ஆனால் கோப்பி உற்பத்தி தமது பரிந்துரைகளின் பின்னணியில் வெற்றியடையுமென்பது கோல்புறூக் எதிர்பார்க்காததொன்று என்பது இதிலிருந்து நிரூபணமாகின்றதெனலாம். எனினும் அரசாங்க சேவையின் திறமைக் குறைவுக்குச் சிவில் சேவை அதிகாரிகளின் வணிக, விவசாய அபிலாஷைகள் காலாகின்றன என்பது நன்கு நிறுவப்பட்ட நிலையில் அதனை வெகு விரைவாகத் தடுப்பது அவசியமாயிருந்தது. அதன் விளைவாக 1844 ம் ஆண்டு ஸ்டான்லி பிரபு மேற்கொண்ட சீர்திருத்தங்களின் அடிப்படையிற் சிவில் சேவை அதிகாரிகள் நிலம் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டாலும் அவர்கள் வணிக, விவசாய அலுவலகங்களில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டது (Warnapala 1974 : 45)

தொகுத்து நோக்கின், இலங்கையின் நவீனமயமாக்கத்திற் கோல்புறூக் சீர்திருத்தங்களுக்கு முக்கியமானதொரு பங்குண்டென்பதிற் சந்தேகமில்லை. எனினும் அவை, கே. எம். டி. சில்வா குறிப்பிடுவது போல நவீனமயவாக்கச் செய்முறையை ஆரம்பித்து வைக்கவில்லை, ஆனால் அதனைப் பெரிதும் விரைவுபடுத்துவதற்குதவின (De Silva 1959: 256). குறிப்பாக அரசியல் திட்டச் சீர்திருத்தம் என்றவகையிற் கோல்புறூக் முன்வைத்தவை அக்கால இந்தியாவோ, பிரித்தானியாவின் ஏனைய குடியேற்ற நாடுகளோ கண்டவற்றை விடப்பெரிதும் முன்னேற்றகரமானவை யென்பதுடன் நவீன இலங்கையின் அரசியற் பொருளாதார அமைப்புககு இட்டுச் செல்வனவாகவும் விளங்கின. அவ்வகையிற் கோல்புறூக் சீர்திருத்தங்கள் ஒரு திருப்பு முனையே எனபதில் எதுவித ஐயமுமில்லை.

## உசாவியவை

Amin, Samir. (1976), **Unequal Development: An Essay on the Social Formations of Peripheral Capitalism,** Monthly Review Press, New York.

Baran, Paul A. (1957), **The Political Economy of Growth,** Monthly Review Press, New York.

Dawood, Nawaz. (1980), **Tea and Poverty: Plantations and the Political Economy of Sri Lanka,** Urban Rural Mission — Christian Conference of Asia, Kowloon, Hong Kong.

de Silva, Colvin R. (1962), **Ceylon Under the British Occupation** 1795 — 1833, II, Colombo Apothecaries Co. Ltd , Colombo.

de Silva, K. M. (1959), 'The Colebrooke — Cameran Reforms', **Ceylon Journal of Historical and Social Studies**, 2, 2, July, pp. 245 — 256.

de Silva, K. M. (1981), A **History of Sri Lanka**, Oxford University Press, Oxford.

Geertz, Clifford (1971), **Agricultural Involution: The Process of Ecological Change in Indonesia**, University of California Press Los Angeles.

Lenin, V. I. (1960), 'Imperialism, the Highest Stage of Capitalism' in **SelectedWorks**, Vol. I, Foreign Languages Publishing House, Moscow. pp. 711–815.

Mendis, G. C. (1945), **Ceylon Under the British**, Colombo Apothecaries' Co. Ltd., Colombo.

Mendis, G. C. (1956), (ed.), **'The Colebrooke – Cameron Papers: Documents on British Colonial Policy in Ceylon**, Vols. I and II, Oxford University Press, Oxford.

நித்தியானந்தன், வி. (1984), 'இலங்கையில் முயற்சியாளர் வர்க்க எழுச்சியும் அதன் முதலாளித்துவ இணைக்கப் பான்மையும்', **சிந்தனை** 2, 2, ஆடி, ப.ப. 79 — 114.

Perera, Lakshman, S. (1969), 'The Colebrooke Commission and Educational Reforms', in Ministry of Education and Cultural Affairs (ed.), **Education in Ceylon: A Centenary Volume**, Colombo, pp. 387 — 397.

Rajaratnam, S. (1961), 'The Ceylon Tea Industry, 1886 — 1931', **Ceylon Journal of Historical and Social Studies**, 4, 2, July — December, pp. 169 — 202.

Roberts, Michael (1973), 'Elite Formation and Elites, 1832 — 1931' in de Silva, K. M. (ed.), **University of Ceylon History of Ceylon**, Vol. 3, University of Ceylon Press Board, Colombo, pp. 263 — 284.

Roberts, Michael (1977), Elites, Nationalism And The Nationalist Movement in British Ceylon' in Roberts, Michael (ed.), **Documents of the Ceylon National Congress And Nationalist Politics in Ceylon** 1929 — 1950, Vol. I, Department of National Archives, Colombo, pp. xxvii — ccxxii.

Roberts, Michael (1979), 'Elite Formation and Elites, 1832 — 1931' in Roberts, Michael (ed.), **Collective Identities Nationalisms And Protest in Modern Sri Lanka**, Marga Institute, Colombo, pp. 153 — 213.

Samaraweera Vijaya (1973), 'The Colebrooke - Cameron Reforms' in de Silva, K. M. (ed ), **University of Ceylon History of Ceylon**, Vol. 3, University of Ceylon Press Board, Colombo. pp. 77 — 88.

Snodgrass, Donold, R. (1966), **Ceylon : An Export Economy in Transition**, Richard D. Irvin Inc., Homewood, Illinois.

Vanden Driesen, I. H. (1953), 'The History of Coffee Culture in Ceylon (1) & (2)' **Ceylon Historical Journal**, III, 1, July, pp. 31 — 61, III, 2, October, pp. 156 — 172.

Warnapala, Wiswa W. A. (1974), **Civil Service Administration in Ceylon: A Study in Bureaucratic Adaptation**, Department of Cultural Affairs, Colombo.

# இலங்கையில் குழந்தைகள் இறப்புக்களின் போக்கு

கார்த்திகேசு. குகபாலன்

குடித்தொகைப் பண்புகளைத் தீர்மானிப்பதில் பிறப்பு, இறப்பு ஆகிய உடற் கூற்றுடன் தொடர்புடைய இயற்கை நிகழ்ச்சிகளும் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியலுடன் தொடர்புடைய இடப்பெயர்வும் முக்கியத்துவம் பெறுகின்றன. எந்த ஒரு நாட்டினது மக்களின் சுகாதார, மருத்துவ, நிலையை அந்நாட்டில் இடம் பெறும் மக்களது இறப்புக்களிலிருந்து அறிய முடியும் சுகாதார வசதிகளுடன் கூடிய ஊட்டச் சத்துள்ள உணவு, தூயகுடிநீர் வசதிகள், பல்வேறு நோய்களைக் கட்டுப்படுத்தக் கூடிய வசதிகள் ஆகியன மேற்குலக நாடுகளில் இறப்புக்களைக் கட்டுப்படுத்தக் காரணமாயமைந்துள்ளன. அதாவது சடந்த நூற்றுண்டில் 1000 பேருக்கு 35 – 40 ஆகவிருந்த இறப்புகள் தற்போது 6 – 7 ஆகக் குறையுமளவிற்கு மேற் குறித்த காரணிகளே செயற்பட்டன எனலாம். இலங்கையும் இரண்டாம் உலக யுத்தத்தை யடுத்து பத்து ஆண்டுகளில் இறப்பினை மேற்குலக நாடுகளின் எண்ணிக்கைக்குக் குறைந்துள்ளது. இதற்கு இந்நாட்டில் இடம் பெற்ற சுகாதார மருத்துவ மற்றும் இலவச உணவு, விநியோகம் மானிய அடிப்படையில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கல், கல்வி விருத்தி, சிறிய நாடாகவிருந்தமையால் நோய்களைக் கட்டுப்படுத்தக் கூடிய பண்பு காணப்பட்டமை, பொதுத் தொடர்புச் சாதனங்கள் மக்களிடையே பிரபல்யமானமை, போன்ற பல்வேறு காரணங்களைக் கூறலாம்.

பொதுவாக இறப்புகளின் வகைகளை மூன்று பெரும் பிரிவாக வகைப்படுத்திக் காண்பது பொது மரபாகவுள்ளது.

(i) பருமட்டான இறப்புகள்.
(ii) பிரசவத்தாய் இறப்புகள்.
(iii) குழந்தை இறப்புகள்.

ஆகியனவாகும். பருமட்டான இறப்பானது மொத்த இறப்புக்களைக் குறித்து நிற்கும். பிரசவத்தாய் இறப்புக்கள் பிரசவகாலத்தில் இறக்கும் தாய்மார்களைக் கருதுகின்றது. குழந்தை இறப்புக்கள் என்பது குழந்தை பிறந்து முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாட முன்னர் இறப்பினைத் தழுவுபவர்களைக் குறிக்கும். குழந்தை இறப்பு ஒரு நாட்டில் வாழும் மக்களின் சமகால சமூக பொருளாதார, கலாசார, மற்றும் மருத்துவக்காரணிகளால் தீர்மானிக்கப்படுவதுடன் எதிர்கால மக்களின் வாழ்க்கைப் பண்புகளையும் மாற்றியமைத்து விடக்கூடிய பண்பினைப் பெறுகின்றது. குழந்தை இறப்புக்கு பொறுப்பாக உள்ள காரணிகளை பொதுவாக உள்

ளார்ந்த காரணிகள் புறஞ்சார்ந்த காரணிகள் என இரு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். உள்ளார்ந்த காரணிகளாக பிறப்பில் ஊறுபாடு கருமுதலமையுடைய காரணிகளும் புறஞ்சார்ந்த காரணிகளாக சத்துணவு, மருத்துவம், குழந்தை வளர்ப்பு, பெற்ரோரின் வறுமை, குறைந்த வாழ்க்கைத்தரம், அடுத்தடுத்து குழந்தை பெற்றுக் கொள்ளல் சுகாதார வசதியற்ற வாழ்விடம், நோய்களிலிருந்து தக்க பாதுகாப்பு அளிக்கத்தவறுதல் தொப்பிள் கொடியை அறுப்பதோடு தொடர்புடைய நோய்கள், ஊட்டக்குறைவு, வயிற்ரோட்டம் போன்ற பலகாரணிகளும் குழநதை இறப்பினை ஏற்படுத்துகின்றன.

## அளவிடும் முறை-

குழந்தை இறப்புக்களை 2 வகைகளாக பிரித்து நோக்கல் மரபு.

1. குழந்தை பிறந்த முதல் மாதத்துள் ஏற்படும் இறப்பு
2. பிற்பட்ட 48 வாரத்துள் ஏற்படும் இறப்புகள்

பொதுவாக முதல் மாதத்துள் ஏற்படும் இறப்புகளுக்கு உள்ளார்ந்த காரணிகளே பெரும் பங்கு கொள்கின்றன. பிற்பட்ட கால இறப்புகளுக்கு புறஞ்சார்ந்த காரணிகள் பெருமளவில் தீர்மானிக்கின்றன பொதுவாக இவ் இறப்புக்களை பின்வருமாறு அளவிடலாம்.

(1) குழந்தை இறப்பு வீதம் (Infant Mortality Rate)

$$(1)\quad IMR = \frac{Di}{Pi} \times 1000$$

Pi = குறித்த நாட்டில் குறித்த ஆண்டில் பிறந்த உயிருள்ள குழந்தைகளின் எண்ணிக்கை.

Di = அதே நாட்டில் அவ்வாண்டில் ஒரு வயதுக்குள் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை.

இத்தகைய வாய்ப்பாட்டினடிப்படையில் தனித்தனியே ஆண்களுக்கும் பெண்களுக்கும் காணலாம்.

(2) பிறப்பைச் சாந்த இறப்பு வீதம் (Neo — Natal Mortality Rate)

$$NNMR - \frac{DI}{PI} X \ 1000$$

DI = அந்த ஆண்டில் ஒரு மாதம் கூட வாழாது இறந்து விட்ட குழந்தைக்களின் எண்ணிக்கை.

PI = முன்போலவே.

## குழந்தை இறப்புகள் 1881 - 1986

அட்டவணை I இல் இலங்கையில் குழந்தை இறப்புப் பற்றி 1881 - ம் ஆண்டிலிருந்து தகவல்கள் பெற்றுக் கொள்ள முடிகின்றது. மேற்படி இறப்புகள் 1940 கள் வரை ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்டுள்ளது.

அட்டவணை 1

## இலங்கையில் குழந்தை இறப்பு வீதம் 1881 - 1987

| காலப்பகுதி | குழந்தை இறப்பு வீதம் | காலப்பகுதி | குழந்தை இறப்பு வீதம் |
|---|---|---|---|
| 1881 — 1885 | 158 | 1941 — 1945 | 131 |
| 1886 — 1890 | 159 | 1946 — 1950 | 101 |
| 1891 — 1895 | 169 | 1951 — 1955 | 75 |
| 1896 — 1900 | 168 | 1956 — 1960 | 63 |
| 1901 1905 | 172 | 1961 — 1965 | 54 |
| 1906 — 1910 | 109 | 1966 — 1970 | 50 |
| 1911 — 1915 | 201 | 1971 — 1975 | 47 |
| 1916 — 1920 | 190 | 1976 — 1980 | 45 |
| 1921 — 1925 | 190 | 1981 — 1985 | 48 |
| 1926 — 1930 | 175 | 1986 | 43 |
| 1931 — 1935 | 183 | 1987 | 37 |
| 1936 — 1940 | 160 | மதிப்பிடப்பட்டது. | |

ஆதாரம்: Population of Sri Lanka, ESCAPE Publication 1976, Registrar General's Reports.

1950களின் பின்னர் படிப்படியாக வீழ்ச்சியடைந்து 1987ல் 1000 : 37 ஆக காணப் காணப்பட்டது. 1950ம் ஆண்டிற்கு முன் சராசரி இறப்புக்கள் அதிகமாகக் காணப் பட்டதற்கு பின்வரும் காரணிகள் செயற்பட் டிருந்தன.

(i) மருத்துவ, சுகாதார வசதிகளின் விருத்திக்குறைவு.

(ii) மலேரியா, கொலரா நோய்களின் உக்கிரம்.

iii. பெற்றோரிடையே கல்வி அறிவுக் குறைவு,

(iv) கர்ப்பமாயிருந்த தாயும் பிறந்த குழந்தையும் போசாக்குள்ள உணவு உட்கொள்வதில் உள்ள குறைபாடுகள்,

(v). குழந்தை பராமரிப்பின் தன்மைகள்.

vi. தாயானவள் குறைந்த இடைவெளியில் பல குழந்தைகளைப் பெற்றெடுக்கும் நிலை.

vii. சுகாதார வசதியற்ற குடியிருப்புகள்.

viii. பெற்றோரின் பொருளாதார நிலை.

ix. தென்னிந்தியாவிலிருந்து வருவதும் போவதுமாகவிருந்த தொழிலாளரினால் காவிக்கொண்டு வரப்பட்ட தொற்றுநோய்கள் போன்ற பல்வேறு காரணிகள் இறப்பினை அதிகப்படுத்தியிருந்தன. குறிப்பாக 1910ல் 1000: 176 ஆகவிருந்த இறப்பு 1911ல் 218 ஆகவும், 1912ல் 215 ஆகவும் அதிகரித்தது. மலேரியா நோய் உக்கிரமடைந்த காலங்களில் குழந்தை இறப்பும், பிரசவத் தாய்மாரின் இறப்பும் அதிகரித்துக் காணப்பட்டது. 1934ல் 1000 : 73 விருந்த இறப்பு 1935ல்

262 ஆகக் காணப்பட்டது. இலங்கையில் 1950ம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட நிலையினை 1984ல் சியாராலியோன் (176) கயானு (176) எதியோப்பியா (172) சோமாலியா (153) ஆகிய நாடுகளில் அவதானிக்க முடிந்தது.

1950களின் பின்னர் இயற்கை இறப்பு வீதமானது வளர்ந்த நாடுகளின் இறப்பு வீதத்தோடு ஒப்பிடுமளவிற்கு குறைவடைந்து வருவது வரவேற்கக்கூடியது. இஸ்ரேல் (14) கியூபா (16) கிறீஸ் (16) கோஸ்டோறிக்கா (19) ஆகிய வளர்முக நாடுகளின் வரிசையில் இலங்கை 1987ல் 3·8 ஆக இருப்பது எதிர்காலத்தில் மேலும் குறைவடைய வாய்ப்புண்டு. வளர்ந்த நாடுகளில் யப்பான் (6) பின்லாந்து (6) சுவீடன் (7) நெதர்லாந்து, டென்மார்க்கு, நோர்வே, சுவிற்சலாந்து (9) ஆகியன மிகக் குறைந்தளவில் குழந்தை இறப்புக்களைக் கொண்டிருக்கின்றன. எனினும் பொருளாதார ரீதியில் பலம் குறைந்த இலங்கை படிப்படியாக குழந்தைகள் இறப்பினைக் கட்டுப்படுத்தி வருவதற்கு பின்வரும் காரணிகள் வலிமைபெற்று வருவதே காரணமாகும் அவையாவன:-

i. உயிரியல் காரணிகள்.

ii. சமூக கலாசாரக் காரணிகள்.

iii. பொருளாதாரக் காரணிகள்.

iv. மருத்துவக் காரணிகள்.

## உயிரியல் காரணிகள்

பொதுவாக குழந்தை இறப்பையும் பிரசவத்தாய்மாரின் இறப்பினையும் கட்டுபபடுத்துவதில் உயிரியல் காரணிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. கர்ப்பம் தரித்த பெண்கள் வைத்திய ஆலோசனைகளையும், சத்துள்ள உணவுகளையும் உண்ணல் அவசியமாகும். இலங்கையில் ஒரு வருடத்தில் பிரசவத்தாய்மாரின் 80–90 வீதமானேர் நற்பயிற்சியுள்ள மருத்துவர்களின் ஆலோசனையை பெற்று வருகின்றனர் என மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அது மட்டுமன்றி 83 வீதமான கர்ப்பவதிகள் பிரசவவிடுதிகளிலேயே குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர். ஐக்கிய நாடுகளின் அறிக்கைப்படி வளர்முகநாடுகளின் தாய்மார்கள் முதற் பிரசவத்திலேயே அதிகளவில் இறக்கின்றனர் எனத் தெரிவிக்கின்றது. ஆனல் இலங்கையில் இவ்விறப்பு மிகக் குறைவாக விருப்பதற்கு இளவயது விவாகம் குறைவடைந்துள்ளமை தகுந்த மருத்துவ, சுகாதார மற்றும் தனிப்பட்ட பராமரிப்பும் காணப்படுவதாலேயாகும். 1984 ம் ஆண்டுக்கணிப்பீட்டின்படி சாரசரி கிராமப்பெண் 5.1 குழந்தையையும் நகரப்பெண் 4.4 குழந்தைகளையும் பிரசவிக்கின்ருள் இது 1940 களில் முறையே 8.4, 6.8 ஆகவிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியக் குடித்தொகை அறிஞர் சந்திரசேகர் இளவயது விவாகம் காரணமாக அதிகரித்த பிறப்பு பிறப்பின் போது தாயின் வயது, பிறப்பிடைவெளிக்காலம் போன்றன குழந்தை இறப்பை நிர்ணயம் செய்யும் உயிரியல் காரணிகள் எனக் கூறுகிருர். இலங்கையில் மேற் கூறப்பட்டவற்றின் சார்பான நிலைமை காரணமாக குழந்தை இறப்புகளை படிப்படியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிகின்றது.

## சமூக கலாச்சாரக் காரணிகள்

இலங்கையில் குழந்தை இறப்பினைத் தீர்மானிக்கும் காரணிகளில் சமூக கலாசார காரணிகளும் பங்கு கொள்கின்றன. இந்நாட்டில் 90 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் கல்வியறிவுடையவர்களாகவுள்ளதுடன் ஆண்களுக்கு நிகராக பெண்களும் கல்வித்தகமை கொண்டவர்களாகவிருப்பது பிறப்பின் அளவினைக் குறைத்து குழந்தை இறப்பின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடிகின்றது கடந்த 40 வருடங்களில் பெண்களின் விவாக வயது ஐந்தால் அதிகரிக்கப்பட்டமையால் உள்ளார்ந்த காரணிகள் அதிகளவிலான குழந்தை இறப்பின் தாக்கம் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் எல்லா இனத்தவர்

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)

களிடையே ஆண் குழந்தைகளின் மோகம் இருந்து வருகன்றது. எனினும் பொருளாதார காரணியுடன் சமூகக் காரணிகளும் இணைந்து இதன் முக்கியத்துவத்தை குறைத்து வருவதை அண்மைக்காலங்களில் பல்வேறு ஆய்வுகளிலிருந்து அறியமுடிகின்றது. இதனு ஆண் குழந்தை கிடைக்கும் வரை குழநதை பெறும் நிலை பெருமளவில் குறைவடைவதால் தாய்-சேய் இறப்புக்களை கட்டுப்படுத்தக் கூடியதாகவுள்ளது. அத்துடன் கல்வியறிவு, தொழில் வாய்ப்பு, சமசம்பள நடைமுறை போன்ற பல காரணிகளால் பெண்களிடையே சமூக அந்தஸ்து அதிகரித்துள்ளமை திட்டமிட்ட குடும்பத்தை அமைக்க அல்லது கணவன் மனைவியரிடையே புரிந்துணர்வு வளர்வது அண்மைக்காலங்களில் அவதானிக்க கூடியதாகவுள்ளது.

குடும்பத்திட்டமிடலினை மக்கள் விரும்பியேற்கும் நிலை கடந்த காலங்களில் அதிகரித்து வருவதனுல் பிறப்புகளைக் கணிசமான அளவில் கட்டுப்படுத்தி இறப்பினைத் தவிர்க்க முடிகின்றது. 1971 ம் ஆண்டில் 49323 பேர் குடும்பத் திட்டமிடலினை ஏற்றுக் கொண்ட நிலையில் 1986 ல் 137,307 பேர் ஏற்றுக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் நகரரக்க வளர்ச்சி, நகரப்பண்புகளையுடைய கிராமங்களின் வளர்ச்சி, சமூக நலத்துறை பாதுகாப்பு, தொடர்புச்சாதனங்களின் பரவல் மதம், கலாச்சரத்தின் இறுக்கமான பிடித் தளர்வு, சுகாதார வசதிகளுடன் கூடிய குடியிருப்புகளின் அதிகரிப்பு, போக்குவரத்து வசதிகளின் விருத்தி போன்ற பல்வேறு காரணிகள் பிறப்புகளைக் கட்டுப்படுத்துவதுடன் குழந்தை இறப்புகளையும் மட்டுப்படுத்தி வருகின்றன. மேற் கூறிய காரணிகள் இலங்கையில் சகலரிடமும் சென்றடைந்தது எனக் கூறமுடியாது. பொருளாதார வளம் மக்களிடையே அதிகரிக்கும் பட்சத்தில் மட்டுமே மேலும் சமூக கலாச்சார பண்புகளில் தாக்கத்தை ஏற்படுத்தி வளர்ந்த நாடுகளுக்கு இணையாக குழந்தை இறப்பினைக் கட்டுப்படுத்தலாம் என துணியலாம்.

## பொருளாதாரக் காரணிகள்

1950 களிலிருந்து குழந்தை இறப்புகள் படிப்படியாக குறைவடைந்து செல்வதற்கு பொருளாதாரக் காரணிகளும் கணிசமான பங்கினை வகிக்கின்றன. இக் காரணியானது இவ்விறப்பில் உள்ளார்ந்த கரரணிகளைமட்டுமல்லாது புறஞ்சார்ந்த காரணிகளையும்கட்டுப்படுத்திவிடும் வல்லமையைப் பெறுகின்றது. 1945ல் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்விமுறை, 1945ல் மேற்கொள்ளப்பட்ட மலேரியா ஒழிப்புகளான DDT தெளித்தலில் ஏற்பட்ட வெற்றி, 1947ல் இலங்கையனை கொண்ட அரசாங்க அமைப்பு, 1948ல் நாட்டின் சுதந்திரம், 1950 — 1954க் கிடையில் கொரியன் செழிப்பு, தேயிலைச் செழிப்பின் விளைவாக பெருமளவில் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி, மானிய முறையிலும், இலவசமாகவும் நுகர்வுப் பொருட்களின் விநியோகம், வரண்ட பிரதேச விருத்தி, குடிச் செறிவுள்ள பிரதேசங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இடப்பெயர்வு, மக்களிடையே வாழ்க்கைத்தர உயர்வு, உணவு முத்திரை வினியோகம், புதிய குடியிருப்புகளை இலவசமாக வழங்கும் முறையின் அறிமுகம், தொழில் வாய்ப்பின் அதிகரிப்பு, குறிப்பாக பெண்கள் தொழில் வாய்ப்பில் ஈடுபடுதல், அதிகரித்துச் செல்லும் நிலை, நாளாந்த உணவில் கலோரிப் பெறுமானம், புரதச்சத்து ஆகியவற்றின் அளவு, படிப்படியாக அதிகரித்துச் செல்லும் நிலை, போன்ற பல காரணிகள் குழந்தை இறப்பினைக் குறைத்துச் செல்லும் பொருளாதாரக் காரணிகளில் சிலவாகும் இலங்கையில் தற்போது காணப்படும் குழந்தை இறப்புகளில் 65 வீதமான பங்கு உள்ளார்ந்த காரணிகளினுலும், 35 வீதமே ஏனைய காரணிகளினுலும், நிகழ்கின்றன என மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எவ்வாறெனினும் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக இவ்விறப்பினைக் குறைக்க வேண்டுமெனில் மேலும் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையும் பட்சத்திலேயே இதனைச் சாத்தியப்பட வைக்கலாம்.

## மருத்துவக் காரணிகள்

தென் ஆசிய நாடுகளில் இலங்கையிலேயே கற்பவதிகளில் ஐந்தில் நான்கு பங்குக்கு மதிகமானோர் மருத்துவ உதவியை நாடுகின்றனர் என உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை தெரிவிக்கின்றது. 1953ல் ஆரம்பிக்கப்பட்ட குடும்பத் திட்டமிடல் சங்கத்தின் மூலம் தாய் — சேய் நலன் பிரிவுடன் சுகாதார அமைச்சினால் 1960லிருந்து படிப்படியாக விரிவுபடுத்தப்பட்ட தாய் — சேய் நலப் பிரிவுடன் குடும்பத் திட்டமிடல் பிரிவும் இணைந்து ஆலோசனைகள், செயற்கைத் தடைகளை ஏற்படுத்தல், போசாக்குள்ள உணவினை வழங்குதல் போன்ற பல நடவடிக்கைகளினால் குழந்தை இறப்பு மட்டுமல்லாது பிறப்புகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை சிறிய நாடாகவிருந்தாலும், சர்வதேச உதவிகள் பெருமளவில் சுகாதாரத்துறைக்கு கிடைத்துவருவதாலும் கிராமிய மட்டம் வரை பிரசவ விடுதிகள் அமைத்தல், கிராம ரீதியாக தாதிகள் நியமிக்கப்பட்டுள்ளமையாலும், கிராமங்களுக்கும் மருத்துவ வசதியுள்ள நகரங்களுக்குமிடையில் தூர வித்தியாசம் குறைவாகவிருப்பதாலும் இறப்புகள் குறிப்பாக குழந்தை இறப்புகள் குறைவடையக் காரணமாகவிருக்கின்றன, பெரும்பாலன குழந்தைகள் பிரசவ விடுதிகளில் பிறப்பதால் தொற்றுநோய்த் தடுப்பிற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நாட்டில் மலசல கூட வசதிகளில் ஏற்பட்ட முன்னேற்றம், நீர் விநியோகத்தில் ஏற்பட்ட விருத்தி, வீட்டுப் பிரசவம் பெருமளவில் குறைவடைந்து சென்றமை போன்றனவும் குழந்தை இறப்பினைக் கட்டுப்படுத்துவதில் மறைமுக காரணிகளாகக் கொள்ளவேண்டும்.

வளர்ந்து வரும் நாடுகளோடு ஒப்பிடும் போது இலங்கையில் குழந்தை இறப்பு அதிகமே. எனினும் சமூக, கலாசார, மருத்துவக் காரணிகள் தமது பங்கினை கணிசமான அளவிற்கு பூர்த்தி செய்துள்ளன என்றே கூறவேண்டும். ஆனால் பொருளாதாரக் காரணிகள் விருத்தியுறின் மேலும் விருத்தியுறுதிருக்கும் சமூக, கலாசார, மருத்துவ காரணிகளை வென்று குழந்தை இறப்பைக் கட்டுப்படுத்தலாம் என நம்பலாம்.

## குழந்தை இறப்பிற்கான காரணிகள்

குழந்தை இறப்புக்கள் பல்வேறு காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன. இலங்கையின் 1980 ம் ஆண்டு புள்ளிவிபரத்தின்படி 1000 : 37·7 ஆக அல்லது 15766 ஆக விருந்தது, இவற்றில் குழந்தை பிறந்த ஒரு மாதத்தில் இறப்பவர்களின் பங்கு 10131 ஆக அல்லது மொத்த இறப்பில் 64·3 வீதமாக விருந்தது. இத்தகைய இறப்புகளுக்கு வெளிக் காரணிகளிலும் பார்க்க உள் காரணிகளே பெரும் பங்கு வகிக்கின்றன. பொதுவாக கருவிலே முதிரா நிலை. பேற்றுக் காயமும் கஸ்டமான பிரசவமும், வயோதிபப் பலவீனம், தாயானவள் ஊட்டச் சத்துள்ள உணவு உட்கொள்வதில் தவறுகின்றமை, உடன் பிறப்புக் குறைபாடு போன்றவற்றால் அதிக இழப்புகள் ஏற்படுகின்றன (அட்டவணை II) இவை தவிர உட்காரணிகளின் பலவீனத்தாலும் வெளிக்காரணிகளின் தாக்கத்தினாலும் ஏனைய இறப்புகள் இடம்பெறுகின்றன.

**அட்டவணை** II.

### குழந்தை இறப்புக்குரிய காரணிகள் 1980

| காரணிகள் | எண்ணிக்கை | விகிதம் (Rate) | வீதம் (Percentage) |
|---|---|---|---|
| 1. முதிராநிலை | 3508 | 13 · 2 | 24 · 9 |
| 2. நியூமோர்ணியா | 1289 | 3 · 1 | 8 · 2 |

| | | | |
|---|---|---|---|
| 3. வலி | 1196 | 2.9 | 7·6 |
| 4. வயிற்றோட்டம் சார்ந்த நோய்கள் | 1032 | 2.6 | 6·5 |
| 5. தாயின் வயோதிபப் பலவீனம் | 822 | 2·0 | 5·2 |
| 6. பேற்றுக்காயமும் கஷ்டமான பிள்ளைப் பேறும் ஏனையனவும் | 778 | 1·9 | 4·9 |
| 7. வளிநாளியழற்சி | 447 | 1·1 | 2·8 |
| 8. உடன்பிறப்புக் குறைபாடு | 301 | 0·7 | 1·9 |
| 9. ஏற்பு | 299 | 0·7 | 1·9 |
| 10. ஊட்டக் குறைவு | 284 | 0·7 | 1·8 |
| 11. மெனிக்கிற்றிஸ் | 284 | 0·7 | 1·8 |
| 12. கிரந்தி | 256 | 0·6 | 1·6 |
| 13. காய்ச்சல் | 231 | 0·6 | 1·5 |
| 14. தொற்றுகள் | 229 | 0·6 | 1·5 |
| 15. இருமி நோய்கள் | 52 | 0·1 | 0·3 |
| 16. ஏனைய காரணிகள் | 2758 | 6·3 | 17.5 |
| மொத்தம் | 15766 | 37·7 | 100·0 |

Sources : Bulletin on vital statistics 1981.

மாவட்ட ரீதியாக குழந்தை இறப்புகளை அவதானிக்கின் மக்களின் பலவீனமான பொருளாதார சமூக நிலை காணப்படும் மாவட்டங்களிலேயே அதிகமாகவுள்ளதைக் காணலாம். வாழ்க்கைத்தரம் குறைவான இந்தியத் தமிழரிடையே இவ்விறப்புகள் அதிக மாகவுள்ளது. நுவரெலியா (1000 : 79) கண்டி (60) பதுளை (57) இரத்தினபுரி (55) மாவட்டங்களில் அதிக இறப்புகள் நிகழ்ந்த தற்கு இந்தியத் தமிழரின் குழந்தை இறப்பே காரணமாகும், கொழும்பு மாவட்டத்தில் 1000 : 50 ஆக குழந்தை இறப்பு காணப் படுவதற்கு வெளி மாவட்டங்களில் கடின நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் வருகை யாலேயே ஏற்படுகின்றது. அதேவேளை 1950ம் ஆண்டுக்கு முன்னர் அதிக இறப்பினைப் கொண்டிருந்த வரண்ட பிரதேச மாவட்டங் களாக முல்லைத்தீவு (18) பொலநறுவை (18) திருகோணமலை (19) அனுராதபுரம் (21) மொனராகலை (22) மாவடடங்கள் சராசரி இறப்பிலும் பார்க்கக் குறைவாகவிருப்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண மாவட்டம் 1000 : 18 ஆக 1980ல் காணப்பட்டாலும், 1983ம் ஆண்டின் பின்னர் அதிகமான குழந்தை இறப்புகள் மட்டுமல்லாது முதிராப் பருவத்தையுடையதும். உடன் பிறப்பு குறை பாடுகளையுடையதுமான குழந்தைகளின் பிறப் பாலும் ஏற்படுகின்றன என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். ஏனைய மாவட்டங்களில் சராசரி இறப்பு விகிதத்துக்கும் குறைவான இறப்புக்களே இடம்பெற்றுள்ளன என அறிய முடிகின்றது.

## உசாத்துணை


1. Department of Census and Statistics UNICEF; **Vital Statistics** *1967—1980* **Sri Lanka,** Vol I, Colombo *1987*.
2. Department of the Registrar - General; **Bulletin on Vital Statistics** *1981*. Colombo, *1983*.
3. Central Bank of Sri Lanka; **Review of the Economy** *1960 — 1986*. Colombo.
4. ESCAP; **Population of Sri Lanka, Country monograph Series** No. 4, United Nations, Bangkok, *1976*.
5. Cox, R. **Demography**, Cambridge University Press, London, *1959*.
6. Clark, John, I; **Population Geography and the Developing World**, Pergamon Press Ltd., London *1972*.
7. Chandraseghar S. **Infant Mortality in India** — *1901 — 1955*, George Allen; London, *1959*.
8. Meegama, S. A., "The Decline in Maternal and Infant mortality and its relation to Malaria Eradication," **Population Geography** Vol. XXIII, No. 2, United States, *1969* p *297*.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# இலங்கை மத்திய வங்கியின் அபிவிருத்திப் பணி

சி. அம்பிகாதேவி

## 1977 - ம் ஆண்டிற்குப் பின் அபிவிருத்திப் பணி

1977 - ம் ஆண்டிற்குப் பின் பதவிக்கு வந்த அரசாங்கம் தொழில்துறை முயற்சிகள் தொடர்பாகக் கடைப்பிடித்த தனியார் முதலீட்டிற்கான ஊக்குவிப்புக்கள், வெளிநோக்கிய கைத்தொழில், வர்த்தக அமைப்புக்கள் என்பவற்றின் காரணமாக, நிதித் தொழிற்பாடுகளும் இதற்கேற்ற வகையில் செயற்படவேண்டியேற்பட்டது. அதாவது வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கலில் இலகுபடுத்தல் கொள்கை (மிதக்க விடப்பட்ட நாணய மாற்று வீதத்தினைப் பின்பற்றி) பல்தேசியக் கம்பனிகளின் முதலீடுகளின் உள்வருகை, இலாபவெளிப்பாய்ச்சல் என்பவற்றை இலகுபடுத்தக் கூடிய வகையில் இலங்கையின் நிதித்துறை தொழிற்பாடுகளை வெளிநோக்கிய வங்கிச் செயற்பாடாக மாற்றியமை இக்காலப்பகுதியின் முக்கிய நாணய அபிவிருத்திப் பணியாகக் காணப்பட்டது. இன்னொரு வகையில் கூறின் பொருளாதாரத்தை தாராண்மைப் படுத்தப்பட்டதற்கிணங்க நிதித்துறையும் தாராண்மைப்படுத்தப்பட்ட (Liberalized Financial System) துறையாக மாற்றமடைந்து வருகின்றது. இவ்வகையில் A. G. Chandavarkar என்பவர் கூறியது போல நிதித்துறையின் இறுக்கமான கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு முயற்சி எடுக்கும் போதெல்லாம் அது அபிவிருத்திப் பணியாக மாற்றமடைவதை அவதானிக்கலாம்.

## வெளி நோக்கிய நிதிசார் அபிவிருத்திப் பணி

இக் காலப்பகுதிக்குரிய மத்திய வங்கியின் நிதிசார் அபிவிருத்திப் பணிகளில் சிறப்பாக வெளிநோக்கிய அபிவிருத்திப் பணிகள் என்பதை எடுத்து நோக்கும் போது, வெளிநாட்டு வர்த்தக வங்கிகளின் கிளைகளை இலங்கையில் திறந்து செயற்படுவதற்கு அனுமதி வழங்கியமையையும் மற்றும், சகல வர்த்தக வங்கிகளிலும் வெளிநாட்டு நாணயத் தொழில்களைச் செயற்படுத்துவதற்கு அனுமதி வழங்கியமையையும் குறிப்பிடலாம். வெளிநாட்டு

வங்கிகளின் ஸ்தாபிதம் 1979 – லிருந்தே தீவிரமடைந்து வருகின்றது. (சுதந்திரத்திற்குப் பின்) 1987 டிசெம்பரில் உள்ளவாறு இலங்கையில் 19 வெளிநாட்டு வங்கிகளும் அவற்றின் 4 கிளைகளுமாக மொத்தம் 23 வெளிநாட்டு வங்கிக் கிளைகள் செயற்படுகின்றன. உள்நாட்டு வங்கிகள், அவற்றினது கிளைகள், என்பவற்றுடன் கணக்கிடும்போது நாட்டின் வங்கித் துறையில் ஒரு அபிவிருத்தியைக் காட்டுகின்றன.

உதாரணமாக:

$$\text{வங்கிச்செறிவுச் சுட்டெண்} = \left( \frac{\text{மொத்த வங்கி அலுவலக எண்ணிக்கை}}{\text{மொத்த சனத்தொகை}} \times 10{,}000 \right)$$

அடிப்படையில் நோக்கும்போது 1987, டிசெம்பரில் உள்ளவாறு வெளிநாட்டு வங்கிக் கிளைகள் உட்பட இலங்கையின் சகல வர்த்தக வங்கிகளையும், நாட்டின் மொத்த சனத்தொகையுடன் ஒப்பிடுமிடத்து 0·43 ஆக உள்ளது. ஆனால் வெளிநாட்டு வங்கிகளைத் தவிர்த்து இலங்கையின் தற்போதைய 5 வர்த்தக வங்கிகளையும் (சிலான் நம்பிக்கை வங்கி நீங்கலாக) அவற்றினது கிளைகளையும் மட்டும் எடுத்து நோக்கின் வங்கிச் செறிவுச் சுட்டெண் 0·41 ஆகவே உள்ளது. இது சிறு அளவு வித்தியாசமாக மட்டும் இருந்தாலும் கூட இதனூடே வெளிப்படும் உண்மை என்னவெனில் ஒரு வங்கி கொண்டிருக்கும் சனத்தொகையின் அளவு முன்னரிலும் குறைந்துள்ளது அல்லது வங்கி வாடிக்கையாளர் உறவு நெருக்கமடைந்துள்ளது. என்பதாகும். எது எவ்வாறெனினும் இந்த வங்கிச் செறிவுச் சுட்டெண் மட்டும் மத்திய வங்கியின் நிதிசார் அபிவிருத்திப் பணியைப் புலப்படுத்தவில்லை, வெளிநாட்டு வங்கிக் கிளை திறப்புச் செய்த தன் விளைவாக இவற்றில் வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுகளை (Foreign Currency Banking Units - FCBUS) இயங்க அனுமதி வழங்கியமையின் மூலமும் இலங்கையில் ஒரு கரை கடந்த வங்கிச் சேவையை (Off – Shore Banking) ஏற்படுத்தியுள்ளது.

1979 ல் இலங்கையில் உள்ள ஒரு சில வர்த்தக வங்கிகளில்மட்டும் (FCBUS) தாபிக்கப்பட்டன. ஆயினும் 1984 - ம் ஆண்டு முடிவிற்குள் ஏறக்குறைய இலங்கையில் சகல வர்த்தக வங்கிகளுமே இவ்வாறான பிரிவினைத் தாபித்தனூடாக வெளிநாட்டு நாணயத் தொழிலில் ஈடுபட முடிந்தது. FCBU யுடன் மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்டு 10 நாடுகளின் நாணயங்களில் (பிரித்தானிய பவுண், அமெரிக்க டொலர், யப்பானிய ஜென், பிரான்சிய பிராங், சுவிஸ் பிராங், சிங்கப்பூர் டொலர், கொங்கொங் டொலர், நெதர்லண்ட் டொலர், சுவீடிஸ் குரோனர் டச் மார்க்) மட்டும் இலங்கையில் வதியாதோர் வங்கித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. பொதுவாக FCBU வுடன் வதியாதோர் மட்டுமன்றி (GCEC முதலீட்டாளர்) மத்திய வங்கியின் அனுமதி பெற்ற வதிவுடையோரும் இதில் தொடர்பு வைந்திருப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

## உள்நோக்கிய நிதிசார் அபிவிருத்திப் பணி

வெளிநோக்கிய நிதிக் கொள்கைகளின் விளைவாக ஏற்படுத்தப் பட்ட நிதிசார் அபிவிருத்திப் பணிகளில் குறிப்பிடக் கூடியது புதிய பணச்சந்தைகள், புதிய பணக் கருவிகள் என்பனவாகும். வளர்ச்சியடைந்த நாடுகளின் பணச்சந்தைகளுடன் ஒப்பிடுமிடத்து இலங்கையில் கழிவு இல்லங்கள் ஏற்பகங்கள் போன்ற முதன்மைப் பணச்சந்தைகள் இல்லையாயினும் இதே மாதிரியான தொழிற்பாட்டைச் செய்கின்ற துணைப்பணச்சந்தை அமைப்புக்களின் அம்சங்கள் 1979 ம் ஆண்டிலிருந்து தீவிரமாக வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன. இவ்வகையில் வெளிநாட்டு நாணயத் தொடர்புகளை மேற்கொள்கின்ற அந்நியச் செலாவணிச் சந்தை; வரையறுக்கப்பட்ட கரைகடந்த வங்கிச் சந்தை

என்பனவும், உள்நாட்டினைக் குறித்து வங்கிகளுக்கிடையிலான அளிப்புக் கடன் சந்தை முதலாந்தர இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தை என்பனவும் பணச்சந்தையின் முக்கிய உபசந்தைகளாகக் காணப்படுகின்றன. இச்சந்தை அமைப்புக்களை மேற்பார்வை செய்பவர் என்ற வகையிலும் சில அமைப்புக்களில் பங்காளர் என்ற வகையிலும் மத்திய வங்கியின் பணி அமைகின்றது. மேற்கூறிய வகையிலான பணச்சந்தை தொடர்பான செயற்பாடுகளுக்கு "அனுமதியும் ஆலோசனையும் மட்டும்தான் மத்திய வங்கியின் பங்களிப்பு எனக் கருதினாலும் கூட இந்த நிலைப்பாட்டிலிருந்து நோக்கும் போது இதுவும் மத்திய வங்கியின் நிதிசார் அபிவிருத்திப் பணி எனக் கொள்ள முடிகின்றது. இத்துடன் புதிய பணக்கருவி என்ற வகையில். வைப்பு சான்றிதழ்களைக் (CertifI cate of Deposits) கூறலாம்.

இக்காலப் பகுதியிலிருந்து, ஏற்கனவே உள்ள நிதியீட்ட நிறுவனங்களைப் புதுப்பிப்பதன் மூலமும், புதிதாத நிதி நிறுவனங்களைத் தாபிப்பதன் மூலமும், பொருளாதாரத் துறைக்கு வேண்டிய கடன் பாய்ச்சல்களை அதிகரித்து வந்துள்ளது, குறிப்பாக நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்களாகக் கருதப்படக் கூடிய அபிவிருத்தி வங்கிகளைக் குறித்து மத்தியவங்கி மேற்கொண்ட முயற்சிகளையே அதாவது (DFCC, SMIB) என்பவற்றின் சட்டதிருத்தங்களை மேற்கொள்வதன் மூலமும், தேசிய அபிவிருத்தி வங்கியை புதிதாகத் தாபிப்பதன் மூலமும் வங்கியின் அபிவிருத்திப்பணி மேற்கொள்ளப்படுன்றது.

DFCC - அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாப தாபனம்.

SMIB - அரச அடைமான முதலீட்டு வங்கி

இந்த வகையில் 1931 ல் தாபிக்கப்பட்ட அரச அடமான வங்கியையும், 1943 - ல் தாபிக்கப்பட்ட விவசாயக் கைத்தொழில் கடன் கூட்டுத்தாபனத்தையும் 1979 - ல் அரச அடமான முதலீட்டு வங்கி (State Mortgngc & Investment Bank - SMIB) என ஒருங்கிணைப்புச் செய்ததன் மூலம் விவசாயத் துறையினை அபிவிருத்தி செய்வதற்கும், தனிப்பட்ட வகையில் செயற்பட்டுவந்த இவ்விரு நிறுவனங்களினதும் அதிகூடிய திறமையைப் பெறுவதற்கும் வசதி ஏற்பட்டது மேலும் தற்போதைய அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்படும் வீடமைப்புத் திட்டம், பெருந்தோட்டங்களை நவீனமயமாக்கல், ஏனைய சிறு விவசாய, கைத்தொழில் நடவடிக்கைகள் திட்டங்கள் போன்ற செயற்பாடுகளுக்கு ஏற்றவகையில் (SMIB) யானது தனது கடன் வழங்கல் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது.

1979 - ல் புதிதாகத் தாபிக்கப்பட்ட அபிவிருத்தி வங்கியாக தேசிய அபிவிருத்தி வங்கி (NationaI Dvelopment Bank - N D B) என்பவற்றைக் குறிப்பிடலாம். நாட்டின் தற்போதைய நிதித்தேவையை ஒட்டி இவ்வங்கி முன்னுரிமைத் துறைகளுக்கு கடன் வழங்குவதுடன், வெளிநாட்டு நிதிநிறுவனங்களிடமிருந்து நிதியினைத் திரட்டி வழங்கும் (Syndicate Loan) செயற்பாட்டினையும் மேற்கொள்கின்றது. இவ்வாறாக அபிவிருத்தி வங்கிகள் தொடர்பான மத்திய வங்கியின் அபிவிருத்திப்பணி என்பது, அவற்றைத் தாபிப்பதற்கு உதவியது என்பது மட்டுமன்றி, வங்கியின் மீள் நிதியீட்ட வசதி இந்நிதி நிறுவனங்களூடாகவும் மேற்கொள்ளப்படுகின்றமையுமாகும்.

புதிய நிதி நிறுவனங்களின் உருவாக்கம் என்ற அம்சத்தின் அடிப்படையில் இலங்கையில் அண்மையில் தாபிக்கப்பட்டுள்ள இரு தனியார் வர்த்தக வங்கிகள் தொடர்பாக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பங்களிப்பைக் கூறமுடியும் 1970-ம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கையில் சுதேச வர்த்தக வங்கிகளாக எதுவுமே தாபிக்கப்படவில்லை. இந்நிலையில், தனியார் துறை தொழில் முயற்சிகளின் விஸ்தரிப்பின் மற்றுமோர் அம்சமாக நாட்டின் நிதித்துறை

செயற்படுமளவிற்கு தனியார் வர்த்தக வங்கி களையும், மற்றும் தனியார் நிதிக்கம்பனிக ளையும் உருவாக்குவதற்கு உதவி செய்துள் ளது.

தனியார் வர்த்தக வங்கிகள் என்ற வகை யில் 1987 - மார்ச் மாதத்தில் உருவாக்கப் பட்ட முதலீட்டுக் கடன் வங்கியையும் (Investment & Credit Bank தறபோது Sampath Bank எனப்படுகின்றது.) 1988 மார்ச் மாதத்தில் உருவாக்சப்பட்ட சிலான் நம்பிக்கை வங்கியையும் (Seylon Trust Bank) கூற முடியும். இவற்றுட் இன்று நாட்டின் வர்த்தக வங்கித் துறையில் சுதேச வர்த்தக வங்கிகள் 6 உம், வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் 19உம் செயற்பாட்டில் உள்ளன. மத்திய வங்கி இவற்றைத் தாபிப் பதற்கு அனுமதி வழங்கியது என்பதுடன், தேவைப்படும்போது அறவழிப்படுத்தலுடன் (Moral Persuation) தொடர்பாக ஆலோசனை யும், மேற்பார்வையும் செய்து வருவதன் மூலம் தனது பணியை மேற்கொண்டு வரு கின்றது.

இதுவரை மத்திய வங்கியின் பொருளா தாரம் சார்ந்த விருத்திப்பணி என்ற வகை யில் நாட்டின் முன்னுரிமைத் துறைகளுக் கான நிதியீட்டம் குறித்து மேற்கொண்டு வந்த நிறுவனரீதியான நடவடிக்கைகள், 1980 களிலிருந்து முக்கியமாக கிராமியத் துறையினைக் கவனத்தில் கொண்டதாக மாற்றமடைகின்றது. அண்மைக் காலமாக கிராமப்புறம் நோக்கிய வங்கிச் செயற்பாடு கள் அதிகரித்ததன் விளைவாக, கிராமிய மக்களை வங்கி நோக்கி செயற்பட வைப்பதற்கு ஏற்ற வகையில், பயிற்றப்பட்ட வங்கி உத்தி யோகத்தர்கள் கிராமிய வங்கிகளில் நியமிக்க வேண்டும் என்பதன் அடிப்படையில், 1981ல் மத்திய வங்கியால் 'கிராமிய வங்கியில் பயிற் சிக் கல்லூரி (The Rural Banking and Staff Training College) ஒன்றினை உருவாக் கியது. இத்துடன் கிராமியப்புற கடன் நிலைமைகளையும், தேவைகளையும் தானே நேரடியாக அறியும் பொருட்டு 1981லிருந்து பிராந்திய அலுவலகங்களையும் (Regional Offices) மாத்தறை, அனுராதபுரம், மாத் தளை ஆகிய இடங்களில் நிறுவியுள்ளது.

மேலும் கிராமிய பொருளாதாரம் தொடர் பான கொடுகடன் வழங்கலில் ஈடுபடுகின்ற நிதி நிறுவனங்கள் எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினை வழங்கப்பட்ட கடன்களை திருப்பிப் பெறப்பட முடியாமையாகும். இதனால் குறிப் பிட்ட கடன் பெறுனர் தொடர்ந்தும் கடன் பெற முடியாத நிலை காணப்படும். எனவே இவ்வாறான கிராமிய கடன் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மத்தியவங்கி கிராமிய கடன் ஆலோசனைச் சபை ஒன்றினை 1981ம் ஆண்டில் (Rural Credit Advisory Board — RCAB) தாபித்துள்ளது. இச் சபையின் முக்கியமான பணி வழங்கப்பட்ட கடன்களை மீளச் செலுத் தப்படாதிருப்பதற்கான காரணம் என்ன என்பதை அறிவதும், அவ்வாறான காரணங் கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியுமாக இருந் தால் (பயிரழிவு போன்ற) நிதி நிறுவனங் கள் மீளச் செலுத்துவதற்கான உத்தர வாதத்தை வழங்குவதுமாகும்.

உண்மையில் கிராமிய கடன் தேவைக்கான அடிப்படைக் காரணம், அதன் பொருளா தாரத் தன்மையிலிருந்தே தோன்றுகின்றது. இவ்வகையில் கிராமிய வேலையின்மையும், அதனடிப்படையிலான கிராமிய வறுமை என் பதும் ஒன்றையொன்று சார்ந்துள்ள பிரச் சினைகளாகக் கொள்ளுமிடத்து இவற்றை நீக்கமுயலும் போதே உண்மையான பொருளாதார வளர்ச்சி ஏற்படும். இவ்வாறான நோக்கத்தின் அடிப்படையில் மத்தியவங்கி 1980 களிலிருந்து பல்வேறு ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டு வந்தபோதும் அது எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை என்ப தனால் முற்று முழுதாக கிராமியப்புற நிதி யீட்ட வைப்பாக்க அம்சங்களை அடிப்படை கொண்டு பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகளைத் (Regional Rural Development Banks - RRDBs) ஒரு பரீட்சார்த்த நிலையில் 1985-ம் ஆண்டில் தாபித்தது. கடந்த ஆண்டு காலத்தின் இதன் செயற்

பாட்டினை ஏனைய கிராமப்புறம் கருதிய வங்களுடன் ஒப்பிடுமிடத்து ஓரளவு திறமையான வகையில் செயற்பட்டுவருவதாக அறியமுடிகின்றது. இந்த RRDBs ஒவ்வொரு மாவட்டந் தோறும் தலா ஒரு வங்கி என்ற அடிப்படையில் இன்று (1987-ல்) 9 மாவட்டங்களில் 9வங்கிகள் நிறுவப்பட்டு 61 கிளைகளுடன் கிராமயப்புறக்கடன் தேவைகளை நிரப்பச் செய்து வருகின்றது. RRDBs ன் செயற்பாடு, அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைக்குத் தீர்வு காணக்கூடிய நிறுவனம் என்பதுடன் கிராமிய நிதியிரட்டைத்தன்மை என்பதையும் நீக்குவதற்குரிய சிறந்த நிறுவனமாகவும் கருதப்படுகின்றது.

## விருத்திப்பணி நோக்கில் மத்தியவங்கியின் மீள்நிதியூட்ட வசதி:

1964 – ஆண்டிலேயே மீள்நிதியீட்ட வசதி கருதி (MLCF) தாபிக்கப்பட்ட போதும், அதன் செயற்பாடுகள் பொருளாதாரம் துரித அபிவிருத்தியை நோக்கிச் செல்கின்ற காலப் பகுதியாகிய 1979 லிருந்தே அதிகரித்து வருவதை அவதானிக்கலாம், இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி, வர்த்தகம் சார் நோக்கங்களுக்காக நடுத்தர, நீண்டகால கடன் தவணை அடிப்படையில் கடன் வழங்கிய வர்த்தக வங்கிகளுக்கும், ஏனைய நிதி நிறுவனங்களுக்கும் இறுதிக் கடனீவோன் என்ற வகையில் மீள் நிதியீட்ட வசதியைச் செய்கின்றது. 1977ற்குப் பின்னதாக ஏற்பட்டுள்ள பொருளாதார அபிவிருத்தி மாதிரியங்கள் குறித்து M. L. C, S: ன் நிதியீட்டம் 1979 செப்டம்பர் மாதத்திலிருந்து திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதனால் M.L.C.F. ன் நிதியீட்டத்தின் கீழ் தொகை நிதியாகவும், கால அடிப்படையிலும் முன்னுரிமைத்துறைகளுக்குஏற்றவாறு மாற்றம் ஏற்பட்டுள்ளது. மறுசீரமைக்கப்பட்ட சட்டவிதிகளின்படி MLCFன் நிதியீட்ட வசதியைப் பெறுவதற்குப் பின்வரும் நான்கு அடிப்படைகளில் பொருளாதாரத் துறைகள்விடுக்கப்பட்டு அதன்படி மீள் நிதியீட்ட வசதி செய்யப்படுகின்றது.

1. முதலாவது வகையினுள் விவசாய, மீன்பிடி அமைச்சுக்களினால் அங்கீகரிக்கப்பட்ட இவை தொடர்பான சகல அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஊக்குவிப்பு செய்வதற்கு வர்த்தக வங்கிகளால் கடன் வழங்கப்படும் பட்சத்தில், அப்போது MLCF தனது மீள் நிதியீட்ட வசதியை மேற்கொள்ளும். இதன்படி உணவுப் பயிர்ச் செய்கை, பெருந் தோட்டச் செய்கை, மீன்பிடி, பழச்செய்கை, பூச்செடி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு என்பன அடங்கும். இவை ஏற்றுமதி நோக்கிய அடிப்படையில் செய்யப்படும்போது, அவை கப்பலேற்றப்படுவதற்கு முன்னர் வரை ஏற்படும் செலவுகளாகக் கருதப்படின் அதற்காக கடன் வழங்கப்படும். இதனை கப்பலேற்றலுக்கு முன்னதாக ஏற்றுமதி மீள் நிதியீட்ட கடன் திட்டம் (Preshipment Export Credit Refinance Scheme) என்ற வகையில் மத்தியவங்கி ஏற்றுள்ளது.

2. இரண்டாவது வகையினுள் பரந்தளவில் மேற்கொள்ளப்படுகின்ற மரபு நிலையற்ற ஏற்றுமதிக் கடன்களுக்கு நிதியீட்டம் செய்வது அடங்கும் இதன் கீழ் முதலாவது வகையினுள் குறிப்பிடப்படாத, ஆனால் ஏற்றுமதிப் பன்முகப்படுத்தல் செய்முறையை உருவாக்கக்கூடிய, தயாரிக்கப்பட்ட கைத்தொழிற் பொருட்களும் (Manufactured Industrial Goods) மற்றும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களுக்கும் (Agro Based Industries) வங்கி மீள் நிதியீட்ட வசதியைச் செய்யும்.

இந்த இரண்டாவது வகையினுள் குறிப்பிடப்பட்ட மீள் நிதியீட்ட வசதியை நிரப்பு மீள்நிதியீட்ட வசதி (supplementary Refinance facility-Category-) என மத்திய வங்கி தீர்மானித்துள்ளது. மேலும், இது ஒரு ஏற்றுமதி கருதிய நிதியீட்ட வசதியாக இருந்தும் கூட மரபார்ந்த ஏற்றுமதிகளோ (தேயிலை, றபர், தெங்கு) அல்லது ஏற்றுமதி முறையாக்கல் வலயத்தினுள் அடங்குகின்ற (அல்லது GCEC) தொழில்துறைகளோ இதன் கீழ் மீள் நிதியீட்ட வசதியைப் பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

3 மூன்றாவது வகையினுள் வரிவிடுதலையைப் பெற்றுள்ள முதலீடுகளுக்கும் முதலாவது வகையினுள் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விவசாய மீன்பிடி அமைச்சுக்களின் அங்கீகாரத்தைப்பெறாத அல்லது அதற்கு அப்பாற்பட்ட விவசாய மீன்பிடி முதலீடுகளுக்கும் மீள் நிதியீட்ட வசதியைச் செய்கின்றது.

4 நான்காவது வகையினுள் வர்த்தகம் தொடர்பான முயற்சிகள் அடங்குகின்றன. அதாவது வர்த்தகத்திற்கு அத்தியாவசியமாக உதவக்கூடியதும் பொருளாதாரத்தை விருத்தி செய்யக் கூடியதுமென மத்திய வங்கியினால் கருதப்படுகின்ற வாகனக் கொள்வனவு, பண்டகசாலைகள், கட்டிடங்கள் தாபித்தல் என்பவற்றுக்கு மீள் நிதியீட்ட வசதியைச் செய்கின்றது.

மேற்கூறப்பட்ட 4 வகையினுள்ளும் முதலிரு வகையும், தனியே ஏற்றுமதியை மட்டும் நோக்காகக் கொண்டு செய்யப்பட்ட கடன்திட்டமாகும். பொதுவாக வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் கொள்கையின் ஏனைய கடன் வழங்கலுடன் ஒப்பிடத்தக்கது. ஏற்றுமதி தொடர்பான முதலீடுகள், அதனது உயர் அபாயத்தன்மை (Highley Risk) காரணமாக குறைந்தளவு கவனத்தையே பெற்றுள்ளன. எனவே இந்நிலையில் ஏற்றுமதியினைப் பன்முகப்படுத்திய தற்போதைய பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்றவகையில் சாதாரண நிதிநிறுவனங்கள் செயற்படுவதற்குத் தயக்கம் காட்டுகின்ற நிலையில் மத்தியவங்கி இவற்றுக்கு ஊக்குவிப்பு வழங்க வேண்டிய நிலையில் உள்ளது. இதனாலேயே 1979-ல் திருத்தப்பட்ட (MLCF) சட்டத்தில் ஏற்றுமதி நோக்கிய தொழில் துறைக்குக் கூடுதலான முன்னுரிமை (Category I & II) வழங்கப்பட்டது.

இந்த ஏற்றுமதி தொடர்பான மீள்நிதியீட்ட வசதியின் அளவு, (மொத்தச் செலவில் குறைந்தது 20 % தையேனும் இந் நிதியீட்டம் செய்ய வேண்டும்) கடன பெறுநரின் தன்மை, கால அளவு கடன்வகைகள் என்பவற்றை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையே தீர்மானிக்கும், எனினும் பொதுவாக ஒரு செயற்திட்டம் ஆரம்பித்து அதனது முதலாவது வருடத்திலேயே மொத்த உற்பத்தியில் 25 % திற்குக் குறைவாக ஏற்றுமதி செய்யக்கூடாது என்ற ஒரு நிபந்தனையும் காணப்படுகின்றது. இவ்வாறு பல்வேறு நிபந்தனைகளின் கீழ் மீள் கடன் வசதியைச் செய்துவந்தபோதும் மத்திய வங்கி கடன் வழங்கும் நிறுவனங்களிலும் வழங்கப்பட்ட கடனில் 70%த்திற்கு மட்டும் தான் மீள்நிதியீட்டத்தைச் செய்ய முடியும் என ஒரு வரையறையை விதித்துள்ளது.

## விவசாயத்துறைக்கான கடன் வழங்கல்கள்

மத்திய வங்கியின் மீள் நிதியீட்ட வழியின் முதன்மை நோக்கம் ஏற்றுமதிக் கடன் வழங்கலில் ஊக்குவிப்பை ஏற்படுத்துவதாக விளங்கிய போதும், அதனூடாக மறைமுகமாக பொருளாதாரத்தில் விவசாய, கைத்தொழில் உற்பத்திகளையும் ஊக்குவிப்பதாக அமைகின்றது. இவ்வாறான மறைமுக விருத்திப் பணிகள் மட்டுமன்றி நேரடியாகவும் சில உற்பத்திகள் குறித்து கடன் வழங்கலை மேற்கொள்கின்றது. விவசாயத்துறை சார்பான மத்திய வங்கியின் நேரடி விருத்திப் பணி என்பதை எடுத்து நோக்கும்போது, முக்கியமாக நெல் உற்பத்திக்கும், சந்தைப் படுத்தலுக்கும் வங்கியினால் வழங்கப்படுகின்ற கடன் குறிப்பிடக்கூடியது. பிழைப்புமட்ட விவசாயத்திற்கான உற்பத்திக் கடன் (Production Loans for Subsistance Agriculture) என்ற வகையில், குறிப்பாக நெல் உற்பத்தியில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு அவர்கள் பயிர்ச் செய்கை தொடர்பான புதிய முறைகளைக் கடைப்பிடிக்கும்போது அதற்காக வர்த்தக வங்கிகளுக்கு மீள் நிதியீட்ட வசதியைச் செய்கின்றது. இத் திட்டத்தின் ஆரம்பத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கூடாக வர்த்தக வங்கிகளால் வழங்கப்படுகின்ற நெல் உற்பத்தி தொடர்பான கடன்களுக்கு மட்டும் என

வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனல் பின்னர் நிதியீட்டத்தின் விரிவு குறித்து இத் திட்டமானது வர்த்தக வங்கிகளால் நேரடியாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற கடன்களும் மீள் நிதியீட்ட வசதியைப் பெறுவதற்கு தகுதியுடையதாகின்றன.

மீள் நிதியீட்ட வசதியில் நிறுவன ரீதியாக விரிவு ஏற்படுத்தப்பட்டது போலவே உற்பத்திகளின் அடிப்படையிலும், அதாவது இதுவரை நெல் உற்பத்திக்காக மட்டும் என்று வரையறுக்கப்பட்ட நிலைமை வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற உப உணவுப் பயிர் செய்கை குறித்து வழங்கப்படும் கடன்களுக்காகவும் நிதி நிறுவனங்கள் மீள் நிதியீட்ட வசதியைப் பெறுவதற்குத் தகுதியுடையனவாகின்றன. இவ்வாறான விவசாய உற்பத்தி தொடர்பான மீள் நிதியீட்ட வசதிகள் 9 மாதத்திற்கு வருடாந்தம் 1 1/2 % வட்டி அடிப்படையில் மேற்கொள்யப்படுகின்றன.

1973ல் ஆரம்பிக்கப்பட்ட அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ், விவசாயக் கடன்கள் தொடர்பாக மத்திய வங்கியால் அளிக்கப்பட்ட உத்தரவாதம் 1978ம் ஆண்டிலிருந்து நீக்கப்பட்டது. ஆனல், மீண்டும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைக் கவனத்திற் கொண்டு 1986ம் ஆண்டில் இத் திட்டம் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய விவசாயக் கொடுகடன் திட்டம் (New Comprehensive Rural Credit Scheme — NCRCS) என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதில் ஈடுபடுகின்ற மேலும் பல வர்த்தக வங்கிகளுக்கும் கடனுக்கான உத்தரவாதத்தை வழங்க முன்வந்தது. இன்று NCRCS திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்ள மூன்று வர்த்தக வங்கிகளும், பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இந்தியன் ஓவசீஸ் வங்கி (மாத்தறை கிளை) என்பன 1986 லிருந்து ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இத்திட்டத்தின் தொழிற்பாட்டில் சிக்கன கொடுகடன் கூட்டுறவு அமைப்புக்களும், (TCCS) இன்று ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. NCRCS திட்டத்தின் கீழ் இயற்கையின் காரணமாக பயிரழிவுகள் ஏதாவது ஏற்பட்டு, அதனல் படுகடன்கள் மீளச் செலுத்தப்படாது இருப்பின், அக்கடன்களை மீள அட்டவணைப்படுத்துவதற்கு (Rescheduling) வங்கிகள் அனுமதிக்கப்பட்டன. 1982லிருந்து அறிமுகமாகிய இத் திட்டமானது ஜனவரி — 1977 — 1981 ஜுன் 30 வரை வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்குவதாக காணப்பட்டது. நாட்டின் விவசாய அபிவிருத்தியை முக்கிய நோக்காகக் கொண்டு மத்திய வங்கியினல் இத்திட்டம் திருத்தியமைக்கப்பட்டது.

## விவசாயத்துறைக்கான சந்தைப் படுத்தல் கடன்கள்:-

இக்கடனின் நோக்கம், பண்ணை உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை உறுதிப்படுத்துவதாகும். இக்கடனை கூட்டுறவுச் சங்கங்களும், அரசாங்க உத்தரவாதம் பெற்ற நிறுவனங்களும் பெறுவதற்கு உரிமையுடையன, இத் திட்டத்தின் கீழ் முக்கியமாக நெல் கொள்வனவினைச் செய்கின்ற நிறுவனங்களுக்கு அரச உடைமை வங்கிகள் கடன் வழங்கும் பட்சத்தில் மத்திய வங்கி அவற்றுக்கு மீள் நிதியீட்ட வசதியைச் செய்கின்றது. முக்கியமாக நெற் சந்தைப்படும் சபை (அரசாங்க உத்தரவாத விலைத் திட்டத்தின் அடிப்படையில்) விவசாயிகளிடமிருந்து நெற் கொள்வனவினைச் செய்யும்போது குறிப்பிட்ட பருவ காலங்களில் (Busy Season) நெல் கொள்வனவு அதிகரிக்கும்போது நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு நிதி நெருக்கடி நிலைமை ஏற்படுகின்றது. இந்நிலையில் 2 அரச உடமை வங்கிகளும் இதற்கான கடன் கொடுப்பனவைச் செய்யும்போது மத்திய வங்கி இது குறித்து செயற்படுகின்றது. சந்தைப்படுததல் கடனும், இப்போது தாரள நிபந்தனைகளின் கீழ் (சலுகை அடிப்படையிலான வட்டி வீதம், கால நீடிப்பு, நோக்க அடிப்படையில் கடன் விஸ்தரிப்பு) வெங்காயம், மிளகாய், போன்ற விலைத்தளம்பலை அனுபவிக்கின்ற உத்பத்திகளை நோக்கி விஸ்தரிககப்பட்டுள்ளது.

## கைத்தொழிற் கடன்கள்:-

கைத்தொழில் அபிவிருத்திகளும், அவை தொடர்பான மத்திய வங்கியின் விருத்திப் பணியும் என்ற அம்சத்தின் கீழ் சிற்றளவு, நடுத்தரக் கைத்தொழில்களும், பலவீன மடைந்த கைத்தொழில்களும் மீள்நிதியீட்ட வசதியை பெறுவதற்குத் தகுதியுடையன வாகின்றன.

சிற்றளவு, நடுத்தரக் கைத்தொழில் தொடர்பாக கடன் உத்தரவாதத் திட்டமொன்றினை 1979 லிருந்து மத்தியவங்கி அறிமுகம் செய்துள்ளது. இலங்கையில் அபிவிருத்தி கருதிய நிதியீட்டத்தில் ஈடுபடும் வங்கிகள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை என்னவெனில், வழங்கப்படுகின்ற கடன்களுக்கெதிராக ஏற்றுக் கொள்ளக்கூடிய பிணைகளின் இடைப்புத் தன்மையின்மையாகும். (Non - availability of acceptable securities). இந்நிலையில் வாடிக்கையாளர் தமது வங்கி வைப்புக்களுக்கு பாதுகாப்பினை முக்கித்துவமான தொன்றாகக் கருதுவது போல, வங்கிகளும் வாடிக்கையாளருக்கு வழங்குகின்ற கடன்களுக்கான பாதுகாப்பினை உறுதிபபடுத்தும் நோக்குடன் கூடுதலான அளவிற்கு பிள்ளைகளை நிச்சயப்படுத்திக் கொள்ள முயல்கின்றன, ஆனால் போதிய பிணைகள் வாடிக்கையாளரிடம் இல்லாத நிலையில் அவர் வங்கியின் கடன் பெறும் வசதியை அனுபவிக்கத்த வறிவிடுகின்றான். இந்நிலையில் தான் வாடிக்கையாளர் - வங்கி உறவை வலுப்படுத்திக் கொள்ளவும், நாட்டின் அபிரிருத்தி கருதி நிதியீட்டத்தைத் தொடர்ந்தேர்ச்சியாக மேற்கொள்ளவும் மத்தியவங்கியின் அபிவிருத்திப்பணி அவசியமாகின்றது. இவ்வகையில் இலங்கை மத்திய வங்கியானது இரண்டுவகையான கடன் உத்தரவாதத் திட்டங்களை அமுல்படுத்துகின்றது.

முதலாவது கடன் உத்லாவாதத் திட்டம் சிற்றளவுக் கைத்தொழில்களுக்கென தாபிக்கப்பட்டு 1979 லே பூர்த்தியாக்கப்பட்டு விட்டது. இரண்டாவது திட்டம் சிற்றளவு தடுத்தரக் கைத்தொழில்களுக்காக (Small and medium Industries - S M I) இலங்கை அசத்தினால், சர்வதேச அபிவிரித்திச் சங்கத்துடன் (I D A) 1979 - ல் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, அமுல் படுத்தப்படுகின்றது. இந்த மீள்நிதியீட்ட வசதியை மத்திய வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கியூடாக செய்து வருகின்றது. S M I திட்டமானது நிர்வாக இலகுபடுத்தல் தேவை கருதி S M I, I S M I II, S M I III, என்ற அடிப்படையில் இக் கைத்தொழில்கள் வகுக்கப்பட்டு மத்திய வங்கியினால் மீள்நிதியீட்ட வசதி மேற்கொள்ளப்படுகின்றது. இதன் கீழ் பரந்தளவில் அரிசி ஆலை, லேசான பொறித்தொகுதிகள், கட்டிடப் பொருட்கள் தயாரித்தல், தயாரிக்கப்பட்ட ஆடை உற்பத்திகள் பற்றிக் (Batiks) உணவு குடிவகைப் பொருள் உற்பத்திகள், மரவேலைப்பொருள் உற்பத்திகள் என்பவற்றை உள்ளடக்குவதாக உள்ளது

கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பாக கடன் உத்தரவாதம் என்பதுடன், பலவீனமான கைதொழில்களுக்குப் புனருத்தாரணம் (Rehabilitation of sick Industries) என்ற வகையிலும் மத்தியவங்கி ஈடுபடுகின்றது. இலங்கையில் அண்மைக் காலமாக ஏற்படுகின்ற இனக்கலவரங்கள் காரணமாகவும், மற்றும் அரசியல் குழப்ப நிலைமை காரணமாகவும், சில கைத்தொழில்கள் நட்டத்தில் இயங்க ஆரம்பிக்கின்றன. எனவே இவ்வானன நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களுக்கு நிதி தொடர்பரன சில சலுககளை வழங்குவதன் மூலம் இவற்றுக்கு நிவாரணம் அளிக்க முன்வருகின்றது. இவ்வாறான பலவீன கைத்தொழிலுக்கு உதாரணமாக 1988ற்குப் பின்னதான உல்லாசக் கைத்தொழிலை எடுத்து நோக்கும் போது முக்கியமாக திரவத் தன்மைப் பிரச்சினையை எதிர் நோக்குவதன் காரணமாக, இதனைப் புனருத்தாரணம் செய்ய வேண்டிய ஒரு நிலைமை மத்திய வங்கிக்கு ஏற்பட்டது. இதற்காக, உவ்லாசப் பயணத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஹோட்டல்கள், வங்கித் துறையிலிருந்து பெற்ற கடன்களை மீள் அட்டவணைப் படுத்தி (Rescheduling) தொடர்பாக பின்வரும் சலுகைகளை வழங்கியது.

i) வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களைத் திருப்பிப் பெறுவது 1989 – ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ii) கடனுக்கான காலத்தை 5 வருடங்களாக அல்லது அதற்கு மேலாக நீடித்து விடுதல்.

iii) வழங்கப்படாதுள்ள மீதிக் கடனுக்கான வட்டியை மத்தியவங்கி மீள் நிதியீட்டமாக வழங்குதல்.

புனருத்தாரணம் என்பதற்கு மேலாக, முதலீட்டாளர்களுக்கு தொழில்களின் முகாமைத்துவம் தொடர்பாக ஆலோசனைவழங்குவதன் மூலமும் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமும், சிற்றளவுத்துறை முதலீட்டாளரின் முகாமைத் தரத்தினை உயர்த்துவதற்கு மத்தியவங்கி முன்வந்துள்ளது. இந்த வகையில கைத்தொழில்துறை குறித்த மத்திய வங்கியின் விருத்திப் பணிகள் உண்மையில் ஒரு முதலீட்டாளர் சமுதாயத்தினை அபிவிருத்தியடையச் செய்வதற்கான பணி என்றே கருத வைக்கின்றது.

பல்வேறு வகைகளிலும் மத்தியவங்கியின் அபிவிருத்திப் பணி தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவும் நாட்டின் நிதித்துறையிலும், உற்பத்தி, வர்த்தகம் தொடர்பான பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன. ஆனால் நடைமுறையில் இதுவரை காலமும் அமுல்படுத்தப்பட்ட இந்த அபிவிருத்திப் பணி தொடர்பான நடவடிக்கைகள், உண்மையில் எவ்வளவு தூரம் நாட்டில் ஒரு பரவலான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு உதவி புரிந்தன என்பதே பிரச்சினையாகும். நிதித்துறை அடிப்படையில் கிராமப்புறம் இன்னமும் வளர்ச்சியடையாத துறையாகவே காணப்படுகின்றமை பெரும் குறைபாடாகும். இதனைத் தீர்ப்பதற்காக மத்திய வங்கி, (1960) களிலிருந்து சில சிறப்பு நடவடிக்கைகளை முக்கியமாக 1964-ல் கிராமிய வங்கியை மக்கள் வங்கியின் கீழ் இயங்கச் செய்தமை) எடுத்து வந்த போதும் இவற்றினது கடந்த காலச் செயற்பாடுகளை, குறிப்பாக வைப்பாக்கம், கடன் வழங்கல் தொடர்பான தாவுகளைக் கொண்டு நோக்குமிடத்து, இவற்றின் ஆரம்ப நோக்கத்திலிருந்து இன்று இவை தவறுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அதாவது கிராமிய வங்கிகளின் வைப்புக்கள் மிகையாக இருப்பதனைக் கொண்டு அங்கு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தான் கடனுக்கம் நடைபெறுகிறது. என்பதனைத் தீர்மானித்துக் கொள்ள முடிகின்றது. உதாரணமாக 1976-ம் ஆண்டில் 14.4 மில்லியன் ரூபாவாக இருந்த மீள் வைப்புக்கள் 1986 – ல் 637 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இதிலிருந்து அண்மைக்காலமாக கிராமிய வங்கிகள் கடைப்பிடித்து வருகின்ற நிதியீட்டக் கொள்கையானது கிராமியப்புறத் தேவைக்கெதிரான தொன்றாக மாறுவதை அவதானிக்க முடிகிறது. இன்னொருவகையில் கூறின், கிராமப்புறத்திலிருந்து திரட்டப்படுகின்ற வைப்புக்கள், திரும்பவும் கடனுக்கம் செயற்பாட்டினூடாக அப்பகுதிகளிற்கே பயன்படுத்தப்படுவதில்லை என்பதனையே இது காட்டுகின்றது. உதாரணமாக 1986 – ம் ஆண்டில் இவ்வங்கியினால் திரட்டப்பட்ட வைப்புக்கள் 1295.5 மில்லியன் ரூபாவாகவும், இதே காலப் பகுதியில் வழங்கப்பட்ட கடன்கள் 657.8 மில்லியன் ரூபாவாகவும் காணப்படுகின்றது. எனவே மீதியாக உள்ள வைப்புக்கள் மக்கள் வங்கி ஊடாக நகர்சார் அபிவிருத்தித் துறைக்குப் பயன்படுத்தப் பட்டிருப்பதுடன், வேறு துறைகளுக்கும் குறிப்பாக கைத்தொழில், வர்த்தக துறைகளுக்கு மாற்றம் பெற்றிருக்க முடியும். கிராமிய வங்கிகள் கொண்டிருந்த இச்செயற்பாடு விவசாயக் கடன் வழங்கல் தீவிரமடைந்திருந்த 1973/75 காலப்பகுதிகளைத் தவிர மற்றெல்லாக் காலங்களிலும் (இக்காலப் பகுதிக

களில் மட்டும் எதிர்க்கணிய வைப்புக்கள்) ஒரே போக்கிலேயே காணப்பட்டது.

கிராம – நகர ரீதியாக காணப்படுகின்ற வேறுபாட்டினை விட, மாவட்ட ரீதியாகக் காணப்படுகின்ற வேறுபாடே, கிராமிய வங்கிகள் சமமான வங்கித் தொழிற்பாட்டை மேற்கொள்ளவில்லை என்பதற்குச் சிறந்த சான்றாக அமைகின்றது. 1983-ம் ஆண்டின் கணிப்பீட்டின்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் கிராமிய வங்கிகள் ஏற்றுள்ள மொத்த வைப்புக்களில் 14 % த்தை மட்டுமே கடனாக வழங்யுள்ளன. அதே நேரம், மட்டக்களப்பு மாவட்டத்தில் இது 150 % மாக (அதாவது வைப்புக்களைக் காட்டினும் 50% கூடுதலான கடன்) வும் காணப்படுகின்றது. இவ்வாறு யாழ் மாவட்டத்தில் கடன் வழங்கல் குறைவாகக் காணப்படுவதற்கு அடகு வைத்தல் முறை இடைநிறுத்தம் செய்யப்பட்டமையும் மற்றும் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு வைப்புக்கள் தலைமைக் கிளைகளுக்கு மாற்றப்பட்டதும் காரணங்களாகக் கூறப்படுகின்றன.

எது எவ்வாறெனினும் நாட்டின் நிதித்துறையில் பரவலான அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும், புறக்கணிக்கப்பட்டு வந்த கிராமியத்துறை நிதி நிறுவனங்களூடாக மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பன போன்ற பல்வேறுநோக்கங்களின் அடிப்படையில் மத்தியவங்கியின் ஆலோசனைக் கிணங்க தாபிக்கப்பட்டகிராமிய வங்கிகள் இன்று இந்நோக்கிலிருந்து தவறுவதை அவதானிக்கலாம். கிராமிய வங்கிகள் மட்டுமன்றி, வர்த்தக வங்கிகளும் கூட சில சமயங்களிலே லாப நோக்கம் குறைந்தளவு அபாயத்தன்மை என்பவற்றை எதிர்பார்த்து புதிய கிளைகளை திறக்கும் போது நகர்ப்புறத்தையே தமது முதன்மைப் பிராந்தியமாகக் கொள்கின்றன. இவ்வகையில் கிராமப்புறம் வங்கிக் கிளை விரிவாக்கம் குறித்து புறக்கணிக்கப்படும் போது மத்தியவங்கியின் நாணயத்துறைசார் அபிவிருத்திப்பணி, அதாவது 'கிராமிய வங்கிப்படுத்தல்' என்ற நோக்கு நிறைவேற முடியாது போகின்றது.

இலங்கை வங்கியின் உப.அலுவலகங்களின் கடந்த காலச் செயற்பாடுகளும் மத்திய வங்கியின் அபிவிருத்திப் பணியினை நிறைவுத்தன்மையுடையதாக்குவதாக இல்லை 1970களில் விவசாயத்துறை அபிவிருத்தியே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக் கொள்கையில் முன்னுரிமைத் துறையாகக் கொள்ளப்பட்ட போது, அதற்கேற்றாற்போல மத்திய வங்கியும், வர்த்தக வங்கிகளின் முதன்மைக் கிளைகளையும் அவற்றின் உப அலுவலகங்களையும் இப் பிராந்தியங்களை நோக்கிச் செயற்பட வைப்பதற்குப் பெருமளவில் உதவி புரிந்துள்ளது. ஆனால் 1980 களின் ஆரம்ப காலங்களிலிருந்து மத்தியவங்கியின் அபிவிருத்திப்பணியானது. வேறு துறைகளை நோக்கி திருப்பமடைந்துள்ள அதே நேரம் பிராந்திய ரீதியில் சில துறைகளையும் புறக்கணிப்பதாகவும் உள்ளது. அதாவது 1979 லிருந்து பாதுகாப்பின்மையைக் காரணமாக கொண்டு நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள விவசாய சேவை நிலையங்களில் இயங்கி வந்த இலங்கை வங்கி உபஅலுவலகங்களை மூடியுள்ளது. இத்துடன் இலங்கை வங்கி, மக்கள்வங்கி என்பவற்றின் முதன்மைக் கிளைகளையும் மூடியுள்ளது. விவசாயத்தையே முக்கிய பொருளாதார நடவடிக்கையாக ஏற்றுள்ள இப்பிரதேசங்களில் இந்த வங்கி மூடற் கொள்கையானது விவசாயத்துக்கான நிதியீட்டத்தில் மீண்டும் ஒரு ''நிதியிரட்டத் தன்மை முறைமையினை ஏற்படுத்துவதுடன் மத்திய வங்கியானது தனது நிதி சார் அபிவிருத்திப்பணி என்பதிலிருந்து ஏறக்குறைய ஒரு தசாப்தகாலமாக தேசிய மட்டத்தில் சமமான அபிவிருத்தியை ஏற்படுத்துதல் என்பதிலிருந்து விலகிவருகின்றது என்பதையும் நிரூபிக்கின்றது.

வர்த்தக வங்கிகளும். அவற்றின் உபநிறுவனங்களும் மட்டுமன்றி அபிவிருத்தி வங்கிகளும் கூட சில சந்தர்ப்பங்களில் தமது பாரபட்சமான கடன் வழங்கல் கொள்கை மூலமும் மற்றும் கடன் வழங்கும் போது கடைப்பிடிக்கின்ற சில அணுகு முறைகள் மூலமும் மத்திய வங்கியால் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திப் பணியினை முழுமையாக நிறைவேற்ற முடியாமலுள்ளது.

உதாரணமாக SMIB, DFCC என்பவற்றின் சட்டமூலங்கள் 1979ல் திருத்தப்பட்டது. நாட்டின் முன்னுரிமைத்துறை கருதிய நிதி ஈட்டம் குறிதம்தயாகும். இவற்றுள் SMIB பானது. கைத்தொழில், விவசாயக் கடன்களை சிறந்த முறையில் வழங்குவதற்காக இரு வேறு நிறுவனங்களை ஒருங்கிணைத்து 1970 லிருந்து செயற்பட்டு வந்தது, எனினும் இன்றுவரை ஏறக்குறைய ஒரு தசாப்தம் பூர்த்தியான நிலையிலும் இது மேற்கூறிய நோக்கத்தினை நிறைவேற்றியதாக இல்லை. அதாவது வீடமைப்புத்துறையே இதன் கீழ் அதிகளவு நன்மையைப் பெற்றுள்ளமையால் இணைப்பின் நோக்கத்திலிருந்து இது தவறுவதை அவதானிக்கலாம்

எனவே வெறுமனே அபிவிருத்திக் குறிகாட்டியை உயர்த்திக் காட்டுகிற ஒரு நலத்துறை சார்ந்த முதலீடுகளுக்கு கடன் வழங்குவதைக் காட்டிலும், தொழில் வாய்ப்பு அதனூடாக வருமான உயர்வு, வறுமை நீக்கம் எனபவற்றை ஏற்படுத்திக்கொள்வதற்கான உற்பத்தி சார்நத நடவடிக்கைகளுக்குக் கடன் வழங்குவது வரவேற்கத்தக்தாகும்.

SMIBயின் கீழ் கடன் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் நிலமுடையவர்கள் மட்டுமே. நிலத்தை அடமானமாகக் கொண்டு மட்டுமே கடன் பெற முடியும் என்ற தகுதி விதியானது. நிலமற்ற விவசாயிகளை இவ் வங்கியிலிருந்து கடன் பெறுவதற்கு அருகதையற்றவராகிவிடுகின்றது. ஆனால் நடைமுறையில் இலங்கையில், நிலமற்ற விவசாயிகள், மொத்தக் கடன் தேவையில் கணிசமான பங்கினை வகிப்பதால், அபிவிருத்தி வங்கி என்ற வகையில், SMIB யானது இவ்வாறான பிணைகளை நிலமற்ற விவசாயிகளிடமிருந்து எதிர்பார்ப்பது அதன் அபிவிருத்தி கருதிய நிதியீட்டக் கொள்கைக்கு முரணானதாகும். எனவே இவ்வாறான ஒரு நிலையில் வழங்கப்படும் கடன்களை நோக்க அடிப்படையில் விஸ்தரிப்பதுடன், கடன் தேவைப்படுவோரிடமிருந்து எதிர்பார்க்கின்ற இறுககமான சில நிபந்தனைகளை இலகுபடுத்தக்கூடிய வகையில் சட்ட திருத்தங்களை ஏற்படுத்துவதன் மூலமே மத்திய வங்கியின் அபிவிருத்திப்பணி என்பது திறம்பட செயற்பட முடியும்.

DFCCயை எடுத்து நோக்கும் போதும், கடன் வழங்கலில் குறைபாடு காணப்படுவதை அவதானிக்கலாம். வளர்முகநாடென்ற வகையில் இலங்கையில் சிற்றளவு தொழில் துறைகளுக்கே கூடியளவு முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய தேவை இருந்தும் கூட, இந்நிதிக் கூட்டுத்தாபனம் சிற்றளவுக் கடன் தேவையாளரைப் புறக்கணித்தே வருகின்றது. உதாரணமாக ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை, 75,000/- வுக்கு குறைந்த கடனுக்கான விண்ணப்பங்கள் எதுவும் வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதிலிருந்து இதன் குறைபாடு புலப்படுகின்றது. எனினும் 1982ல் இதன் சட்டம் பல்வேறு வகையிலும் திருத்தப்படுவதற்கு மத்திய வங்கி முயற்சிகளை அளித்ததாயினும் செயற்பாட்டளவில் இவை எதுவுமே நடைபெறவில்லை.

மேற்கூறிய வகையில் பல்வேறு நிதிநிறுவனங்களும் நிதியீட்ட நடவடிக்கைகள் தொடர்பாகக் குறைபாடுகளைக் கொண்டுள்ளன என்பதும், இவ்வாறான நிலையில் மத்திய வங்கிக்கும், இவற்றுக்குமிடையிலான ஆலோசனை, முகாமைத்துவ தொடர்புகள் சில சந்தர்ப்பங்களில் வழிதவறுவதும் சகஜமாகி விட்டன. பொதுவாக வளர்முக நாடுகளின் நிதி நிறுவனங்கள் தற்போது இருக்கும் நிதிச்சூழலில் தமது தொழிற்பாட்டையும், திறமையையும் விருத்தி செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகளாக லாப நோக்கம் கருதியதும், அபாயத்தன்மை குறைந்ததுமான செயற்பாடுகளை மேற்கொள்வதில் எவ்வித தவறுமில்லை என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் வரலாற்று நோக்கில் இலங்கையின் கடந்தகால வங்கியமைப்புக்களை ஆதாரமாகக் கொண்டு (குறிப்பாக Oriental Bank போன்ற பெருதோட்ட கால வங்கிமுறிவுகள்) மீண்டும் ஒரு பலவீனமான வங்கி முறையை (1825 – 1834 வரை நடந்தேறிய செயற்பாடுகள்) அனுபவிக்க தற்போதைய வங்கிகள் விரும்பாத நிலையில் லாபத்தையும், குறைந்தளவு அபாயத்தன்மையையுமே முக்கிய நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றன

இவ்வாறு பலமானதும், இலாபத்தன்மை உடையதுமான துறைகளைத் தெரிந்தெடுப்பதன் மூலம்தான் நிதிநிறுவனங்கள் முறிவடையாது செயற்பட முடியும் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், மாறிவரும் புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கேற்ப மத்தியவங்கியின் நாணயக் கொள்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டுப்பாடு உண்டு என்பதை இந்நாடுகளின் வங்கிகள் உணரத்தவறியுள்ளன என்றே கூறவேண்டும். ✳

உயர்தர வகுப்புகளில்

# பொருளியல் கற்பித்தல்: சில குறிப்புகள்

— மா. சின்னத்தம்பி

உயர்தர வகுப்புக்களில் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்கள் பின்வரும் விடயங்களையும் கருத்திற் கொள்வது கற்பித்தல் முறையைச் செம்மையாக்கும். பொருளியற் பாடத்தில் காணப்படும் அலகுகள் வேறுபட்ட கற்பித்தற் திறன்களை வேண்டி நிற்கின்றன. இவற்றை உள்வாங்கும் பல்வகைத் திறன்களையும் மாணவரிடம் வளர்ப்பதில் ஆசிரியர் அக்கறை காட்ட வேண்டும். இலகுவானதிலிருந்து கடினமானதற்கு செல்லும்திறனும், ஒன்றின் மாதிரியிலிருந்து ஏனையவற்றை அடையாளம் காணும் திறனும் அவசியமாகின்றன.

இப் பாடத்தில் தேவையானவற்றை சரியாக அடையாளம் காணுதல், எண்ணக் கருக்களை விளங்குதல், உண்மைகள் பலவற்றிடையிலான தொடர்பு, உண்மைகளை முன்னுரிமைப் படுத்தல், விளக்கமளித்தல், கைவினைத் திறன், அழகுணர்ச்சி போன்ற பல் திறன்களையும் மாணவரிடத்து வளர்க்க வேண்டியுள்ளது. இது ஆசிரியரின் பணியேயாகும். இதனாலேயே சில அலகுகளில் சிலர் ஆர்வக்குறைவுடன் செயற்படுவதுமுண்டு.

பல்கலைக்கழக மட்டத்தில் சிற்றினப் பொருளியல் ஒரு விரிவுரையாளரினாலும் பேரினப் பொருளியல் மற்றொரு விரிவுரையாளரினாலும் மேற்கொள்ளப்படும் வாய்ப்பு இருப்பதால் சில சமயங்களில் அங்கு ஆசிரியர் நிலையில் சிக்கல் குறைவாக தென்பட வாய்ப்புண்டு. ஆனால் பாடசாலை மட்டத்தில், வகுப்பறையில் ஒரே ஆசிரியர், முதிர்ச்சி ஓரளவு குறைவாயுள்ள மாணவர்களிடம் எல்லாத் திறன்களையும் வளர்த்தெடுப்பது கடினமானதாகவே தென்படும். இதற்கு முன்கூட்டியே திட்டமிடல், பாடத்தை தயாரித்தல், உசாத்துணை நூல்களை அடிக்கடி வாசித்தல், மாதிரிப் பயிற்சிகளைத் தயார் செய்தல், கடந்த கால வினாத் தொகுதிகளை கருத்திற் கொள்ளுதல் போன்ற விடயங்களில் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும்.

தற்போதைய க. பொ. த. (உயர்தரம்) வகுப்பு பாடத்திட்டப்படி பின்வரும் வேறுபட்ட பகுதிகளை கருத்திற் கொள்ள வேண்டும்.

## 1. விளக்கப் பகுதிகள்:

இவை போதியளவு விளக்கமளிக்கப்பட வேண்டியவையாகும். இதில் பல உப தலையங்கங்களும் சேர்க்கப்படுதல் நன்று. ஒவ்வொரு விடயம் கற்பிக்கும்போதும் இரண்டு அம்சங்கள் கருத்திற் கொள்ளப்படவேண்டும்.

1. பிரதான உண்மைகள்
2. வலியுறுத்த உதவும் உப உண்மைகள்.

சில அலகுகளில் இத்தன்மை பொதுவானது.

உ+ம் பொருளியல் பற்றிய விளக்கம்.

பொருளாதார முறைமை.
ஆக்கக் காரணிகள்.
பணமும், வங்கியும்.

இவற்றில் ஒழுங்குபடுத்தப்பட்ட குறிப்புக்கள் வழங்குதல் பயன்படும்.

## 2. கணக்குப் பகுதிகள்:

இவை தனியாகவும், சில அலகுகளுடன் இணைத்தும் பயன்படுத்தப்படுவதுண்டு. இவற்றில் கரும்பலகை உபயோகம் மிகவும் அவசியம். ஆசிரியர் தாமாக சில கணக்குகளை செய்து காட்டலும் மாணவருக்குப் போதியளவு பயிற்சிகளை வழங்குதலும் அவசியம். இதற்கு இரண்டு அம்சங்கள் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(1) கணக்குகள் செய்வதற்கான அடிப்படை விதிகளை, தொடர்புகளை தெளிவு படுத்தல்,

(2) பகுதி பகுதியாக கணக்குகளை செய்து காட்டல், பின் தொடர்பு படுத்தி முழுமையாக்கிக் காட்டுதல்,

இவற்றில் குறிப்புக்கள் மிகவும் குறைவாகவும், கணிதப் பயிற்சிகள் அதிகமாகவும் இருத்தல் வேண்டும்.

உ+ம்: நெகிழ்ச்சிக் கணிப்பு
தேசிய வருமானக் கணக்கு
வர்த்தக மாற்று விகிதங்கள்
அரச பாதீட்டுக் கணக்குகள்

## 3. வரைபடப் பகுதிகள்:

இதில் வரைபுத்தாளில் படங்கள் வரைவதும், விளக்கல் படங்கள் வரைவதும் இடம் பெறும். இவை ஆசிரியரால் கரும்பலகையில் வரைந்து காட்டப்பட வேண்டியன. வகுப்பறையிலும் எல்லா மணவர்களையும் ஒரு பயிற்சியை செய்யும்படி பணித்தும்மேற்பார்வை செய்யப்பட வேண்டும். இதில் போதியளவு பயிற்சிகள் வழங்கப்படல் அவசியம். இவை தொடர்பாக பின்வரும் அம்சங்கள் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(1) அளவுத்திட்டங்களை சரியாக எடுத்தல்

(2) X, Y அச்சுக்களில் சரியானதை எழுதுதல்.

(3) வளையிகளை சரியாகவும், தெளிவாகவும் வரைதல்.

(4) கேட்கப்படும் விடைகளைக் கண்டு பிடித்தல்.

(5) வரைபடத்திலிருந்து பெறப்படும் முடிவுகளை விடைத்தாளில் வினு இலக்க ஒழுங்கின்படி பதிதல்.

கேள்வி, நிரம்பல், சந்தைவிலை நிர்ணயம் தொடர்பாக இவற்றை அதிகம் பயன்படுத்தல் வேண்டும்.

இதேபோல் விடைத்தாளில் விளக்கப் படங்கள் வரைவதும் முக்கியமானதாகவே கருதப்படுகிறது. இவற்றை சிறியளவில் அழகாகவும், சரியாகவும் வரைவது அவசியம். இதில் தேவையான குடுயீடுகளை (P,Q,△P, △Qd, △Qs,) சரியான இடங்களில் குறிக்கச் செய்வது மிகவும் அவசியம். அதேபோல் X, Y அச்சுக்களில் சரியானதை எழுதும்படி செய்வதும், வளையிகளில் அதற்கான குறியீடுகளை (D. S. போன்றன) எழுதும்படி செய்வதும் அவசியம், இதில் போதியளவு பயிற்சி கொடுபடல் நன்று.

## 4. பொது அறிவுப் பகுதிகள்:

இலங்கையின் பொருளாதார செயலாற்றங்கள் பற்றிய அறிவு மாணவர்க்கு ஊட்டப்பட வேண்டியுள்ளது. இதில் குறிப்புக்கள் உதவுமாயினும், எல்லாவற்றையுமே

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)

குறிப்புகளாக வழங்குதல் இயலாது. அவ்வாறு வழங்குவதும் சரியன்று. மாணவரிடம் ''தேடல் ஆர்வம்'' வளர்வதற்கு ஆசிரியர் வழிகாட்டியாக இருத்தல் வேண்டும். ஐயம் தீர்ப்பவருமாயிருத்தல் வேண்டும். இதற்கு இரு அம்சங்களில் கவனம் செலுத்தலாம்.

1. குறிப்பிட்ட விடயம் பற்றிய பிரதான வழிகாட்டல் குறிப்புக்களை வழங்குதல்.

உ+ம்: தொடக்கம், நோக்கங்கள், செயற்பாடுகள் பிரச்சினைகள், பெறுபேறுகள்.

2. அவைபற்றிய மேலதிக விபரங்களை மாணவர் தாமாகவே தேடிப் பெறுவதற்கு வழிகாட்டுதல். எத்தகைய வளங்களிலிருந்து விபரங்கள் பெற முடியுமென வழிகாட்டல் அவசியம்.

இலங்கைப் பொருளாதார செயலாற்றங்கள் பற்றி மாணவர் வாசிக்கக் கூடிய நூல்கள் பின்வருவன:.

1. பொருளியலாளன்.
2. பொருளியல் நோக்கு.
3. மத்தியவங்கி – பொருளாதார மீளாய்வு.
4. Central Bank - News Survey.
5. Ceylon year Book
6. Staff Studies – Central Bank.
7. கமநலம் - கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவகம்.
8. கைத்தொழில் – இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை.
9. திணைக்களங்கள், சபைகள் என்பவற்றால் வெளியிடப்படும் அறிக்கைகள், நூல்கள்.
10. இலங்கைப் பொருளாதாரம் பற்றி வெளியிடப்பட்ட பொருளியல் நூல்கள்.
11. தினசரிகளில் வெளிவரும் பொருளியல் சம்பந்தமான கட்டுரைகள்.

ஆசிரியர்கள் தமிழில் வெளிவரும் நூல்களையேனும் மாணவர் வாசிக்கும்படி தூண்டுதல் வேண்டும். இது பொருளியலறிவை வளர்ப்பதற்கு மாத்திரமன்றி, மாணவரின் மொழியாற்றலை விருத்தி செய்யவும் உதவியாயிருக்கும்.

## 5. விடையளிக்கும் பயிற்சி:

கட்டுரை வகுப்புக்களை வகுப்பறை மட்டத்தில் நடாத்தலாம். கடந்தகால வினாக்களின் மாதிரியில் விடையளிக்கப் பழக்குதல் நல்ல பெறுபேறு எடுப்பதற்கு உதவும். இதில் பின்வரும் வினாத் தொடர்புகளைப் புரிந்து கொள்ளவும், எல்லைப்படுத்தி விடையளிக்கவும் மாணவர்க்கு பழக்குதல் வேண்டும்.

1. நீர் யாது விளங்கிக் கொள்வீர்?
2. நுணுக்கமாகத் திறனாய்வு செய்க.
3. தாக்கங்களைப் பகுத்தாய்க.
4. காரணங்கள் தருக.
5. வேறுபாட்டினை எடுத்துக் காட்டுக.
7. பிரதன மூலகங்கள் யாவை?
8. மேற்போந்த தரவுகளிலிருந்து நீர் பெறக் கூடிய முடிவுகள் யாவை?
9. சிறுகுறிப்பு எழுதுக.
10. வரிப்படங்களின் உதவியுடன் விளக்குக.
11. கூற்றுக்களை ஒப்புக் கொள்வீரா? நியாயங்கள் தருக.

இந்த வழிகாட்டில் ஆசிரியர் பணியை இலகுபடுத்துவதாயமையும்.

# வறுமை தணிப்புத் திட்டம் (ஜனசவிய)

## ஏன் வறுமையை தணிக்கவேண்டும்?

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு நிதி, கனி வளங்களுக்கு மேலாக மனித வளம் முக்கியமான பங்கினை அளிக்கின்றது. உயர்ந்த கல்வித் தகமையும் திடகாத்திரமான தேகாரோக்கியமும் கொண்ட மனித வளத்தை தன்னகத்தே கொண்ட ஒரு நாடு கிடைக்கக்கூடிய ஏனைய வளங்களை திறமையாகப் பயன்படுத்தி, அபிவிருத்திப் பாதையில் முன்னணியில் திகழும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. அபிவிருத்தியின் அத்திவாரமாகத் திகளும் மனித வளத்தை ஒரு நாடு பெற்றுக்கொள்வதற்கு இடையூறுகத் திகழும் அடிப்படைக் காரணி குறிப்பிட்ட நாட்டில் காணப்படும் வறுமையே ஆகும்.

வறுமையின் கொடுமையை பண்டைத் தமிழ் இலக்கியத்தில் தமிழ் மூதாட்டி ஔவையார் அழகு தமிழில் எடுத்தியம்பியுளளார். கொடியது வறுவை அதிலும் கொடியது இளமையில் வறுமை. துள்ளித் திரியவேண்டிய பள்ளிப் பராயத்தில் பள்ளி செல்ல முடிவதில்லை. நல்ல சத்துணவு இன்மையால் நோய்க்கு இடமளித்தல். சிறு வயதில் தொழில் தேடவேண்டிய நிர்ப்பந்தம் குற்றச் செயல்களில் ஈடுபடல், தன்னை வாழ வழிகாட்டாத சமூகத்தின்மீது வெறுப்பு. சமூக விரோதச் செயல்களில் நாட்டம். சிருஷ்டிப்புத் தன்மையை இழத்தல். தனி நபர் ஆளுமையை இழந்துவிடல். சுருங்கக் கூறினல் வறுமையில் வாடும் இளம் சந்ததியினரை பெருமளவில் கொண்ட ஒரு நாட்டின் எதிர்காலம் இருள் சூழ்ந்தது. மொத்த சனத் தொகையில் மூன்றிலொரு பங்கிற்கும் மேலான தொகையை 15 வயதிற்கு உட்பட்ட இளம் வயதினராக இருக்கும் எமது நாடு வறுமைப்பிணியில் சிக்கியிருப்பது எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக இருக்கப் போகிறது என்பதை உணர்ந்துவதாக இருக்கிறது. அத்துடன் இன்றைய இளைஞர்களின் அமைதியின்மை அதிகரித்துச் செல்லும் சமூக விரோதச் செயல்கள் எல்லாம் நாளைய நடப்பிற்கு கட்டியம் கூறுவது போல் இருக்கின்றது.

ஒரு சமுதாயத்தின் ஆணி வேரையே செல்லரித்து அழித்து விடக்கூடிய வறுமையை தணித்தல் அல்லது ஒழித்தல் அந்த சமூதாயத்தினை ஒளிமயமான எதிர்காலத்திற்கும் சமூக பொருளாதார, கலாச்சார அபிவிருத்திகும் இட்டுச் செல்லும் என்பதில் சந்தேமில்லை விலை மதிப்பற்ற மனித வளத்தை அபிருத்தி செய்கின்ற நாடு ஏனைய வளங்கள் ஒன்று

மில்லாமல் இருந்தாலும் எல்லாவற்றையும் கொண்டதாக மாறிவிடும் இந்த கோட்பாட்டை மையமாகக் கொண்டதே நாட்டின் புதிய மக்கள் ஜனாதிபதி கௌரவ ஆர். பிரேமதாச அவர்கள் முன்வைத்துள்ள 'சனசவிய' என்னும் வறுமை தணிப்புத் திட்டமாகும். ஒன்றுமே இல்லாத சமுதாயத்தை இருக்கின்ற சமுதாயமாக மாற்றி அமைத்தல் இத்திட்டதின் கருப்பொருளாகும். ஏழைகளில் ஏழைகளை இனங்கண்டு சமுதாய ஓட்டத்தில் அவர்களும் பங்கேற்கும் வண்ணம் கைகொடுத்து உதவ வேண்டும் என்பதை திட்டம் வலியுறுத்துகிறது.

## திட்டத்தின் அடிப்படை என்ன?

இவ் அணுகு முறை மக்களை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி என்பது சாலவும் பொருந்தும். மனித வளத்தை அடிப்படையாகக்கொண்ட சனசவிய அபிவிருத்தி செயற்திட்டம் மரபார்ந்த அபிவிருத்தி அணுகுமுறைகளிலிருந்து வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் பெரிதும் வேறுபட்டதாகும். சுருங்கக்கூறின் இவ் அபிவிருத்தி நோக்கு,

1. மனித வளத்தை முதன்முழு மூலவளமாகக் கொண்டது.
2. அதிலும் வறியவர்களையும், ஏழைகளிலும் ஏழைகளையும் முதன்மைப்படுத்துவது.
3. சுயமாகவும் தன்னிச்சையாகவும் இயங்கவல்லது.
4. கீழிருந்து மேல் நோக்கியது அதாவது மக்கள் திட்டத்தின் பலாபலன்களை பெறுவதில் மட்டுமே பங்காளிகளாக இல்லாமல் தீர்மானமெடுப்பதிலும் பங்களிப்புச் செய்தல்.
5. கலாச்சார ரீதியில் ஊறு விளைவிக்காதது.
6. நாடளாவியதும் உறுதியானதும் ஆகும்.

எனவே மக்களை அடி நாதமாகக்கொண்ட இவ் அபிவிருத்தி அணுகுமுறை மனித வளத்தில் முதலீடு செய்து அவர்களது அறிவையும் ஆற்றலையும் முழுமையாக ஒன்று சேர்த்தலாகும். இவ்விடத்தில் உலக வங்கித் தலைவர் பாபர். சி. கொன்ன பிளின் கூற்றினை ஞாபகப்படுத்துவது மிகவும் பொருத்தமானதாகும்.

''வங்கியின் மையக் குறிக்கோள் வறுமையைக் குறைத்தலாகும். மிகக் குறைந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழ்க்கைத் தரத்தினையும் பெற்றுக்கொள்ள முடியாதவாறு பல கோடிக்கணக்கான மக்களை இன்றைய அளவிலான வறுமை தடுக்கின்றது. எமது கோளில் ஒவ்வொரு ஐந்தாவத மனிதனையும் இத்தகைய துன்பத்தை அனுபவிக்க விடுவது பண்பற்ற செயலாகும். இது நாட்டிற்கு உதவாத பொருளாதாரமாகும். மதிப்பற்ற பொருளாதார வளத்தினை நாசமாக்கலாகும். வறுமையானது வாழ்க்கையை, கௌரவத்தை, பொருளாதார திறமையை அழித்துவிடும். எனவே வறுமையை மனத்துணிவுடன் எதிர்த்துப் போராடி நிலை நிறுத்தக்கூடிய வளர்ச்சியைப் பெற உறுதி பூண வேண்டும்.''

இதிலிருந்து மரபார்ந்த அபிவிருத்தி அணுகு முறையில் புதியதொரு திருப்பம் இலங்கையில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும் ஏற்பட்டிருப்பது புலனாகின்றது.

## சனசவியவுடன் இணைந்த திட்டங்கள்

வறுமைத் தணிப்புத் திட்டத்தின்பாற்பட்டதாக பல திட்டங்கள் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன,

1. முகவர் வங்கி.
2. கிராமிய வேலைத்திட்டம்.
3. இளைஞர் பயிற்சித் திட்டங்கள்.
4. சிறிய நடுத்தர கைத்தொழில்கள்.
5. கைத்தறித் துறைக்கு புத்துயிரூட்டல்.
6. ஆரம்ப சுகாதாரம்.

7

முகவர் வங்கிகள் இரண்டு அரசாங்க வங்கிகளாலும் தனியார் வங்கிகளாலும் நிறுவப்பட்டு வழமையான கடன் வழங்கு முறையில் கடன் பெற முடியாதவர்களுக்கு கடன் வழங்கும். பிரதேச சபைப் பிரிவுகளில் ஏழைகளை முதன்மையாகக் கொண்ட உற்பத்தி நடவடிக்கைகளை உள்ளடக்கிய கிராமிய வேலைத்திட்டம், வேலையைத் தேடிக்கொள்வதற்கு ஏதுவாகவும், சுயதொழில் நாட்டமுள்ளவர்களுக்கு சுய தொழில் ஆரம்பிக்கவும் வழியாக இளைஞர்களுக்கு பயிற்சியளித்து தொழில் நுட்பங்களையும் தொழில்துணிவையும் கொடுக்கக்கூடிய பயிற்சிகளை ஏற்படுத்தல். நோய்வாய்ப்பட்டுள்ள கைத்தொழில்களை மறுசீரமைத்து சிறிய நடுத்தர கைத்தொழில்களை அபிவிருத்தி செய்த. பெண்களுக்கு வேலை வாய்ப்பை தேடித்தரக்கூடியவாறு கைத்தறி புடவைத் தொழிலுக்கு புத்துயிரளித்தல், சமூகரீதியான முற்காப்பு சுகாதார சேவைகளை வழங்கல் என்பவை நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு சில திட்டங்களாகும். இதேபோன்று மக்களை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்திக் கொள்கையின் அடிப்படையில் உருவான வறுமைத் திட்டத்தின் கீழ் இன்னும் பல திட்டங்கள் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இவை யாவும் மனித வர்க்கத்தின்மீதான வெளிப்படையான முதலீடுகளாகும்.

## முக்கிய கூறுகள் எவை?

வறுமை தணிப்புத் திட்டத்தில் முக்கிய மூன்று கூறுகளாவன,

(i) குடும்பம்.

(ii) வளங்கள்.

(iii) காலம்.

காலம் இரண்டு வருடம் உறுதியாக தீர்மானிக்கப்பட்டுவிட்து. குடும்பம் என்பது ஐந்து அங்கத்தவர்களை கொண்டது என வரையறுக்கப்பட்டிருந்தாலும் மேலும் சில அம்சங்கள் கவனத்திற்கு எடுககப்படும். குடும்பத்தில் காணப்படும் நுட்பங்கள், பயிற்சி, தொழில் முயற்சி, ஊக்கம் என்பனவும் கவனிக்கப்படும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கத் திட்டமிட்டுள்ள மாதமொன்றிற்கான கொடுப்பனவான ரூபா 2500/- நிதி வளமாகும், ரூபா 2500/- கொடுப்பனவில் ரூபா 1042 தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்யப்படும். இண்டு ஆண்டு முடிவில் இத் தொகை ரூபா 25000/- முதலீடாகக் கிடைக்க வழி செய்யும். மிகுதி ரூபா 1458/- ஒவ்வொருமாத நுகர்விற்கும் வழங்கப்படும், அதிலும் ஒரு தொகையை சேமிக்க விரும்பினுல் அதற்கு வசதி செய்யப்படும். ஆனுல் இத்த ஏற்பாடு முற்று முழுதாக உதவியைப் பெற்றுக்கொள்கின்றவரின் விருப்பத்தின் பேரிலேயே ஒழுங்கு செய்யப்படும். குடும்பங்களை தெரிவுசெய்து திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கென கிராம சேவகர் பிரிவிலும் சிறிய பிரிவுகளான 30,000 பிரிவுகளாக இலங்கை பிரிக்கப்பட்டுள்ளது. நடைமுறைப்படுத்துபவர்களுக்கான பயிற்சிகள் கருத்தரங்குகள் யாவும் உரிய காலத்தில் செயல்படுத்தப்படுகின்றது. திட்டமிட்டபடி முதல் தொகுதிக் கொடுப்பனவுகள் சித்திரைப் புத்தாண்டில் இடம்பெறும்.

இத் திட்டம் இந் நாட்டில் ஏழைகளின் வாழ்க்கையில் பாரிய ஒரு மாற்றத்தினைக் கொண்டுவரும். உயிர் தப்பிப் பிழைத்தால் போதுமென்று வாழ்ந்த பல இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு தங்களைத் தாங்களே அபிவிருத்திசெய்வதற்கு இத் திட்டம் வழிகோலுகிறது. தொழில் முயற்சி பயிற்சிகள், விவசாயம், விவசாயம்சார் கைத்தொழில்களுக்கான விரிவாக்கல் சேவைகள், நில ஒழுங்கமைப்பு, கடன் வசதி, வீட்டு வசதி, போஷாக்கு, ஆரம்ப சுகாதாரம், குழந்தைகள் அபிவிருத்தி, கல்வி, மற்றும் தொடர்புடைய சகல துறைகளுடனும் ஒன்றிணைக்கப்படுவதாலும் திட்டம் மேலும் வலுப்பெற்றதாக விளங்குகின்றது. இதுவரை ஏழ்மையை போக்க எடுத்த எல்லா முயற்சிகளையும் விட இது மேலானது. ஏழ்மையை நேருக்கு நேராக சந்தித்து தோற்கடிக்க எடுக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்பான திட்டமாக இது இடம்பெறப்போகின்றது என்பதில் சிறிதளவும் சந்தேகங்கொள்ளத் தேவையில்லை.

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)

## ஜனசவிய திட்டத்தில் இடம்பெற தகுதியுடையவர்கள்

— மிக வறிய குடும்பங்கள்
— வறிய குடும்பங்கள்
— ஓரளவு வறிய குடும்பங்கள்
— பங்குகொள்ள விரும்பும் ஏனைய குடும்பங்கள்

## "ஜனசவிய" வழங்க முன்வரும் பணத்தொகை

— வறிய குடும்பம் ஒன்றுக்கு

| | |
|---|---|
| மாதாந்தம் நுகர்வுச் செலவுக்காக ரூபா | 1458/- |
| மாதாந்தம் சேமிப்புக்காக ரூபா | 1042/- |
| மாதாந்த மொத்தம் | 2500/- |

— இவ்வருட முடிவில் உங்கள் சேமிப்பு – ரூபா 25,000/-
— சுயதொழில் முயற்சிக்கான இலகு கடன் வசதி
— மருத்துவ சுகாதாரா வசதி ஆகியவையாகும்

## ஜனசவிய திட்டத்தின் செயற்பாடுகள்

— சிறு கிராம மட்டத்தில் மக்கள் குழுவாக இணைதல்
— நம்பிக்கைக்கும் வழிகாட்டலுக்கும் ஏற்ற முகவரை இனங்கண்டு நியமித்தல்
— தகுதியுடையோரின் பட்டியல் தயாரித்தல்
— பட்டியலில் உள்ளவர்களின் விபரங்களை நேரில் பார்வையிட்டு சரிபார்த்தல்
— குடும்பத்துக்குத் தனித்தனி கோவை தயாரித்தல்
— இறுதிப் பட்டியலை மக்கள் பார்வைக்கு வைத்தல்
— பிரிவு / மாவட்ட மட்டத்தில் குழுக்கள் அமைத்தல்
— இக் குழு பட்டியலில் உள்ள விபரங்களை பரீட்சார்த்தமாக பரிசீலித்தல்
— குழு மாற்ற முகவர்களுக்கு பயிற்சி, கூட்டு இணைப்பு, திட்டமிட்ட உதவித் தேவை ஆகியன அளித்தல்
— பெற்ற பயிற்சிகளைம் உதவிகளையும் குழு மாற்ற முகவர்கள் மக்களுக்கு அளித்தல்

## "ஜனசவிய" திட்டம் அளிக்கும் பயன்கள்

— மனித ஆற்றலை மேம்படுத்துதல்
— சுய உழைப்பை ஊக்குவித்தல்
— தொழில் வளத்தைப் பெருக்கல்
— வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
— ஏற்றத்தாழ்வை இல்லாதொழித்தல்
— கிராமத்தை அபிவிருத்தி செய்தல்
— வறுமையை அகற்றல்

[library stamp, illegible]

# சிறப்பு எடுப்பனவு உரிமை (SDR)

## பெறுமதி கணித்தல்

சிறப்பு எடுப்பனவு உரிமையின் பெறுமதி ஆரம்பத்தில் தங்கத்தின் அடிப்படையிலேயே கணிக்கப்பட்டது. 1974 முதல் 1980 வரை 16 நாட்டு நாணயங்களின் நிறையூட்டப்பட்ட சராசரியின் பெறுமதியே சிறப்பு எடுப்பனவு உரிமையின் பெறுமதியாகக் கணிக்கப்பட்டது. இந்தப் 16 நாடுகளும் உலக வர்த்தகத்தில் 1 சதவீதத்திற்கும் மேலான பங்கினைக் கொண்டிருந்தன. அதே வேளை சிறப்பு எடுப்பனவு உரிமையில் இருந்து பெறப்படும் வட்டியைக் கணிப்பதற்கு 5 நாடுகளின் நாணயக் கூடையே பயன்படுத்தப்பட்டது. 1981 இல் சிறப்பு எடுப்பனவு உரிமையை சர்வதேச ஒதுக்குச் சொத்தாக பயன்படுவதைத் தூண்டும் பொருட்டும் பெறுமதி கணிப்பு வட்டிக் கணிப்பினை ஒருங்கிணைக்கும் நோக்குடன் உலக வர்த்தகத்தில் அதிகளவு பங்கினைக் கொண்ட 5 நாடுகளின் நாணயக் கூடையையே பயன்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

பெறுமதி கணிப்பீட்டிற்கு கூடை நாணயங்களாக அமெரிக்க டொலர், ஜேர்மன் மார்க், யப்பானிய யென், பிரான்ஸ் பிராங், இங்கிலாந்து பவுண் ஸ்ரேலிங் பயன்படுத்தப்பட்டன. இவற்றிக்கு வழங்கப்பட்ட சதவீத நிறையானது முறையே 42 சதவீதம், ஏனைய மூன்று நாணயங்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் 13 சதவீதம் ஆகும். இவை ஒவ்வொரு நாணயத்தினதும் ஓர் அலகாக மாற்றப்பட்டது. இவ்வாறு மாற்றப்பட்ட அலகு அடுத்த மீளாய்வு வரை நிலையானதாக இருக்கும். சர்வதேச வர்த்தகக் கொடுப்பனவுகள், பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதிப் பெறுமதி கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் இந்நாணயங்களின் ஒதுக்கம் ஆகியவற்றில் குறிப்பிட்ட நாணயங்களின் சார்பளவு முக்கியத்துவத்தின் அடிப்படையிலேயே மேலே குறிப்பிட்ட நிறைகள் இந் நாணயங்களுக்கு வழங்கப்பட்டன. கணிப்பீட்டிற்கு முந்திய மூன்று மாத இலண்டன் நாணய சந்தையில் உள்ள நாணய மாற்று வீத சராசரியே பயன் படுத்தப்பட்டது.

## சிறப்பு எடுப்பனவு உரிமை பெறுமதிக் கணிப்பு

## 30 ஏப்ரல் 1985

| நாணயம் | நாணய அளவு | நாணயமாற்று வீதம் ஏப்ரல் 30 1985 | US டொலர் சம பெறுமானம் |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| யேர்மன் மார்க் | 0.4600 | 3.08700 | 0.149012 |
| பிரான்ஸ் பிராங் | 0.7400 | 9.42600 | 0 078506 |
| யப்பான் யென் | 34.0000 | 251.37000 | 0.135259 |
| பவுண் ஸ்ரேலிங் | 0.0710 | 0.80366 | 0.088345 |
| அமெரிக்க டொலர் | 0.5400 | 1.00000 | 0.540000 |
| மொத்தம் | | | 0.991122 |

சிறப்பு எடுப்பனவு உரிமை 1 = US டொலர் 0.991122
1 US டொலர் = சி. எ. உ. 1.00891

(1) கூடையில் நாணயங்களின் சேர்க்கை. 1981 இல் தீர்மானிக்கப்பட்டவாறு.

(2) நாணய மாற்றுவீதம் ஒரு அமெரிக்க டொலருக்குரிய குறிப்பிட்ட நாணயத்தின் பெறுமதி.

(3) நிரை 1 நிரை 2 ஆல் வகுக்கப்பட்டது.

சிறப்பு எடுப்பனவு உரிமையின் பெறுமதியைத் தீர்மானிக்கும் நாணயங்கள், அவற்றின் தொகை ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கொருமுறையே மீளாய்வு செய்யப்படும். இந்த ஐந்து நாடுகளின் நாணயத்தின் இடத்தினை மற்றொரு நாட்டினது நாணயம் பெற்றுக் கொள்ள வேண்டுமெனில் குறிபிட்ட நாட்டினது ஏற்றுமதி மீளாய்வு காலத்திற்கு முன்னைய ஐந்து வருடகாலப் பகுதியில் தற்போது பட்டியலில் உள்ள ஐந்து நாடுகளில் ஏதாவது ஒன்றினது ஏற்றுமதியை விட ஒரு சதவீதத்தால் அதிகரித்து இருக்க வேண்டும். பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதி, ஏனைய நாடுகளினுல் வைக்கப்பட்டுள்ள உத்தியோக பூர்வமான ஒதுக்க மீதி இவற்றை பிரதிபலிக்கக் கூடிய வகையினுலேயே மீளாய்வின் போது ஒவ்வொரு நாணயங்களுக்கும் நிறை தீர்மானிக்கப்படும்.

# சர்வதேச நாணய நிதியமும் கடன்வசதிகளும்

இ. நந்தகுமாரன்

சர்வதேச நாணய நிதியமானது இன்று வளர்ச்சியடைந்த, வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகள் அனைத்திலும், பேரினப் பொருளாதாரக் கொள்கைகளை வகுக்க உதவுதல், சென்மதி நிலுவை செம்மையாக்கம், சர்வதேசச் சொத்தினைப் பேணல், கடன்வசதிகளை விரிவுபடுத்தல் என்ற வகையில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு சர்வதேச நிறுவனமாகும். 1945 ஆம் ஆண்டு 39 அங்கத்துவ நாடுகளை, குறிப்பாக இன்றைய வளர்ச்சியடைந்த சிலநாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந் நிதியம் கடந்த நான்கு தசாப்தங்களில் பெரிதும் வளர்ச்சி அடைந்துள்ளது. தற்போது 150 இற்கும் மேற்பட்ட அங்கத்துவ நாடுகளையும் 90 மில்லியன் SDR இற்கும் அதிகமான அங்கத்துவ அனுமதிப் பங்குப் பணத்தையும் கொண்டிருக்கிறது. அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கையிலும் அனுமதிப் பங்குப் பணத்திலும் ஏற்பட்ட துரித அதிகரிப்பு நிதியத்தின் வளர்ச்சிக்குச் சான்றாகும். 1982 ஆம் ஆண்டு சர்வதேச ரீதியில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு, படுகடன் சேவைப் பிரச்சனை, சர்வதேச திரவத் தன்மை சிக்கல்களை நிதியம் வெற்றிகரமாகக் கையாண்டது. கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக நிதியம் தனிப்பட்ட நாடுகளினதும் சர்வதேச ரீதியானதுமான பல பிரச்சனைகளை வெற்றிகரமாக முறிடித்துள்ளது. நிதியத்தின் ஒப்பந்த விதிகளில் நெகிழ்வுத்தன்மை அதாவது காலத்திற்கு ஏற்றவகையில் மாற்றங்கள் செய்யக்கூடிய தன்மையே நிதியத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் என்று பலர் கருதுகின்றனர்.

இக்கட்டுரை நிதியத்தின் செயற்பாடுகளை இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஆராய்ந்துள்ளது. முதலாவது பகுதியில் நிதியம் தோன்றுவதற்கு அடிப்படையாக இருந்த சர்வதேச பொருளாதாரச் சூழலையும், நிதியத்தின் நோக்கம் வளர்ச்சி என்பவற்றுடன் அதன் முக்கிய தொழிற்பாடான சிறப்பு எடுப்பனவு உரிமை என்பனவும் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதியில் நிதியத்தின் வளங்கள், காலத்திற்குக் காலம் அங்கத்துவ நாடுகளுக்கு உதவுமுகமாக ஏற்படுத்திய கடன் வசதிகள், அவற்றின் விரிவாக்கம், நிபந்தனைகள், இலங்கை பெற்றுக் கொண்ட கடன்கள் என்பவை ஆரரயப்பட்டுள்ளன.

## பகுதி 1

### 1. நிதியத்தின் தோற்றத்திற்கு ஏதுவாயிருந்த சர்வதேச பொருளாதார சூழ்நிலைகள்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் பொருளியலாளர் மத்தியில் செல்வாக்

குச் செலுத்திய பணக்கணியக் கோட்பாட்டிற்கிணங்க ஒரு நாட்டினது பொது வெளியீட்டு மட்டம், வருமான மட்டம், வழக்கிலுள்ள விலைமட்டம் என்பவற்றைத் தீர்மானிப்பது அந்நாட்டின் பணநிரம்பலே என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. பணநிரம்பலின் அளவானது நாட்டின் இருப்பிலுள்ள தங்கத்தின் அளவால் தீர்மானிக்கப்படும். எனவே, இருப்பிலிருக்கும் தங்கத்தின் அளவில் ஏற்படும் மாற்றம் சென்மதி நிலுவைக் குறை அல்லது மிகையில் உள்ள நாட்டினது விலை, வருமானம், வெளியீட்டு மட்டங்களைப் பாதிப்பதனூடாகச் சென்மதிநிலுவை செம்மையாக்கலுக்கு வழிகோலும் என்று நம்பப்பட்டது.

சென்மதி நிலுவைக் குறையை அனுபவிக்கும் நாடு இருப்பில் உள்ள தங்கத்தைத் தனது வர்த்தகப் பங்காளிக்கு ஏற்றுமதி செய்ய பணநிரம்பல் வீழ்ச்சி அடையும். இதனால் வெளியீடு, வருமானம், விலை என்பவற்றில் வீழ்ச்சி ஏற்படும். எனவே, ஏற்றுமதியை அதிகரித்து இறக்குமதியைக் குறைத்து சென்மதி நிலுவைக் குறைநிலையைச் சீர் செய்யும். இதேபோன்று சென்மதி நிலுவை மிகை நிலையில் உள்ள நாடு தங்கத்தைப் பெற்றுக் கொள்ளும். தங்கத்தின் உள்வருகை பணநிரம்பலை அதிகரிக்க வெளியீடு, வருமானம், விலைமட்டம் அதிகரிக்கும். இதனால் இறக்குமதி அதிகரித்து ஏற்றுமதி வீழ்ச்சியடையும். இதன் விளைவாக மிகைநிலை படிப்படியாக இல்லாதொழியும். நாணயத் தங்கத்திற்கும் உள்நாட்டு பொது விலைமட்டத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினைக் கருத்திற் கொண்டு தங்க நாணயத் திட்டம் (Gold Standard) சென்மதி நிலுவைக் குறை அல்லது மிகை நிலையை தன்னிச்சையாகச் சீர்செய்யும் என்று பெரிதும் நம்பப்பட்டது. இத்திட்டம் 1870 ம் ஆண்டு முதல் 1920 வரை நடைமுறையில் இருந்தது.

கொள்கை அளவில் தங்க நாணய நியமம் சென்மதி நிலுவையைச் சீர் செய்ய வல்லதென்று ஏற்றுச் கொள்ளப்பட்டாலும் நடைமுறையில் எதிர்பார்த்தளவு எளிமையாகத் தங்க நாணயத் திட்டம் செயற்படவில்லை. இந்தத் திட்டத்தின் செயற்பாட்டிற்கு ஒவ்வொரு நாட்டினதும், நாணயத் தேவைக்கு ஏற்ற அளவு தங்கம் ஏற்றுமதி (இறக்குமதி) செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். ஆனால் நாணயத் தங்கத்தின் வளர்ச்சி வீதம் உலக வர்த்தகத்தின் வளர்ச்சி வீதத்தினை விடக்குறைவாக இருந்தது. அத்துடன் சில நாடுகள் அவற்றினுடைய தங்கத்தினுடனை நாணய மாற்று வீதத்தினைப் பொருத்தமற்ற விதத்தில் மிகவும் உயர்வாகத் தீர்மானித்திருந்ததும் தங்க நாணயத் திட்டம் ஒரு நாட்டினது பொருளாதாரச் சமநிலையைக் குலைக்காத முறையில் பொருத்தமான சென்மதி நிலுவையைப் பேண உகந்ததாக இருக்கவில்லை. உதாரணமாக ஐக்கிய இராச்சியம் ஸ்ரேலிங் பவுணில் நாணயமாற்றினைப் பொருத்த மற்றளவு அதி உயர்வாகத் தீர்மானித்திருந்தமைதான் 1920 களில் ஐக்கிய இராச்சியத்தில் ஏற்பட்ட பாரிய வேலையின்மைக்கும் தொடர்ந்துவந்த 1930 களின் உலகப் பொருளாதார மந்தத்திற்கும் காரணமென்று சில பொருளியலாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். தங்க நாணயத்திட்டத்தின் மற்றுமொரு குறைபாடு மூலதன வெளிப்பாய்ச்சலாகும். இதனால் ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, பிரான்ஸ், தங்க உற்பத்தி வலய நாடுகளான பெல்ஜியம், நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து போன்றன மேலதிக பிரச்சனைகளுக்கு உள்ளாகின.

மேற்கூறிய பல்வேறு காரணங்களினாலும் 1930 களின் உலகளாவிய பொருளாதார மந்தம் உருவாகியபோது வர்த்தகம் மிகவும் கீழ் மட்டத்தில் இருக்க தங்க நாணயத் திட்டம் நெருக்கடிக்குள்ளாகி வீழ்ச்சியடைந்தது. நடைமுறையிலிருந்த திட்டத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஒவ்வொரு நாடும் தனது வர்த்தகக் கொள்கையை வகுக்கலாயின. நாடுகள் வர்த்தகத்தினால் பிணைக்கப்பட்டிருந்தபோதும் ஒவ்வொரு நாடும் தனது சுயநலத்தினை மட்டும் கருத்திற்

கொண்டு தனக்குச் சாதகமான நாணயக் கொள்கையைக் கடைப்பிடிக் மூற்பட்டன. இதனுல் உலகப் பொருளாதாரம் உறுதி யற்ற நாணயமாற்று, நாடுகளுக்கிடையே போட்டிமுறையிலாக நாணய மதிப் பிறக்கம், அதிகளவிலாள நாணய மாற்றுத்தடைகள், ஈரிடைக் கொடுப்பனவு ஒழுங்குகள் (Bilateral Payment Agreement) சுயமாக ஒரு நாணயத்தைப் பிறிதொன்றுக்கு மாற்ற முடியாத நிலை (Inconvertibility Currencies) போன்ற பல்வேறு இடையூறுகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியது. இறக்குமதிகளை தடை செய்யவும் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கவும் நேரடியானதும் மறைமுகமானதுமான பல நடவடிக்கைகளை ஒவ்வொரு நாடும் மேற்கொண்டதால் ஒரு நாட்டினது வேலையின்மையை மற்றொரு நாட்டிற்கு ஏற்றுமதிசெய்ய முனைந்தன. தங்க நாணய திட்டத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து சென்மதி நிலுவை சீர் செய்தலுக்கு என்று குறிப்பிடத்தக்க திட்டம் எதுவும் இக்காலப் பகுதியில் இருக்கவில்லை.

1930 களில் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்ற ஆர்வமே 1944ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் நியூகம்சயர் மாநிலத்தில் உள்ள பிரிட்டன்வூட்ஸ் நகரின் மகா நாட்டிற்கு கால்கோளாக இருந்தது. சர்வதேச கொடுக்கல் வாங்கல்களுக்கு நிரந்தரமானதும் சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான ஒரு திட்டத்தினை வைப்பதே இம் மகாநாட்டின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. சர்வதேச கொடுக்கல் வாங்கல்களுக்கு நிரந்தரமானதும் சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான ஒரு திட்டத்தினை வகுப்பதே இம் மகாநாட்டின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. இதில் இங்கிலாந்தில் பொருளியலாளரான ஜே. எம். கெயின்ஸ் ஒரு திட்டத்தினையும், அமெரிக்க திறைசேரியைச் சேர்ந்த எச் டீ. வைற் என்பவர் மற்றுமொரு திட்டத்தினையும் முன் வைத்தனர். கெயின்ஸினுடைய திட்டம் உள்நாட்டு வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி என்பவற்றைப் பாதிக்காத வகையில் சென்மதி நிலுவைச் சமயின்மையைத் திருத்தக்கூடிய வழிவகைகளை எடுத்து விளக்கியது. அத்துடன் சர்வதேசக் கொடுப்பனவிற்குப் பாங்கர் (Bancor) என்ற ஒருவகைச் சொத்து உருவாக்கல் வழி முறையையும் முன்வைத்தது. ஆனல் வைற்றின் திட்டம் முக்கியமாக உள்நாட்டு மொத்தக் கேள்வியை முகாமை செய்வதன் மூலம் சென்மதி நிலுவைச் சமமின்மையைப் போக்க வழிகாட்டியது. தற்காலிக சென்மதி குறையை போக்க அங்கத்துவ நாடுகளிடமிருந்து பெற்ற அங்கத்துவப் பணத்திலிருந்து கொடுப்பனவுகளைச் செய்யவும் சிபார்சு செய்தது. எனினும் பிரிட்டன் வூட்ஸ் மகாநாட்டின் இறுதியில் வெளியான சர்வதேச கொடுக்கல் வாங்கலுக்கான திட்டம் பெருமளவு வைற்றின் திட்டத்தினை ஒத்திருந்தாலும் கெயின்ஸினுடைய பாங்கர் பற்றிய கருத்துக்கள் சர்வதேச நாணய நிதியத்தில் மீண்டும் உருக்கொண்டு சிறப்பு எடுப்பனவு உரிமையாகப் பரிணமித்தது. புதிய திட்டத்தில் சர்வதேச வர்த்தகத்திற்கு உந்து சக்தியைக் கொடுக்கக்கூடிய வகையில் உறுதியான நாணய மாற்றினைப் பேணுவதற்கும், உள்நாட்டில் நிறைதொழில் மட்டம், பொருளாதார வளர்ச்சி என்பவற்றை அடைவதற்கும் வழிமுறைகள் உண்டு என்று நம்பப்பட்டது. அதாவது உள்நாட்டுச் சமநிலை வெளிநாட்டுச் சமநிலை இரண்டையும் ஒரே சமயத்தில் குறிப்பிட்ட நாடு அடைய முடியும் என்று நம்பப்பட்டது. இச் சமநிலையை அடைவதற்கு திட்டத்திலுள்ள கருவிகளாக

1. நிலையான நாணய மாற்றினை தீர்மானித்து நடைமுறைப்படுத்தல், குறுகிய ஒரு சதவீத எல்லைக்குள் நாணய மாற்று வீதத்தினை மாற்றும் அதிகாரம் நாடுகளிடத்தில் இருத்தல், அடிப்படைச் சமமின்மையின்போது நிதியத்தின் ஆலோசனையின் பேரில் புதிய நாணயமாற்று வீதத்தினைத் தீர்மானித்தல்,

2. ஒதுக்குகள் கடன் வசதிகளைப் பயன் படுத்திக் குறுங்கால சென்மதி நிலுவைச் சமமின்மையைப் போக்க நிதியம் உதவுதல்.

3. நடைமுறைக் கணக்கில் நாணய மாற்றுத் தடைகளை நீக்கும் அதேசமயம் தேவைப்படுமிடத்து மூலதன வெளிப் பாய்சலுக்கு நாணய மாற்றுத் தடைகளைப் பின்பற்றுதல் என்பவை எடுத்துக் கூறப்பட்டன.

## (2) நிதியத்தின் நோக்கம்

அங்கத்துவ நாடுகள் பிரிட்டன்வூட்ஸ் மகாநாட்டுக்கு முடிவுகளை நிதியத்தின் ஒப்பந்த விதிகளில் (Article of Agreement) கைச்சாத்திட்டதன்மூலம் ஏற்றுக்கொண்டன. ஒப்பந்த விதிகளில் பின்வரும் நோக்கங்கள் குறிப்பிடப்பட்டு இருந்தபோதும் தொழிற்பட ஆரம்பித்த காலத்திலிருந்தே நாடுகளுக்கிடையிலான சென்மதி நிலுவைச் சமமின்மையைக் குறைப்பதனையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

**நிதியத்தின் நோக்கங்களாவன:**

1. தேசிய சர்வதேசிய செழிப்பிற்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய வழிமுறைகளைப் பின்பற்றாது இருக்க, நிதியத்தின் பொது நிதியத்தில் இருந்து தகுந்த பாதுகாப்பிற்குட்பட்டு, அங்கத்துவ நாடுகளுக்கு நிதி வழங்கி சென்மதி நிலுவையைச் சீர் செய்யச் சந்தர்ப்பம் வழங்கல்.

2. அங்கத்துவ நாடுகளுக் கிடையிலான சமமின்மையின் அளவையும் அதனை அடைவதற்கான காலத்தையும் குறைத்தல்.

3. சர்வதேச நாணய ஒத்துழைப்பை வளர்த்தல்.

4. உலக வர்த்தகத்தினைச் சமநிலையில் வளர்த்தலும் விரிவுபடுத்தலும்.

5. நாணயமாற்று உறுதிப்பாட்டைப் பேணல்.

6. நாடுகளுக்கிடையேயான போட்டி அடிப்படையிலான நாணய மதிப்பிறக்கத்தை தவிர்த்தல்.

மேற்கூறிய 6 நோக்கங்களை நிதியம் கொண்டிருந்த போதும் சென்மதி நிலுவை சமமின்மையைப் போக்குவதன் மூலம் ஏனைய குறிக்கோள்களை இலகுவாக எய்தலாம் என்ற நம்பிக்கையில் நிதியம் உறுதியாக இருந்ததால் அதிலேயே முக்கிய கவனம் செலுத்தி வந்தது. 1970 களின் நடுப்பகுதியில் நிலையான நாணயமாற்றுவீத முறையிலிருந்து நாடுகள் சிறிதுசிறிதாக விலகி மிதக்கவிடல் நாணயமாற்று முறைக்கு மாறிச் செல்லலாயின. இதனையே பிரிட்டன்வூட்ஸ் வீழ்ச்சி என்று குறிப்பிடுவர்.

## சிறப்பு எடுப்பனவு உரிமை

நிதியம் அதனுடைய வளர்ச்சிப்படிமுறையில் பல முக்கியமான கால கட்டங்களைக் கடந்து வந்துள்ளது. அங்கத்துவ நாடுகளின் குறுங்கால நிதித்தேவையை ஈடுசெய்யப் பல்வேறு கடன்வசதிகளை உருவாக்கியுள்ளது. கடன் வசதிகள் அவற்றிலிருந்து கடன் பெறுவதற்கு வேண்டிய நிபந்தனைகள் என்பவற்றை பிறிதொரு இடத்தில் ஆராய இருப்பதால் இங்கு விரிவாக விளக்கவில்லை. இந்த வளர்ச்சியில் 1970 களில் சர்வதேச ரீதியில் தோன்றிய திரவத்தன்மை பிரச்சனைக்குத் தீர்வுகாணும் பொருட்டு நிதியம் உருவாக்கிய சிறப்பு எடுப்பனவு உரிமை (Special Drawing Rights) என்பது பிரிட்டன்வூட்ஸ் அமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட குறிப்பிடத்தக்க தந்திரோபாய நவீனத்துவம் எனலாம். சர்வதேச திரவத்தன்மையை பெருக்குவதற்கான மாற்றம் என்பதைவிட சர்வதேச சொத்துக்களை உருவாக்குவதற்குக் கொண்டு வரப்பட்ட மாற்றம் என்பதே பெரிதும் பொருத்தமாகும். சர்வதேச சொத்துக்களை உருவாக்குவதற்கான வழிகள் இதுவரையில் மூன்றாக இருந்தது.

1. அகழ்ந்த தங்கத்தை நாணயசபைகள் பெற்றுக் கொள்வது.

2. அமெரிக்கா சென்மதி நிலுவைக் குறையைப் பேணுதல்.

3. நிதியத்தில் இருந்து பெறக்கூடிய தொகையை உயர்த்துதல்.

இரண்டாவது வழிமுறை அமெரிக்காவிற்கு வெளியே மத்தியவங்கிகளின் இருப்பில் உள்ள அமெரிக்க நாணயமான டொலரின் தொகையை அதிகரித்தது. ஆனால் சிறப்பு எடுப்பனவு உரிமையானது சர்வதேச ஒதுக்கினை ஏற்படுத்துவதற்கு சில ஒழுங்குக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வருவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தது.

சிறப்பு எடுப்பனவு உரிமையானது பின்வரும் முக்கிய தன்மைகளைக் கொண்டிருந்தது.

1. குறிக்கோளுடன் உருவாக்கப்பட்ட சொத்தொதுக்கமாக இருந்தது.

2. திட்டத்தில் பங்காளிகளாக கலந்து கொண்டவர்களுக்கு அவர்களது அனுமதிப்பங்குக்கேற்ப ஒதுக்கீடு செய்தல்.

3. கடன்களின்மூலம் பிற்துணை அளிக்கப்பட்டவையல்ல.

4. சிறப்பு எடுப்பனவு உரிமை சர்வதேச ரீதியாக வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றீடு செய்யக்கூடியது.

5. நிபந்தனைக்குட்பட்டதல்ல.

6. வெளிநாட்டு நாணயங்களுக்காக மாற்றம் செய்யும் போது புத்தகப் பதிவாக இடம் பெறுகின்றது. இதனால் மொத்த எண்ணிக்கையான சிறப்பு எடுப்பனவு உரிமையின் தொகையில் வீழ்ச்சி ஏற்படாது.

7. ஆரம்பத்தில் தங்கத்தின் பெறுமதி அடிப்படையில் சிறப்பு எடுப்பனவு உரிமையின் பெறுமதி கணிக்கப்பட்டாலும் 1974 இன் பின்னர் நியமகூடை நாணயங்களின் அடிப்படையில் பெறுமதி கணிக்கப்பட்டது. (பெறுமதி கணிக்கும் வீதத்திற்கு பின்னிணைப்பைப் பார்க்கவும்).

8. சிறப்பு எடுப்பனவு உரிமையில் சொத்துக்கள் பரிமாற்றம், வட்டி வீதத்தினைக் கொண்டுள்ளது. வட்டி மேலதிக சிறப்பு எடுப்பனவு உரிமையிலேயே வழங்கப்படும்.

9. பொதுக்கணக்கில் இருந்து முன்னர் பெற்றுக் கொண்ட தொகையை திருப்பிச் செலுத்த சிறப்பு எடுப்பனவு உரிமையைப் பயன்படுத்தலாம்.

சிறப்பு எடுப்பனவு உரிமையானது சென்மதி நிலுவை தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட போதும் சில குறிப்பிடத்தக்க சூழ்நிலையில் கடந்த காலக் குறைநிலையின் பொருட்டு உருவாக்கப்பட்ட நாணயப் பொறுப்புக்களை மீளப்பெறவும் பயன்படுத்தலாம் ஆனால் ஒதுக்கங்களின் சேர்க்கையின் தன்மையினை மாற்றுவதற்குப் பயன்படுத்தமுடியாது.

## பகுதி 2

## நிதியத்தின் வளங்கள்

நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள், பொதுத் திணைக்களம், சிறப்பு எடுப்பனவு உரிமைத் திணைக்களம் என்னும் இரண்டு திணைக்களங்களினூடாகச் செயற்படுத்தப்படுகின்றது. பொதுத் திணைக்களம் நான்கு கணக்குகளைக் கொண்டு இருக்கின்றது. இவற்றுள் நிதியத்தின் பொதுவளங்களைக் கொண்டிருக்கும் அதிகளவு கொடுக்கல் வாங்கல்களை நடைமுறைப்படுத்தும் பொதுவளக் கணக்கு [Ceneral Resources aecount (GRA)] மிகவும் முக்கியமானதாகும். சிறப்பு எடுப்பனவு உரிமையை உள்ளடக்கிய கொடுக்கல் வாங்கல்கள் சிறப்பு எடுப்பனவு உரிமைத்

திணைக்களத்தினூடாகவும் இரண்டு வளங்க ளையும் உள்ளடக்கிய கொடுக்கல் வாங்கல் கள் இரண்டு திணைக்களங்களினூடாகவும் செயற்படுத்தப்படுகின்றது. இவற்றைவிட அங்கத்துவ நாடுகளின் சார்பாகவும் நிதியம் கணக்குகளைப் பேணி வருகின்றது. (உ+ம் நம்பிக்கை நிதியம்) மொத்தமாக நிதியம் அங்கத்துவ நாடுகள் செலுத்தும் அங்கத்து வப் பணம், சிறப்பு எடுப்பனவு உரிமை, தங்கம் என்பவற்றை வளங்களாகக் கொண் டுள்ளது. இதனைவிட தேவைக்கேற்ப நாடு களிடமும் அவற்றின் நிதி நிறுவனங்களி லிருந்தும் கடன்பெறத் தகுதி பெற்றுள்ளது. கடன்மூலம் பெறப்படும் வளங்களும் நிதியத் தின் தொழிற்பாட்டிற்குப் பெரிதும் உதவு கின்றது. மேலும் சிறியதொரு தொகையை முதலீடுகளிலிருந்து வருமானமாகவும் கொடுத்த கடன்களிலிருந்து பெறும் வட்டி யாகவும் பெற்று வளங்களுக்குச் சேர்த்துக் கொள்கின்றது, ஆயினும் நிதியத்தின் பிர தான வளமூலம் அங்கத்துவ அனுமதிப் பங்குப் பணமும், பிற நிதிமூலங்களிலிருந்து பெறும் கடன்களுமேயாகும்.

ஒரு நாடு நிதியத்தில் அங்கத்துவம் பெற் றதும் நிலவுகின்ற அனுமதிப்பங்கு அமைப் பிற்கு உட்பட்டதாக குறிப்பிட்ட நாட்டினது பொருளாதார வளர்ச்சி, தேசிய உற்பத்தி, வர்த்தக நடவடிக்கைகள் போன்ற பொரு ளாதார செயலாற்றங்களைக் கருத்திற் கொண்டு அனுமதிப்பங்கு ஒதுக்கப்படும். 1986 இல் மொத்தக் அனுமதிப்பங்கின் சிறப்பு எடுப்பனவு உரிமை 89987 மில்லியன் ஆகும். இதில் 62 சதவீதம் இருபது வளர்ச்சி யடைந்த கைத்தொழில் நாடுகளிடத்திலும் மிகுதி 38 சதவீதம் நூற்றிமுப்பத்தொரு வளர்முக நாடுகளிடத்திலும் ஒதுக்கப்பட்டி ருந்தது. வளர்ச்சியடைந்த நாடுகளினும் மொத்த அனுமதிப் பங்கில் 20 சதவீதம் அமெரிக்காவிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இலங் கையின் அனுமதிப்பங்கு சிறப்பு எடுப்பனவு உரிமை 2231 மில்லியனாகும். ஒரு நாட் டினது அனுமதிப்பங்கு அளவே அந்நாட் டின் வாக்களிக்கும் சக்தி, சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்கு, நிதியத்தின் வளங்களில் இருந்து பெறக்கூடிய கடன் வசதிகள் என் பவற்றைத் தீர்மானிக்கும். வளர்ச்சி அடைந்த கைத்தொழில் நாடுகள் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கு அனுமதிப்பங்கினை கொண்டிருப்பதால் அவற்றின் செல்வாக்கு அதிகரித்தே காணப்படுவது இயல்பாகும். அனுமதிப்பங்கு பற்றிய மீளாய்வு குறைந்தது ஐந்து வருடத்திற்கு ஒருமுறை செய்யப்படும். நிதியத்திற்கு செலுத்தும் அங்கத்துவப் பணத் தில் 25 சதவீதத்திற்குக் குறையாமல் நிதியத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற நாட்டு நாணயங்களிலோ அல்லது சிறப்பு எடுப்பனவு உரிமையிலோ செலுத்தவேண் டும். மிகுதியை குறித்த அங்கத்துவ நாட் டினது நாணயத்தில் செலுத்த வசதியுண்டு.

பிற நாடுகளிலிருந்து நிதியம் பெற்றுக் கொள்ளும் நிதி வளங்கள் நிதியத்தின் தற் காலிகமாக வளங்களாகக் கணிக்கப்படுகின் றது. பெறுகைக்கான பொது ஏற்பாட்டில் (General Agreement to Borrow – GAB) கீழ் 1962 இல் முதலாவதாக நிதியம் அங் கத்துவ நாடுகளிலிருந்து வளங்களைக் கடனா கப் பெற்றது. முதன்முதலில் நான்கு வரு டங்களுக்கே இது செல்லுபடியானதாக இருந்தாலும் பின்னர் ஏற்பாட்டின் முடிவு காலத்தில் ஒவ்வொரு முறையும் இது புதுப் பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் GAB யின் கீழ் பெற்றுக் கொண்ட வளங்கள் பத்துக் கைத் தொழில் நாடுகளுக்கு மட்டுமே கிடைக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் இந்த ஏற்பாடு மீளாய்வு செய்யப்பட்டு விரிவாக்கப்பட்ட தைத் தொடர்ந்து இவ் ஏற்பாட்டில் பங்கு பற்றாத ஏனைய அங்கத்துவ நாடுகளும் நிதி வளங்களைப் பெறலாம். எனினும் சென்மதி நிலுவை சமநிலையைப் பேண நிதியத்தினால் முன்வைக்கப்பட்ட திட்டங்களை அந்நாடுகள் பின்பற்றுகின்றன. இதனைவிட நிதியம் மேலும் 14 அங்கத்துவ நாடுகளுடன் ஈரி டைப் பெறுகை ஒழுங்குகளையும் செய்து உள் ளது. இவ்வேற்பாட்டின் மூலம் பெறப்படும் வளங்கள் குறைநிரப்பு நிதிவசதியின் கீழ் அங்கத்துவ நாடுகள் கடன் பெறப்பயன்படுத் தப்படுகின்றது.

## வளங்களின் பயன்பாடு

திரட்டிய வளங்களான பிறநாட்டு நாண யங்கள் அல்லது சிறப்பு எடுப்பனவு உரிமை அங்கத்துவ நாடுகளின் நாணயத்திற்கு மாற்றீடு செய்வதன் மூலமே அங்கத்துவ நாடுகளுக்கு வளங்கள் கிடைக்கச் செய்கின்றது. எனவே இதனைக் கொள்வனவு என்று குறிப்பிடுதல் வழக்கமாகும். இவை கடன்பெறுகைகள் இல்லாவிட்டாலும் இத் தொழிற்பாட்டின் பொருளாதாரத் தாக்கம் கடன் பெறுவதால் ஏற்படும் தாக்கத்திற்குச் சமமாகும். நிதியம் தன்வசம் உள்ள வளங்களை அங்கத்துவ நாடுகளுக்கு விற்பனை செய்யும்போது நிதியத்தின் வளங்களின் மொத்த அளவில் மாற்றம் ஏற்படாது. ஆனல் அதன் சேர்க்கையில் வித்தியாசம் ஏற்படும். நிதியம் இவ்வாறு விற்பனை செய்யும் வளங்கள் குறிப்பிட்ட காலப் பகுதிக்கே கிடைக்கும். கொள்வனவு செய்த அங்கத்துவ நாடு அக் கால எல்லைமுடிவில் ஏனைய நாட்டு நாண யங்கள், சிறப்பு எடுப்பனவு உரிமை இவற்றைக் கொண்டு குறிப்பிட்ட நாட்டின் நாண யத்தை மீள் கொள்வனவு (Repurchase) செய்தல் வேண்டும். மீள் கொள்வனவானது கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குச் சமமானதாகும்.

அங்கத்துவ நாடுகளின் சென்மதி நிலுவை பிரச்சனையைத் தீர்ப்பதற்காகவே நிதியத்தின் வளங்கள் அங்கத்துவ நாடுகளுக்குவழங்கப்படுகின்றது. பொதுவான சென்மதிநிலுவைப் பிரச்சனைக்கு நிரந்தரமான கொள்கைகளினூடாக (Permanent Poiicies — trenche policies) சில குறிப்பிட்ட தேவைகளுக்கான நிரந்தர வசதிகளினூடாகவும் (permanent facilities) (உ. ம்) நட்ட ஈட்டு நிதிவசதி (Compensatory financing facility – CFF) விரிவாக்கப்பட்ட வசதி (Extended Facility), தற்காலிக வசதிகளினூடாகவும் (உ. ம்) எண்ணெய் வசதி (Oil facility), குறை நிரப்பு நிதி வசதி (Supplementary financing facility), நிதிவளங்களை அங்கத்துவ நாடுகளுக்குக் கிடைக்கச் செய்கின்றது. நிரந்தரக் கொள்கை, நிரந்தர, தற்காலிக வசதிகளினூடாகக் கடன் பெற அங்கத்துவ நாடு நிதியத்திடம் செல்லும்போது நிதியம் முன் வைக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படச் சம்மதம் தெரிவிக்கும்போது கடன்களை ஓரே முறையிலோ அல்லது பகுதிபகுதியாகவோ (Stand by arrangement) பெற்றுக் கொள்ளக் கூடியவகையில் ஏற்பாடு செய்யப்படும்.

## ஒதுக்குத் தொகுதி (Reserve Tranche)

ஒரு அங்கத்துவ நாடு ஒதுக்குத் தொகுதியின் கீழ் கடன்பெறத் தகுதி உண்டா இல்லையா என்பதைத் தீர்மானிக்க

1. நிதியத்தின் பொதுவளக் கணக்கில் உள்ள குறிப்பிட்ட நாட்டினது நாண யம்,
2. கொள்வனவு வசதிகளின்கீழ் ஏற்பட்ட கொள்வனவுகளால் நிதியத்தில் இருப்பு வைத்த அந்நாட்டு நாணயத்தின் அளவு.
3. அங்கத்துவ நாட்டினது அனுமதிப் பங்கு என்பவை கவனத்திற் கொள்ளப்படும்.

பொதுவளக் கணக்கில் உள்ள குறிப்பிட்ட நாட்டினது நாணயத்திலிருந்து கொள்கைகள் வசதிகளின் கீழ் ஏற்பட்ட கொள்வனவால் எழுந்த அந்நாட்டு நாணயத்தின் அளவினைக் கழிக்கவரும் தொகை அந்நாட்டினது அனுமதிப் பங்கைவிடக் குறைவாக இருந்தால் மட்டுமே இத்தொகுதியின் கீழ் அங்கத்துவ நாடு கடன் பெறத் தகுதி உடையதாகும். இந்த ஏற்பாட்டினையே 1978 ஏப்பிரலுக்கு முன்னர் தங்கத் தொகுதி (Gold Tranche) என்று குறிப்பிட்டனர். இதன் கீழ் நிதியத்திடமிருந்து வளங்களைப் பெற முற்படும்போது குறிப்பிட்ட நாடு சென்மதி நிலுவைக் குறையை அனுபவிக்கின்றது என்பதை உறுதி செய்ய வேண்டும். இருந்தாலும் நிதியத்தினுல் எத்தகைய நிபந்தனை

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)

யும் விதிக்க வழியில்லை. ஏனெனில் இத் தொகுதியின் கீழ் அங்கத்துவ நாடு வளங் களைப் பெறுவது தனது சொந்த ஒதுக்கி லிருந்து பெறுவதுபோலாகும்.

## கடன் தொகுதி (Credit tranche)

இதுவே நிதியத்தின் வழமையான அல்லது அடிப்படை நிதிவழங்கும் கொள்கை என லாம். கடன் வசதிகள் நான்கு தொகுதி களில் கிடைக்கும். ஒவ்வொரு தொகுதியும் அங்கத்துவ நாட்டினது கோட்டாவின் 25 சத வீதமாக இருக்கும். இதில் முதல் 50 சத வீதமான கொள்வனவு குறைந்தளவு நிபந் தனைக் குட்பட்டது. சென்மதி நிலுவை பிரச்சனையை முறியடிக்க பொருத்தமான வேலைத் திட்டம் ஒன்றினை சமர்ப்பிக்க வேண் டும். நிதியம் வளங்களை ஒரே தவணையில் கிடைக்கச் செய்யும். அத்துடன் செயல் நிறை வேற்றுத் தத்துவங்கள் (performance criteria) முன்வைக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் 50 சத வீதத்திற்கு மேற்பட்ட தொகுதியில் கடன் பெறும்போது உயர்ந்த நிபந்தனைக்கு உட்பட்டே கடன் பெற வேண் டும். பொதுவாக தொகுதி தொகுதியாகவே கடன் கிடைக்கும். அங்கத்துவநாடு நிதியத் திற்கு வழங்கிய வேலைத் திட்டத்தினை செயற்படுத்தி சென்மதி நிலுவை சமமின்மை யைக் குறைப்பதில் முன்னேற்றம் காணும் பட்சத்திலேயே கடனைத் தருவதற்கு நிதியம் இணங்கிய தொகையில் ஒரு பகுதியை அங் கத்துவ நாட்டிற்கு வழங்கும்.

## விரிவாக்கப்பட்ட நிதி வசதி (Extended Fund Facility)

உற்பத்தி வியாபார அமைப்பு என்பவற் றைப்போன்ற அமைப்பு ரீதியான காரணி களினால் சென்மதி நிலுவைப்பிரச்சினை ஏற் படலாம். இத்தகைய பிரச்சனைகளை முறி யடிக்க முன்வைக்கும் காரணிகளினால் வெளி யீட்டில், வேலையின்மையில் வீழ்ச்சி ஏற்பட லாம். இந்த வீழ்ச்சியைக் குறைந்த பட்ச மாக வைத்திருக்க வெளி உதவி அவசிய மாகும். இதற்காக நிதியம் கடன்தொகுதி யின் கீழ் விரிவாக்கப்பட்ட நிதிவசதியை வழங்குகின்றது. இந்த நிதி வசதி 1974 செப்ரெம்பரில் உருவாக்கப்பட்டது. இந்த நிதிவசதி அமைப்பு ரீதியான பிரச்சனையால் சென்மதி நிலுவை அனுபவிக்கும் அங்கத்து நாடுகளுக்கு மட்டுமல்லாமல் பலவீனமான சென்மதி நிலுவையினால் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியாமல் இருக்கும். அங்கத் துவ நாடுகளுக்கும் நிதியம் வழங்கி வருகின் றது. இக்கடன் வசதியைப் பெற மூன்றாண்டு இடைக்கால வேலைத் திட்டம் ஒன்றினையும் முதல் வருடத்திற்கும் அடுத்த பன்னிரெண்டு மாதத்திற்கும் நடைமுறைப்படுத்தவுள்ள கொள்கைகளின் விரிவான விளக்கமும் நிதி யத்திற்கு ஒப்படைக்க வேண்டும். இவ்வசதி யின் கீழ் அனுமதிப்பங்கின் 140 சதவீதம் வரை சாதாரண வளங்களிலிருந்து பெற்று கொள்ளலாம். குறிப்பிட்ட கொள்வனவினை நாலரை ஆண்டின் இறுதியில் மீள்கொள் வனவினை ஆரம்பித்து பன்னிரெண்டு அரை யாண்டு தவணைகளாக மொத்தம் பத்து வருடத்தில் வசதியைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

## நட்டஈட்டு நிதிவசதி (Compensatory Financing Facility)

அங்கத்துவ நாட்டினது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளின் செல்வாக்கால் ஏற்றுமதி வருமானத்தில் ஏற்படும் வீழ்ச்சி யின் காரணமாக தற்காலிகமாக ஏற்படும் சென்மதி நிலுவை குறைநிலையைச் சரி செய் யவே இக்கடன் வசதி வழங்கப்படுகின்றது. 1963 இல் முதன் முதலாக நடைமுறைப் படுத்தப்பட்டது. கொள்கை அடிப்படையில் எல்லா அங்கத்துவ நாடுகளுக்கும் இந்தவசதி உரியதானாலும், முக்கியமாக முதல் விளைவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் அங்கத்துவ நாடுகளுக்கே வழங்கப்படுகின்றது. ஆரம்பத் தில் வர்த்தக ஏற்றுமதிப் பொருட்களின் வருவாயில் ஏற்படும் வீழ்ச்சியை மட்டுமே கருத்திற் கொண்டு இக்கடன் வசதி வழங் கப்பட்டது. 1979 இலிருந்து சேவைகளும்

[illegible library stamp]

உள்ளடக்கப்பட்டுள்ளது. 1981 முதல் தானிய விலையில் ஏற்படும் கூர்மையான விலையேற்றத்தால் ஏற்படும் அதிகரித்த செலவினங்களினால் உருவாகும் சென்மதி நிலுவைக் குறையை நிதிப்படுத்தவும் இவ்வசதி விரிவாக்கப்பட்டது. இந்த வசதியை வழங்கும் போது நிபந்தனைகள் அதிகம் விதிக்காவிட்டாலும் அங்கத்துவ நாடு நிதியத்துடன் இணைந்து சென்மதி நிலுவை சமமின்மையைப் போக்கப் பொருத்தமான தீர்வினைக் கண்டறிந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணத்திற்கு அமைய எதிர்பார்க்கின்ற ஏற்றுமதி வருமான வீழ்ச்சி, மேலதிக தானிய இறக்குமதி செலவினம் கணிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்ட பின்னரே வசதி ஏற்பாடு செய்யப்படும். இரண்டையும் ஒருங்கிணைத்த திட்டத்தின் கீழ்ப் பெறப்படும் வசதியின் தொகை வெளிநிற்கும் கொள்வனவுக் கோட்டாவின் 105 சதவீதத்திற்கு மேலாக அமையாது. கொள்வனவு தேதியிலிருந்து மூன்று அல்லது ஐந்து வருடங்களில் மீள்கொள்வனவு செய்யவேண்டும்.

## தாங்கிருப்பு நிதிவசதி
**(Bnfferstock financing facilities)**

இது 1989 இல் ஏற்படுத்தப்பட்டது. ஏற்றுமதி விலையில் பாரிய தளம்பல் ஏற்படாமல் பாதுகாக்கவே இந்த நிதிவசதி வழங்கப்படுகிறது. சர்வதேச தாங்கிருப்பு திட்டத்தின் கீழ் ஏற்றுமதி வருமானத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தினை பேணுவதற்காக அங்கத்துவ நாடுகள் வழங்க வேண்டிய நிதிவளங்களின் செலுத்துவதற்கு பங்கினை நிதியம் உதவி செய்கின்றது. கோட்டாவின் 45 சதவீதத்தினைக் கொள்வனவு செய்யமுடியும். தற்போது நிதியம் சர்வதேச இயற்கை இறப்பர் ஒப்பந்தம் ஆறுவது சர்வதேச தகர ஒப்பந்தம் இவற்றில் கைச்சாத்திட்ட அங்கத்துவ நாடுகளுக்கு அவற்றின்து கொடுப்பனவு பங்கினை செலுத்துவதற்கு நிதி வழங்குகின்றது.

## குறைநிரப்பு நிதிவசதி
**(Supplementary Financing Facility)**

1970களிலிருந்து விரிவடைந்து செல்லும் சென்மதி நிலுவை சமமின்மையின் காரணமாக அங்கத்துவ நாடுகளுக்குச் சார்பளவில் அவற்றின் கோட்டாவினைவிட அதிகளவு நிதி தேவைப்படலாயிற்று. இதனால் 1979 இல் இவ்வசதி உருவாக்கப்பட்டது. தற்காலிகமாகவே நடைமுறைப்படுத்தப்பட்டது. மூன்று வருடங்களுக்கு மட்டுமே செல்லுபடியானதாக அமைந்தது. இவ்வசதியின் கீழ் எஞ்சிய வழங்கல் வேறு வளங்களிடத்தில் பிரதியிடப்பட்டது. கோட்டாவின் அளவினைவிட சார்பளவில் பெரிய அளவிலான சென்மதி நிலுவைக் குறைவைக் கொண்டுள்ள அங்கத்துவ நாடுகளுக்கு தொடர்ந்தும் நிதி வழங்குவதை உறுதிப்படுத்த 1981 இல் இவ்வசதி மேலும் விரிவாக்கப்பட்டது. இதனை விரிவாக்கப்பட்ட வாய்ப்பளிக்கும் கொள்கை (Enlarged Access Policy என்பர். நிபந்தனைகளை பொறுத்தஅளவில் குறைநிரப்பு நிதிவசதிக்கும் விரிவாக்கப்பட்ட வாய்ப்பளிக்கும் கொள்கைக்கும் பெருமளவு வேறுபாடிருக்கவில்லை. அங்கத்துவ நாட்டின் சென்மதி நிலுவைத் தேவையின் தன்மையைப் பொறுத்து விரிவாக்கப்பட்ட வாய்ப்பளிக்கும் கொள்கையின் கீழ் பெறும் நிதி அளவானது வேறுபடும். எனினும் மூன்று ஆண்டு மொத்தக் கூட்டுத் தொகை கோட்டாவின் 450 சத வீதத்திற்கு மேலாக இருக்கமுடியாது.

## எண்ணெய் வசதி (Oil Facility)

1974 இலும் 1975 இலும் இவ் வசதி எண்ணெய் விலையேற்றம் காரணமாக இறக்குமதிச் செலவினததில் ஏற்பட்ட அதிகரிப்பினல் எழுந்த சென்மதி நிலுவை இடைவெளியை சீர் செய்ய வழங்கப்பட்டது. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளிலிருந்து கடன்களைப் பெற்று இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு இதனை நிதியம் வழங்கியது. இந்த வசதி முடிவடைந்தபோது 55

அங்கத்துவ நாடுகள் சிறப்பு எடுப்பனவு உரிமை 6·9 பில்லியனைத் கொள்வனவு செய்திருந்தன.

## அமைப்பு ரீதியான செம்மையாக்கல் வசதி
**(Structural Adjustment Facility)**

பொதுத் திணைக்களத்தின் இரண்டாவது கணக்கான விசேட எடுப்பனவு கணக்கினுள் 1986 இல் அமைப்பு ரீதியான செம்மையாக்கல் வசதி ஏற்பாடு செய்யப்பட்டது. நம்பிக்கை நிதியிலிருந்து பெற்றுக் கொண்ட கடன் திருப்பிச் செலுத்துகையால் 1985 – 91 வரை திரட்டப்படும் மொத்தத் தொகையான சிறப்பு எடுப்பனவு உரிமை 2.7 பில்லியன் இவ்வசதிக்கான அடிப்படை மூலதனமாகப் பயன்படும். உலக வங்கியின் அங்கமான சர்வதேச அபிவிருத்தித் தாபனத்திலிருந்து சலுகை அடிப்படையில் கடன் பெறத் தகுதி வாய்ந்த குறைந்த வருமானம் பெறும் அங்கத்துவ நாடுகளுக்கு சென்மதி நிலுவை செலுத்துகைக்கு உதவி செய்யவே இவ்வசதி ஏற்படுத்தப்பட்டது. கோட்டாவின் 6·35 சதவீதம் பெறக்கூடியதாக இருக்கும். மூன்றாண்டு காலத்திற்கு இவ்வசதி வழங்கப்படும். அரைச் சதவீத வட்டியுடன் 5½ முதல் 10 வருடத்தில் சமமான அரையாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாகத் திருப்பிச் செலுத்த வேண்டும். 1987 இல் நிறைவேற்றுச் சபை விரிவாக்கப்பட்ட அமைப்பு ரீதியான சீராக்கல் வசதியை (Enlarged Structural Adjustment Facility) அங்கீகரித்தது.

மேற்கூறிய வசதிகள் யாவும் நிதியத்தின் பொது வளத்திலிருந்து அங்கத்துவ நாடுகளுக்காக நிதியம் நிர்வகிக்கும் வேறு நிதி வளங்களிலிருந்து வசதிகளை ஏற்பாடு செய்துள்ளது. அவ்வாறு 1970 களில் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு வசதிகளே நம்பிக்கை நிதியம், எண்ணெய் வசதி மானியக் கணக்கு ஆகும். 1980 இல் குறைநிரப்பு நிதி வசதி மானியக் கணக்கு என்று மற்றொரு வசதியினை ஏற்பாடு செய்தது. நம்பிக்கை நிதியம் இருப்பிலுள்ள தங்கத்தை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கப்பட்ட வருவாயை அங்கத்துவ நாடுகளுக்கு கடன்களாகவும் நன்கொடையாகவும் வழங்கு உருவாக்கப்பட்டது. எண்ணெய் விலை ஏற்றத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட அங்கத்துவ நாடுகளுக்கு உதவும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்டது, இக்கணக்கில் இருந்து வளங்கள் யாவும் 1983 இல் முற்றாக வழங்கப்பட்டு விட்டது. 1980 இல் உருவாக்கப்பட்ட மானியக் கணக்கு நிதியத்தின் குறைநிரப்பு வசதியின் கீழ் கொள்வனவு செய்யும் நாடுகளினது வட்டிக் கொடுப்பனவினைக் குறைக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டது. இதற்கான வளங்கள் நன்கொடைகள் நம்பிக்கை நிதியத்திலிருந்து பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்திய முதல், வட்டி, முதலீட்டிலிருந்து பெற்ற வருமானம் கடன்கள் மூலம் பெறப்பட்டது.

இலங்கை நிதியத்திடமிருந்து பெற்ற கடன்களைக் கீழேயுள்ள அட்டவணை எடுத்துக் காட்டுகின்றது.

## இலங்கை சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து பெற்றுக் கொண்ட கடன் வசதிகள் 1988 ஆவணி, 31 இல் உள்ளபடி (ஐ. அ. டொ. மில்லியன்களில்)

| | | கொள்வனவு | மீள்கொள்வனவு |
|---|---|---|---|
| 1. | நட்டஈட்டு நிதிவசதி | 271.9 | 163.1 |
| 2. | தாங்கிருப்பு நிதிவசதி | 5.8 | 5.8 |
| 3. | எண்ணெய் வசதி | 77.6 | — |
| 4. | கடன் தொகுதி | | |
| | அ) சாதாரண வளங்கள் | 273.2 | 248.6 |
| | ஆ) விரிவாக்கப்பட்டது | 17.2 | 5.6 |
| 5. | விரிவாக்கப்பட்ட வசதி | | |
| | அ) சாதாரண வளங்கள் | 260.3 | 152.2 |
| 6, | அமைப்பு ரீதியான செம்மையாக்கல் நிதி வசதி | 44.6 | — |
| 7. | நம்பிக்கை நிதியக் கடன் | 14.9 | — |

ஆதாரம்: சர்வதேச நிதி புள்ளி விபரம் செப்ரெம்பர் 1988.

## REFERENCE


1. The role and function of the International Monetory Fund.
2. International Monetory Fund Annual Report 1981, 1988.
3. International Financial Statistics. Vol- XII Nnmber 9 Sep., 1988.
4. World Finance and Adjustment. An Agenda for Reforms. Graham Bird 1985,
5. Balance of Payment Adjustment 1945 to 1986.
6. The IMF Experience — Margaret Garritren de Vries. 1988
7. International Macro Economics. Graham Birt 1987.
8. IMF Survey Vol. 10 January 12, 1981
9. Financ & Development Funds Quarterly Publication — Various Issues.

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)

# பொருளியலாளன்

மார்ச் 1989

## வினாவிடைத் தொகுதி 2

( இலவச இணைப்பு )

இளம் பொருளியலாளர் நிறுவனம்

*With the best compliments*
*from*

# SAL SABIEL

Main Street
ooddamavady,
Valaichenai.

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)

# வரவு செலவுத் திட்டம்

## 1988

வினா: 1.

I) இலங்கை போன்றதொரு கலப்புப்பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் பொருளாதாரப் பங்கு என நீர் கருதுவது யாது?

இத்தகைய கலப்புப் பொருளாதாரங்களில் சந்தைப் பொறிமுறையினுல் நிறைவேற்றப்பட முடியாத விடயங்களை நிறைவேற்றுவதில் அரசின் பங்கு அவசியம் எனக் கருதப்படுகிறது. அத்தகைய நடவடிக்கைகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1) சந்தைத் தொழிற்பாட்டுக்கு உட்படாத பொதுப்பொருட்கள், சேவைகளை அரசாங்கமே வழங்கவேண்டியுள்ளது.

உதாரணம்:- வீதி வெளிச்சம், பொது நூலகசேவைகள், பொதுப்பாதுகாப்புக்கள்.

2) எல்லா மக்களுக்குமுரிய அடிப்படையான பொதுசமூக நலன்பேணும் சேவைகளை இலவசமாக வழங்கவேண்டியுள்ளது.

உதாரணம்: இலவசக்கல்வி, இலவச சுகாதாரம், வறியோருக்கான உணவு முத்திரை

3) பேரினப்பொருளாதார மாறிகளை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

உதாரணம்: பணவீக்கத்தைக் குறைத்தல், சென்மதிநிலுவையை சமநிலைப்படுத்தல், தொழில் வாய்ப்பை விரிவுபடுத்தல்.

4) நாட்டின் வருமான சமமின்மையைக் குறைத்து சமநீதியைப் பேணுதல்.

உதாரணம்: செல்வந்தர் மீதான வரிவிதிப்புக்களும் ஏழைகளுக்கான மானியங்களும்

5) பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஊக்குவித்தல்

உதாரணம்; தனியார் முதலீடு, அரசமுதலீடு என்பவற்றை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துதல்.

6) தேசிய நன்மை கருதி தனியார் துறையினை ஒழுங்குபடுத்துவதில் அரசாங்கம் தலையிடவேண்டியுள்ளது.

உதாரணம்: தனியுரிமை வளர்ச்சியைக் குறைத்தல், சூழல் மாசடைவதைக் கட்டுப்படுத்தல்,

**(பரீட்சையில் இவ்வினாவுக்கு ஐந்து புள்ளிகள் ஒதுக்கப்பட்டால் இவற்றுள் யாதாயினும் மூன்று விடயங்கள் மாத்திரம் விளக்குதல் போதுமானது. பதிலாக பத்துப்புள்ளிகள் ஒதுக்கப்பட்டால் குறைந்தது ஐந்து விடயங்களை விளக்கவேண்டும். என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.)**

வினா 2)

தனியார் முதலீட்டை மேம்படுத்துவதற்கு பாதீட்டுக் கொள்கையை ஓர் அரசாங்கம் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விளக்குக.

தனியார் முதலீடுகளினால் நிரப்பப்பட முடியாத பின்னணித் துறை சார்ந்த ஊக்குவிப்புக்களை வழங்குவதுடன் தேவையான பல்வேறு சலுகைகளையும் அதிகரிப்பதில் அரசாங்கம் அக்கறை காட்டும், இவற்றைத் தனது ஒழுங்குமுறையான பாதீட்டின் செலவுகள், வரிமுறைகள் மூலமாக மேற்கொள்கின்றது. அவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1) தனியார் துறைக்கு ஊக்கமளிக்கத்தக்கதாக பொருளாதார உள்ளமைப்பு வசதிகளில் அரசு தன் முதலீடுகளை அதிகரிக்கும்.

உதாரணம்: பாதைகள் அமைத்தல், மின்சார அமைப்புக்களை ஏற்படுத்தல், தொலைத்தொடர்புவசதிகளை ஏற்படுத்தல், ஆராய்ச்சி நிறுவனங்களை ஏற்படுத்தல்.

2) உற்பத்தியாளருக்கான செலவுகளை ஈடுசெய்யும் வகையில் மானியம் வழங்கும்

3) முதலீட்டாளருக்கென வரிச்சலுகைகள், வரிவிடுதலைகள் என்பவற்றை அறிமுகப்படுத்தல்.

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)



4) சந்தைப் பாதுகாப்பு வழங்குவதற்காக இறக்குமதிப் பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வைக் கட்டணங்களை அதிகரித்தல்.

5) தனியார்துறைக்கு வங்கிகள் அதிக நிதியை வழங்கும் படி செய்வதற்கு அரசாங்கம் அவற்றில் தான் பெறும் கடன் களைக் குறைக்க முயலும்.

6) முதலீட்டு விருப்பத்தினை அதிகரிக்கும் வகையில் பேரின பொருளாதார உறுதியை பாதுகாப்பதற்குரிய நடவடிக்கை களில் கவனம் செலுத்தல்.

**(இதில் ஐந்து புள்ளிகளாயின் இவற்றுள் யாதாயினும் மூன்று விடயங்களை மாத்திரம் விளக்குக. பத்துப் புள்ளிகள் தரப்பட்டால்யாதேனும்ஐந்துவிடயங்களை விளக்குதல்வேண்டும்.)**

விடை:

3. பின்வரும் கூற்றுக்களின் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது? தடித்த எழுத்திலுள்ள பதங்களில் விசேட கவனம் செலுத்தவும்.

1) 1986 ல் அரசாங்க பிசுக்கால் (அரசிறை) இயக்கப்பாடு களின் **விரிவாக்கற்தாக்கம்** 3047 மில்லியன் ஆகும்.

ii) அண்மை ஆண்டுகளில் அரசாங்க வரவு செலவுத்திட்டப் பற் றுக் குறைகளுள் அரைப் பங்கிற்கும் **மேலானவை** வெளிநாட்டு நிதியை நாடுவதன் மூலம் நிதியிடப்பட்டுள்ளன.

iii) அண்மை ஆண்டுகளில் அரசாங்கத்தின் மூலதனச் செலவின் ஏறத்தாழ 60% மூலதன **கைமாற்றங்களையே** கொண்டதா யிருந்தது.

iv) அண்மை ஆண்டுகளில் பிசுக்கால் **சமநிலையின்மைகள்** நாட் டில் **பேரினப் பொருளியல் உறுதியின்மைக்கு** ஒரு பிரதான மூலமாக அமைந்தது.

1) வரவு செவுத்திட்டங்களில் ஏற்படும் பற்றுக் குறையை நிரப் புதற்கு கையாளும் சில வழிமுறைகளினால் பண நிரம்பல் அதிகரிக்குமாயின் அது விரிவாக்கற் தாக்கம் எனப்படுகிறது. இதனால் பண நிரம்பல் உயரும்போது பண வீக்கம் ஏற்பட வும் முடியும். இதனால் இது விரும்பத்தக்கதல்ல.

பற்றுக்குறைக்கு நிதியீட்டுதற்காக வங்கித்துறையிலிருந்து கடன் பெறும் போது இந்த நிலை ஏற்படுகிறது. பணநிலுவைகளைக் கையாளும் போதும் இதேவிளைவு ஏற்படமுடியும் இவ்வாறு ஏற்பட்ட பண நிரம்பல் அதிகரிப்பே 3 0 4 7 மில்லியன் ரூபாவாகும்.

2) பாதீட்டு பற்றுக் குறையை நிரப்புவதற்கு உள்நாட்டு மூலங்கள் போதாத விடத்து வெளிநாட்டு மூலங்களை பயன்படுத்துவதுண்டு. அவற்றையே வெளிநாட்டு நிதி என்பர்.

இதில் பின்வரும் வழியிலான நிதிகள் அடக்கப்படும்.

(அ) நன் கொடைகள்: இவை திருப்பிச் செலுத்த தேவையில்லாதன இதனுல் சுமையற்றவை.

ஆ) திட்டக் கடன்கள்: செயல் திட்டங்களுக்கென பெறக் கூடியவை. இவை பிணைக்கப்பட்ட உதவிகள் எனப்படும். வேறு தேவைக்கு இதைப் பாவிக்க முடியாது.

இ) சலுகைக் கடன்கள்: குறைந்த வட்டியுடன் நீண்ட தவணையுடையனவாயும், பெறும் நாடுதான் விரும்பியபடி பயன் படுத்தக் கூடியதாயுமிருப்பதை இது குறிக்கும்.

ஈ) வர்த்தகக் கடன்பாடுகள்: சந்தை நிபந்தனைகளுக்கு உட்பட்ட முறையில் பெறக்கூடியவை. இவை அதிகம் விரும்பத்தக்கவையல்ல

இந்த வெளிநாட்டு நிதிகள் பணவடிவிலோ, பண்டவடிவிலோ அமைய முடியும்.

3) மூலதன கைமாற்றங்கள் என்பது அரசின் மூலதனச் செலவின வகைகளுள் ஒன்றுகும். அரசாங்கம் நேரடியாக மேற்கொள்ள வேண்டிய செயற்திட்டத்தை மற்ெருரு அமைப்பு நடை முறைப்படுத்தும் போது அதற்கென கைமாற்றப்படும் தொகைகளே இவையாகும்.

அரசதிணைக் களங்களிலிருந்து அதிகாரசபை சபை போன்றவற்றுக்கு கொடுப்பனவாக இவை காணப்படும். முதலீடுகளாகப் பயன் படுத்த வேண்டும் என்ற அடிப்படையிற்றுன் இவை கொடுக்கப்படுகின்றன.

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை மின் சாரசபை, நீர் விநியோக வடிகாற்சபை, எயர் லங்கா நிறுவனம் போன்றவற்றுக்கான கொடுப்பனவுகள் இவ்வாறு வையாகும்.

4) பேரினப் பொருளாதார மாறிகள் தொடர்பாக சமநிலைகள் இழக்கப்படுதலேயே பேரினப் பொருளாதார மாறிகளின் உறுதியின்மை எனப்படும்.

அதாவது பணநிரம்பல் அதிகரிப்பதன் காரணமாக பொதுவிலை மட்டம் கூடிச்செல்லுதலும், சென்மதிநிலுவையில் குறைநிலைகள் அதிகரித்துச் செல்லுதலும் பாதீடுகளின் பற்றுக்குறையளவு தொடர்ந்து கூடிச் செல்வதையும் இது குறிக்கும். இத்தகைய முழுஅளவிலான தளம்பல் நிலைகளையே பேரினப் பொருளாதார உறுதியின்மை குறிக்கிறது,

அண்மைக் காலங்களில் அரசிறை மூலங்களின் அதிகரிப்பைவிட அரச செலவினங்கள் வேகமாக அதிகரிப்பதன் விளைவாகவே இச்சமநிலையின்மை ஏற்பட்டு வந்துள்ளது.

## 1987

வினா:- 1.

1) பொதுப் பொருள், தனியார் பொருள் ஆகிய இவற்றை ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுத்திக் காட்டும் சிறப்பியல்புகள் யாவை? பொதுப் பொருளுக்கு ஓர் உதாரணம் தருக.

**பொதுப் பொருள்:**

அரசாங்கத்தினால் உற்பத்தி செய்து வழங்கப்படும் பொருட்களும் சேவைகளும் இதில் அடங்கும்; இவைமக்களால் கூட்டாக நுகரப்படும், இதனால் விலைகொடுக்காதோருக்கும் இவை கிடைக்கும், இவை விலைப்பொறிமுறைக்குஉட்படுவதில்லை. இதில் சிலர் பயன்படுத்துவதால் வேறு சிலருக்கு இழப்பு ஏற்படமாட்டாது. இதனால் இவற்றில் அமையச் செலவு இல்லை. இவ் உற்பத்திச் செலவுகள் ஆசவரியிலிருந்தே தாங்கிக் கொள்ளப்படும். இதனால் தனியார் இவற்றை உற்பத்தி செய்வதில்லை.

உதாரணம்: பொதுப் பாதுகாப்பு, வெள்ளப் பாதுகாப்பு பொது வீதிகள், சூழல் பாதுகாப்புகள்

**தனியார் பொருள்:**

தனியாரால் உற்பத்தி செய்து வழங்கப்படுவன, இவற்றின் உற்பத்திச் செலவுகளைத் தனியாரே தாங்கிக் கொள்வர். இவை சந்தை முறைக்கு உட்படும்: இதனால் விலை கொடுப்போர் மாத்திரமே இவற்றைப் பயன் படுத்திக் கொள்ளமுடியும்,ஒருவர் இவற்றை கொள்வனவு செய்தால் மற்றவர் இதனை இழக்க வேண்டும்: இதனால் அமையச் செல்வுக்குட்படுவன. பெரும்பாலான சந்தைப் பொருட்கள் இவ்வகையினவே.

வினா: 2.

அரசாங்க வரவு செலவுத்திட்டம் (பாதீடு) ஒன்றில், நடைமுறைச் செலவுக்கும், மூலதன பொருட் செலவுக்கும் இடையேயுள்ள வேறு பாடுகள் யாவை? மூலதனச் செலவின் இரண்டு முக்கிய வகுதிகளைக் குறிப்பிடுக.

**நடைமுறைச்செலவுகள்:**

அரசாங்கம் தன் தொழிற்பாடுகளை மேற் கொள்வதற்கு வருடாந்தம் மேற் கொள்ளும் செலவுகள் இவை யாகும் அரசு தான் வழங்கும் சேவைகளை ஒழுங்காகப் பராமரிக்க மேற் கொள்ளப்படும் செலவுகள் இவை, சமூக நலன் பேண உதவுகின்றன.

உதராணம்: ஆசிரியர் சம்பளங்கள், நுகர் பொருட்களின் கொள்வனவும், ஆக்கமும் பொதுப் படுகடன்வட்டிகள்.

**மூலதனப் பொருட் செலவுகள்:**

மூலதன இருப்புச் சொத்துக்களின் மட்டத்தை அதிகரிப்பதற்கான செலவுகள் இவையாகும். முதற் பொருட்களின் கொள்வனவு, ஆக்கம், பராமரிப்பு தொடர்பான செலவுகள் இவையாகும். அபிவிருத்தித் திட்டங்களுக்கான செலவுகள் இவையாகும்.

உதாரணம்: கட்டிடங்கள், இயந்திரங்கள் கொள்வனவு பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கான கடன் தொகைகள்.

வினா 3.

"குடித்தனக்காரர்களுக்குச் செய்யும் மாறுதல்கள்" அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் பயன் படுத்தப்படும் இத் தொடரின் கருத்து யாது? இத்தகைய மாறுதல்கள் தொடர்பாக இரண்டு உதாரணங்களைக் குறிப் பிடுக.

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)

பொருட்கள், சேவைகளின் பாய்ச்சல் எதுவும் இல்லாமல் வீட்டுத்துறையினருக்கு மாற்றப்பட்ட சாதனங்கள் இவையாகும். இவை உற்பத்தித் தொடர்பு அற்றவை. இதனால் ஒரு பக்கக் கொடுப்பனவுகள் எனப்படும். இவை வெறுமனே மறுபங்கீடுகளே, இவை சமூக நீதியைப் பேணுவதற் கென்று அரசினால் வீட்டுத்துறைக்குக் கொடுபடுவனவாகும்.

உதாரணம்: உணவு, மண்ணெண்ணெய் முத்திரைகள் பாடசாலைப் பிள்ளைகளுக்கான இலவசப்பாட நூல்கள்.

சமூக சேவைகள் திணைக்கள கொடுப்பனவுகள், ஒய்வூதியம், வயோதிபர் கொடைகள்.

வினா: 4.

அரசாங்கசேமிப்பு என்பதனால் கருதப்படுவது யாது? அரசாங்க வரவு செலவுத்திட்ட. மொன்றில் இத்தகைய சேமிப்புக்களின் முக்கியத்துவத்தை சுருக்கமாகப் பரிசீலிக்கவும்.

அரச பாதீட்டில் நடைமுறைக்கணக்கில் காணப்படும் மிகையே அரசாங்க சேமிப்பு எனப்படும். அரச நடைமுறைச் செலவினங்களிலும் பார்க்க கூடுதலாக அரசிறை காணப்படும் போது தான் இத்தகைய சேமிப்பு ஏற்படுகிறது.

முக்கியத்துவம்

அ) முதலீடு செய்வதற்கு இந்த நிதியைப் பயன் படுத்த முடியும்.

ஆ) முதலிடுவதற்காகக் கடன் பெறும் அளவினை இது குறைக்க உதவும்.

இ) அரசாங்கம் தனது வரவுக்கேற்ப செலவிடுகின்றதா என்பதைக் காட்டும் குறிகாட்டி யாகவும் இது அமையும்

ஈ) தேசிய சேமிப்பின் ஒரு பகுதியாக இது அமைவதால் தேசிய சேமிப்பினைக் காட்டவும் உதவும்.


# நெகிழ்ச்சிக் கோட்பாடு

வினா: 1,

கீழ்நோக்கிச் சாயும் நேர்கோட்டுக் கேள்வி வளையி ஒன்றிலே கேள்யின் புள்ளி நெகிழ்ச்சி பூச்சியத்திலிருந்து முடிவிலி வரை மாறலாம் இக்கூற்றை நிறுவுக.

விடை

$Ed = \frac{\Delta Q}{\Delta p} \times \frac{P}{Q}$ என்ற புள்ளி நெகிழ்ச்சிச் சூத்திரத்தில் $\frac{\Delta Q}{\Delta p}$ என்பது கேள்விக் கோட்டின் தலைகீழ்படுத்திய சரிவினைக் குறிக்கின்றது. ஒருநேரான கோட்டின் எல்லாப் புள்ளிகளிலும் சரிவின் பெறுமதி சமமாக இருக்கும் எனவே கேள்விக்கோடு நேரானதாக இருப்பின் அதன் எல்லாப்பகுதிகளிலும் தலைகீழ்படுத்திய சரிவின் பெறுமதி சமமானதாக இருக்கும்.




எனவே வரைபடத்தில் உள்ள AB என்ற நேரான கேள்வி வளை கோட்டின் எல்லாப்புள்ளிகளிலும் $\frac{\Delta Q}{\Delta P}$ என்பது சமபெறுமதியுடையதாக இருக்க நெகிழ்ச்சியில் ஏற்படக்கூடிய மாற்றம் P, P என்பவற்றைப் பொறுத்தேயுள்ளது நெகிழ்ச்சி வாய்பாட்டில் P என்பது பிரிக்கப்படும் எண்ணுகவும் Q என்பது பிரிக்கும் எண்ணுகவும்உள்ளது.. எனவே விலையச்சினை நெருங்கிச் செல்ல P யின் பெறுமதி கூடுவதாலும்


Qஇன் பெறுமதி குறைவதாலும் நெகிழ்ச்சியின் பெறுமதி அதிகரிக்கின்றது. கிடையச்சினை நெருங்கிச் செல்லச் செல்ல Pஇன் பெறுமதி குறைவதாலும் Q இன் பெறுமதி கூடுவதாலும் நெகிழ்ச்சியின் பெறுமதி குறைகின்றது கேள்விக் கோடு கிடையச்சினை வெட்டும் புள்ளியில் P பூச்சியமாக அமைவதால் $\left( \frac{\Delta Q}{\Delta P} \times \frac{O}{Q} = \text{பூச்சியம்} \right)$ நெகிழ்ச்சி பூச்சியமாக அமைகின்றது. மறுபுறமாக கேள்விக்கோடு விலையச்சினை வெட்டும் புள்ளியில் Q என்பது பூச்சியமாக அமைவதால் $\left( \frac{\Delta Q}{\Delta P} \times \frac{P}{O} = \text{முடிவிலி} \right)$ நெகிழ்ச்சியின் பெறுமதி முடிவிலியாக அமைகிறது. எனவே ஒரு நேரான கீழ் நோக்கி சரியும் கேள்விக் கோட்டின் எல்லாப் புள்ளிகளிலும் நெகிழ்ச்சி வேறுபட்டிருக்கும் அத்தகையதொரு கேள்விக் கோட்டில் நெகிழ்ச்சியின் பெறுமதி விலையச்சில் முடிவிலியாக தொகையச்சில் பூச்சியமாக இருக்கும்.

**வின: 2,**

**அலகு முறையான நெகிழ்ச்சிக் கேள்வி வளையி ஒன்றை வரைக இது அலகு முறையான நெகிழ்ச்சியுடையது என்பதை எவ்வாறு நிறுவுவீர்.**

விடை

அலகு நெகிழ்ச்சியைக் காட்டும் ஒரு கேள்வி வளைகோடு அதிபரவளைகோபமாக இருக்கும்.




நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமனுக உள்ளபோது விலையில் ஏற்படும் எந்த ஒருமாற்றமும் நுகர்வோன் செலவீட்டை மாற்ற மாட்டாது. நுகர்வோன் செலவினை தொகையினை விலையினால் பெருக்குவதன் மூலம் அறிந்து கொள்ளலாம் A, B, C, D. E, ஆகிய புள்ளிகளில் எந்த ஒரு புள்ளியை எடுத்தாலும் அதற்குரிய விலையினால் அதற்குரிய தொகையைப் பெருக்கும் போது மொத்த செலவு எப்போது 48 ரூபாவாக உள்ளது.

வினு: 3.

மூலத்தினூடாக வரையப்பட்ட ஒரு நேர்கோட்டு வழங்கல் விளையி தன் முழுவீச்சில் ஒரு சீரான நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்.

விடை:

உற்பத்தித் தானத்தினை (மூலத்தினை) ஊடறுத்துச் செல்லும் எந்த ஒருநேரான நிரம்பல் வளைகோடும் ஒன்றுக்குச் சமமான நெகிழ்ச்சியினைக் கொண்டிருக்கும். இதனை பின்வருமாறு நிரூபிக்கலாம்.




தொகை

OS என்ற நேரான வழங்கல் கோடு மூலத்தினூடாக வரையப்பட்டுள்ளது. விலை OA என்பதில் இருந்து $OA_1$ ஆகக் குறைகிறது என எடுப்போம். Pயும் Qவும் S என்ற நிரம்பற் கோடும் ஒருமுக்கோணத்தினை உருவாக்குகின்றன. அதே போன்று ΔPயும் ΔQவும் S என்ற நிரம்பல் கோடும் இன்

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.
(ஆரம்பம் ; 18-8-85)



ஞெரு முக்கோணத்தினை உருவாக்குகின்றன. இவ்விரு முக்கோணங்களும் வடிவொத்த முக்கோணங்களாகும். எனவே அவற்றின் ஒத்தபக்கங்களின் விகிதாசாரம் ஒன்றுக்கொன்று சமனுக இருக்கும். எனவே $\frac{P}{Q} = \frac{\triangle P}{\triangle Q}$ ——(1) ஆகும்.

(1) வது சமன்பாட்டினை தலைகீழ்ப்படுத்தினுல் நாம் பெறுவது $\frac{Q}{P} = \frac{\triangle Q}{\triangle P}$ —— (2) நிரம்பல் நெகிழ்ச்சியானது பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றது.

$$Es = \frac{\triangle Q}{\triangle P} \times \frac{P}{Q} \quad \text{—— (3)}$$


(2) வது சமன்பாட்டின்படி $\frac{Q}{P} = \frac{\triangle Q}{\triangle P}$ என்பதால் (3) வது சமன்பாட்டில் உள்ள $\frac{\triangle Q}{\triangle P}$ என்பதற்குப் பதில் $\frac{Q}{P}$ என்பதைப் பிரதியிடலாம்.

அவ்வாறு பிரதியிடின் $ES = \frac{Q}{P} \times \frac{P}{Q} = 1$ ஆகும்.

எனவே மூலத்தினை ஊடறுத்துச் செல்லும் எந்த ஒருநேர்கோட்டு வழங்கல் வளையியும் தன் முழுவீச்சிலும் ஒரு சீரான (ஒன்றுக்குச் சமனுன நெகிழ்ச்சியைக் கொண்டிருக்கும்.

வினு; 4.
கேள்வியின் விலை நெகிழ்ச்சியானது பண்டவரியொன்றில் இருந்து ஒரு அரசாங்கம் பெற்றுக் கொள்ளக் கூடிய வரிவருமானத்தின் அளவில் எங்ஙனம் செல்வாக்கு செலுத்தும்? விளக்குக.

விடை; பொருளொன்றின் மீது வரி விதிக்கப்படுகின்ற போது நிரம்பல் கோடானது இடதுபக்கம் நகருகின்றது. இதனுல் விலையானது (கேள்வி நெகிழ்ச்சி பூரண நெகிழ்ச்சியாக இல்லாத இடத்து) உயர்வடைகின்றது. இதனுல் சமநிலைத்தொகையில் மாற்றமேற்படுகின்றது. (கேள்வி நெகிழ்ச்சி பூச்சியமாக உள்ள நிலைதவிர) அரசாங்கம் வரி மூலம் பெறக்கூடிய வருமானம் வரியின் அளவினையும் சமநிலைத் தொகையின் அளவினையும் பொறுத்திருக்கும். வரியின் அளவானது கேள்வி நெகிழ்ச்சி எவ்விதமாக அமைந்திருந்தாலும் மாறுபடமாட்டாது. இதனுல் அரசாங்கம் வரி மாற்றத்தினைப் பொறுத்தே பெரிதும் அமைந்திருக்கும். வரிவிதிப்பதனுல் சமநிலைத் தொ




கையில் ஏற்படக் கூடிய குறைவு கேள்வி நெகிழ்ச்சியினைப் பொறுத்து அமைந்திருக்கும். இதனைப்படத்தின் உதவியுடன் விளக்கலாம். SS என்ற கோடு ஆரம்ப நிரம்பல் கோட்டையும்St St என்ற கோடு வரிவிதித்த பின்னர் உள்ள நிரம்பல் கோட்டினையும் காட்டுகின்றன. $QD_1$, $D_2$, $D_2D^3$ ,$D^3$, $PD_1$ என்பன நான்கு கோடுகளாகும். ஆரம்பத்தில் வரி விதிப்பதற்கு முன்னர் எல்லாக் கேள்விகோடுகளையும் பொறுத்து சம நிலைத் தொகை OQஆகும் ஆனல் வரி விதித்த . பின்னர் நெகிழ்ச்சிக் ணக அளவுக் கேற்ப புதியசமநிலைத் தொகைகள் மாறுபடுகின்றன.$QD_1$ என்ற பூச்சிய நெகிழ்ச்சியுடைய கேள்விக் கோட்டைப் பொறுத்தவரையில் சமநிலைத் தொகையில் எவ்வித மாற்றமும் இல்லை. இதனுல் அரசாங்கம் பெறும் வரி வருமான அளவு = ஒரு அலகுக்கான வரி XOQ ஆகும்.

$D^2 D^2$ என்ற கேள்விக் கோட்டைப் பொறுத்தவரையில் (ஒப்பீட்டு ரீதியில் நெகிழ்ச்சியற்ற கேள்விக்கோட்டைப் பொறுத்தவரை) புதிய சமநிலைத்தொகை OQ ஆகும். இந்நிலையில் அரசாங்கம் பெறும் வரி வருமானம் = ஒருஅலகுக்கான வரி $\times$OQ ஆகும்.

$D^3D^3$ என்ற கேள்விக்கோட்டைப் பொறுத்தவரையில் (ஒப்பீட்டுரீதியில் நெகிழ்ச்சியுடைய) புதியசமநிலைத் தொகை $OQ^2$ ஆகும்.

$pD_4$ என்ற கேள்விக்கோட்டைப் பொறுத்தவரையில் (பூரணநெகிழ்ச்சியுடையது) புதியசமநிலைத்தொகை $OQ^3$ஆகும் இந்நிலையில் அரசாங்கம் பெறும் வரிவருமானம் = ஒருஅலகுக்கான வரி $\times OQ^3$ஆகும்.

$OQ > OQ^1 > OQ^2 > OQ^3$ என்பதால் அரசாங்கம் கேள்விநெகிழ்ச்சி பூச்சியமாக இருக்கும்போதே பண்டவரியொன்றில் இருந்து கூடிய வருமானத்தினை பெற்றுக் கொள்ளமுடியும். கேள்வி நெகிழ்ச்சி பூச்சியத்தில் இருந்து பூரணநெகிழ்ச்சியினை நெருங்கிச் செல்லச் செல்ல பண்டவரியொன்றின் மூலம் அரசாங்கம் பெறக்கூடிய வருமானம் குறைந்து கொண்டு செல்லும்.

ஞ:

இரண்டு பண்டங்களுத்கான சந்தைக் கேள்வியின் விலை நெகிழ்ச்சிகள் 0.87, 1.18 ஆகும் எனக் கொள்க, விற்பனை வருமானத்தை அதிகரிக்கும் நோக்குத்துடன் இவ் விரு பண்டங்களினதும் விலைகள் 10 சதவீதத்தினுல் குறைப்பதென வழங்குநர்கள் தீர்மானிக்கின்றனர். வழங்குநர்கள் தமது நோக்கத்தை எய்துவார்களென கருதுகிறீரா? உமது விடையை விளக்குக.

விடை:

நெகிழ்ச்சி, விலை, மொத்த வருமானம் ஆகியவற்றுக்கிடையே தொடர்புகளை நோக்குவோமாயின் ஒன்றுக்குக் குறைந்த கேள்வி நெகிழ்ச்சியுடைய பொருள் குறித்து, விலை குறையுமாயின் மொத்த வருமானம் குறையும். ஒன்றுக்குக் கூடிய கேள்வி நெகிழ்ச்சியுடைய பொருள் குறித்து விலை குறையுமாயின் மொத்த வருமானம் அதிகரிக்கும்.

இதனுல் 0.87 என்ற ஒன்றுக்குக் குறைந்த நெகிழ்ச்சிப் பெறுமதியுடைய பொருளின் விலையை 10 சதவீதத்தால் குறைப்பின் மொத்த வருமானம் குறையும். பின்வரும் உதராணம் இதனை விளக்குகின்றது. ஆரம்ப விலை 10 ரூபாவாகும்.

| விலை | தொகை | மொத்தவருமானம் |
|---|---|---|
| 10 | 1000 | 10000 |
| 9 | 1087 | 978 3 |

1.18 என்ற ஒன்றுக்குக் கூடிய நெகிழ்ச்சியுடைய பொருளின் விலையை 10 சதவீதத்தினுல் குறைத்தால் மொத்த வருமானம் அதிகரிக்கும். பின்வருமாறு அதனை விளக்கலாம்.

| விலை | தொகை | மொத்தவருமானம் |
|---|---|---|
| 10 | 1000 | 10000 |
| 9 | 1118 | 10062 |

வினு:

குறிப்பட்ட தொரு பண்டத்திற்கான கேள்வியின் வருமான நெகிழ்ச்சி, நகரத்தில் உள்ள மக்களின் ஒரு பகுதியினரைப் பொறுத்தளவில் நேரானதாக இருக்க அதே நகரத்தின் மற்றுமொரு பகுதி மக்களைப் பொறுத்தளவிதி அந் நெகிழ்ச்சி மறையானதாக இருந்ததெனக் கொள்க. ஒரே நகரத்தில் ஒரே பொருளைப் பொறுத்தளவில் இத்தகைய தொரு வித்தியாசம் எவ்வாறு ஏற்படமுடியும்?

விடை:

ஒரு பொருளினது வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி குறிப்பிட்ட பொருளின் தன்மையில் மட்டுமன்றி நுகர்வோர் வருமான மட்டத்திலும் தங்கியிருக்கும். குறைந்த வருமான மட்டத்தில் உள்ளவர்களின் வருமானம் அதிகரிக்கும் போது அவர்கள் குறிப்பிட்ட தொரு பொருளுக்கான கேள்வியை அதிகரிப்பர். உயர்ந்த வருமான மட்டத்தில் உள்ளவர்கள் மேற் குறித்த பொருளிலும் பார்க்க தரமுடைய பொருளை வருமானம் கூடும் போது நாடுவது இயல்பே கொள்வனவு செய்ய முயலும் போது மேற் குறித்த பொருளின் நுகர்வைக்குறைக்கலாம். இதனுல் வருமானமாற்றமும் கேள்வி மாற்றமும் எதிரெதிர் திசைகளில் நகர நெகிழ்ச்சி மறையானதாக அமையும். இங்கு குறிப்ப ப்பட்ட இரு குழுவினரும் இரு வெவ்வேறுபட்ட வருமான வகுப்புக்களைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வினு:

குறிப்பிட்ட தொரு பண்டத்தின் விலை ரூபா 1 இலிருந்து ரூபா 1.50 ஆக உயர்ந்த போது அப்பண்டத்திற்கான கேள்வியின் அளவு 6000 அலகுகளிலிருந்து 3000 அலகுகளாகக் குறைந்தது. இப்பண்டத்திற்கான கேள்வி அலகுசார் (ஒருமை) நெகிழ்ச்சிக்குட் பட்டது என முடிவு செய்வீரா?

விடை:

சாதாரணமாக நாம் நெகிழ்ச்சியைக் கணிப்பதற்கு பயன் படுத்தும் புள்ளி நெகிழ்ச்சி முறையினைக் கையாளும் போது இங்கு தரப்பட்ட புள்ளி விபரங்களில் இருந்து நாம் பெறும் நெகிழ்ச்சியின் பெறுமதி ஒன்றுக்கு சமனுனதாக இருக்கும்

| விலை | தொகை |
|---|---|
| 1.00 | 6000 |
| 1.50 | 3000 |

$$Ed = \frac{\triangle Q}{\triangle P} \times \frac{P}{Q}$$

$$= \frac{3000}{0.50} \times \frac{1.00}{6000} = 1$$

எனினும் நாம் இம் முடிவுக்கு வருதல் முடியாது. இதற்கு இரு காரணங்களைக் கூறலாம்.

(i) இங்கு ஏற்பட்ட விலை மாற்றும் 50 சதவீதமாக இருப்பதால் நெகிழ்ச்சியைக் கணிப்பதற்கு நாம் இங்கு புள்ளி நெகிழ்ச்சி முறையைப் பயன் படுத்தாமல் வளைவு (வில்) நெகிழ்ச்சியையே பயன்படுத்தல் வேண்டும். அவ்வாறு கணிப் போமாயின் நாம் பெறும் நெகிழ்ச்சியின் பெறுமதி 1.66 ஆகும்.

$$Ed \frac{\triangle Q}{\triangle P} \times \frac{P+P_2}{Q+Q_2}$$

$$= \frac{3000}{0.50} \times \frac{1.00 + 1.50}{6000 + 3000} = 1.66$$

(ii) நெகிழ்ச்சி ஒன்றுக்குச் சமனாக அமையும்போது விலையில் மாற்றம் ஏற்பட்டாலும் நுகர்வோர் செலவீடு மாற்றமடையாது ஆனால் இங்கு நுகர்வோர் செலவு விலை ஒரு ரூபாவாக உள்ளபோது 6000 ரூபாய்களாக இருந்து விலை 1.50 ரூபாயாக அதிகரிக்கையில் 4500 ரூபாய்களாக்க குறைகின்றது. எனவே இவ் வகையில் நோக்கினும் இது ஒன்றுக்குச் சமனான நெகிழ்ச்சி யல்ல என்ற முடிவுக்கே நாம்வருதல் வேண்டும்.

வினா

கேள்வியின் வில் நெகிழ்ச்சிக்கும் (மீள்தன்மை) கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சிக்கும் யாவை. இடையேயுள்ள வேறுபாடுகள்.

விடை

வில் என்பது கேள்வி வளையின் இருபுள்ளிகளுக்கிடைப்பட்ட பகுதியைக் குறிக்கின்றது. வில் நெகிழ்ச்சி என்பது கேள்வி வளையியின் குறிப்பிட்ட பகுதிகளுக்கிடையே விலை மாற்றத்தால் தூண்டப்பட்ட தொகைமாற்ற சராசரியினை அளவிடுதலாகும். ஆரம்ப விலை- தொகை புதியவிலை- தொகை என்வபற்றினது சராசரியினைக் கையாண்டு, விகிதாசார மாற்றமானது இங்கு அளவிடப்படும். வில் நெகிழ்ச்சிக்கான வாய்ப்பாடுபின் வருமாறு:-

$$E\,A = \frac{\triangle Q}{\triangle p} \times \frac{P_1 + P_2}{Q_1 + Q_2}$$

$\triangle Q$ = தொகை மாற்றம்
$\triangle p$ = விலை மாற்றம்
$P_1$ = ஆரம்ப விலை
$Q_1$ = ஆரம்ப தொகை
$P_2$ புதிய விலை
$P_2$ = புதிய தொகை

உதாரணமாக விலை ரூபா 5 ஆக இருக்கையில் கேள்வித் தொகை 50 அலகுகளென்றும், விலை 8 ரூபாவாக அமைகையில் கேள்வித்தொகை 40 அலகுகள் என்றும் எடுத்து கொள்வோம். இதன் படி வில் நெகிழ்ச்சி

$$E_A = \frac{10}{3} \times \frac{5+8}{50+40} = 0.48 \text{ ஆகும்.}$$

புள்ளி நெகிழ்ச்சி என்பது கேள்வி வளையினது குறிப்பிட்ட ஒவ்வொரு புள்ளியிலும் விலைமாற்றத்தால்லேற்படும் விகிதாசார தொகை மாற்றத் தொடர்பினை அளவிடுதலாகும் இது வளைவு நெகிழ்ச்சியின் எல்லையினைக் குறிக்கும் அதாவது கேள்வி வளையினது விலைமாற்ற இடைவெளி சிறிது சிறிதாகக் குறைந்து பூச்சிய நிலையினை நெருங்கும்போது (—> O) விலை நெகிழ்ச்சியினை அளவிடுதலை இது கருதும். புள்ளி நெகிழ்ச்சி வாய்பாடு பின்வருமாறு

$$E_P = \frac{\Delta Q}{\Delta Q} \times \frac{P}{Q}$$

இதனைப்பயன்படுத்தி நெகிழ்ச்சியினை அளவிடுகின்ற போது விலை அதிகரிக்கும் நிலையில் ஒருவிடையும் விலை வீழ்ச்சியடையும் போது இன்னொரு விடையும் கிடைக்கின்றது. ஆரம்ப உதாரணத்தை எடுத்து விலை 5 ரூபாவில் இருந்து 8 ரூபாவாக அதிகரித்தால் நெகிழ்ச்சி,

$$Ep\frac{\Delta Q}{\Delta p} \times \frac{P}{q} = \frac{10}{3} \times \frac{5}{50} = 0 \cdot 33 \text{ ஆகும்.}$$

விலை 8 ரூபாவில் இருந்து 5 ரூபாவாக வீழ்ச்சியடையின் நெகிழ்சி

$$Ep = \frac{\Delta Q}{\Delta p} \times \frac{p}{Q} = \frac{10}{3} \times \frac{8}{40} = 0 \cdot 66 \text{ ஆகும்.}$$

இத்தகைய குறைபாடு வில் நெகிழ்ச்சிகளில் இல்லை

புள்ளி நெகிழ்ச்சியினைப் பயன்படுத்தி நெகிழ்ச்சியை அறிந்து கொள்வது இலகுவானதெனினும் நடைமுறை உபயோகத்தில் அது அதிக பயன்பாட்டைத் தருவதில்லை ஏனெனில் விலையில் ஏற்படும் மிக நுண்ணிய மாற்றத்தினுல் கேள்வித் தொகையில் எந்தகைய மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பதற்கான விபரங்கள் பெரும் பாலும் கிடைப்பதில்லை. கணிசமான அளவுக்கு விலையில் மாற்றம் ஏற்படுகின்றபோது கேள்வித் தொகையில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பது பற்றிய விபரங்கள் தெளிவாக கிடைக்கின்றன. இந்நிலையில் திருப்திகரமான முறையில் நெகிழ்ச்சி அளவிடும் முறையாக சராசரி விலை, சராசரித் தொகை போன்ற வற்றைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளும் வில் நெகிழ்ச்சி அமைகின்றது.

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழா[illegible]
(ஆரம்பம் ; 18-8-85)

# நிரு டியூசன் சென்றர்

## ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

வடமாகாணத்தில் தலைசிறந்த கல்வி நிறுவனம்
கலை, வர்த்தக, விஞ்ஞான, க. பொ. த (உயர் தர) வகுப்புக்கள்:

## 90, 91 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

### கலை, வர்த்தகம்

பொருளியல்: சின்னத்தம்பி — கணக்கியல்: மரியதாஸ்
வர்த்தகம்: தேவா — அளவையியல்: S. S. மனோகரன்
தமிழ்: குழந்தை — புவியியல்: வேலாயுதபிள்ளை
இந்துநாகரிகம்: அருள்நங்கை

### விஞ்ஞானம்

பௌதிகவியல்: சௌந்தி — இரசாயனவியல்: செல்வா
தாவரவியல்: பாலா — விலங்கியல்: ஞானம், ஈசன்
தூய, பிரயோக கணிதம்: கிருஷ்ணா

# ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம்

★ தரமான அச்சுவேலைகளை
★ குறித்த நேரத்தில்
★ சிறந்த முறையில்
★ குறைந்த செலவில்

அச்சிட்டுப் பெற்றிட

# ஸ்ரீ லக்ஷ்மி அச்சகம்

222, (76) ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை:-

37, கண்டி வீதி, சுண்டிக்குளி
யாழ்ப்பாணம்.

சித்திவிநாயகர் நூல் நிலையம்
ஏழாலை மேற்கு, [illegible]
(ஆரம்பம் ; 18-8-85)

## அல்பிரட் நோபல் ஞாபகார்த்தமாக பொருளியலில் சுவீடன் வங்கியால் வழங்கப்படும் பரிசைப் பெற்றவர்கள் (1969 — 1988)

| ஆண்டு | பெயர் | எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் |
|---|---|---|
| 1969 | ஆர். பிறிச் R. Frish | நோர்வே |
| | ஜே. ரின்பேகன் J. Tinbergen | நெதர்லாந்து |
| 1970 | பி. சாமுவேல்சன் P. Samuelson | அமெரிக்கா |
| 1971 | எஸ். குஸ்நெற்ஸ் S. Kuznets | அமெரிக்கா |
| 1972 | ஜே. ஆர். கிக்ஸ் J. R. Kicks | பெரிய பிரித்தானியா |
| | கே. அரோ K Arrow | அமெரிக்கா |
| 1973 | டபிள்யு லியன்ரிவ் W, Leontief | அமெரிக்கா |
| 1974 | ஜி. மிர்டால் G. Myrdal | சுவீடன் |
| | எவ். எ. வொன் கயக் Fr A. Von Hayek | பெரியபிரித்தானியா |
| 1975 | எல். வி. கன்ரோரோவிச் L. V. Kantorovich | ரஷ்யா |
| | ரி. சி. கூப்மன்ஸ் T. C. Koopmans | அமெரிக்கா |
| 1976 | எம். பிறீட்மன் M. Friedmam | அமெரிக்கா |
| 1977 | பி. ஒலின் B. Ohlin | சுவீடன் |
| | ஜே மீட I. Meade | பெரியபிரித்தானியா |
| 1978 | எச். சைமன் H. Simon | அமெரிக்கா |
| 1979 | எ. லூயிஸ் A. Lewis | பெரிய பிரித்தானியா |
| | ரி. டபிள்யு. சூல்ற்ஜ் T. W? Schultz | அமெரிக்கா |
| 1980 | எல். கிளீன் L Klein | அமெரிக்கா |
| 1981 | ஜே. ரொபின் J. Tobin | அமெரிக்கா |
| 1882 | ஜி ஜே ஸ்ரிக்லர் G. J. Stigler | அமெரிக்கா |
| 1983 | ஜி. டிப்ரு G. Debreu | அமெரிக்கா |
| 1984 | ஆர். ஸ்ரோன் R Stone | பெரிய பிரித்தானியா |
| 1985 | எல் மொடிலிகினி F. Modiligine | அமெரிக்கா |
| 1986 | ஜே. எம். புக்கானன் J. M. Buchanan | அமெரிக்கா |
| 1987 | ஆர். எம். சோலோ R. M. Solow | அமெரிக்கா |
| 1988 | எம். அலெஸ் M. Allais | பிரான்ஸ் |

இவ்விதழைப் பெறுவதற்கு தொடர்புகொள்ள வேண்டிய முகவரிகள்:

O கே. ரி, கே. தம்பையா
வந்தாறுமூலை
மட்டக்களப்பு.

O எஸ். தண்டாயுதபாணி
இந்துக்கல்லூரி
திருகோணமலை.

அச்சுப்பதிப்பு: நியூ ஈரா பப்பிளிக்கேஷன் லிமிட்., யாழ்ப்பாணம்.

# PORULIYALALAN

YOUNG ECONOMISTS ASSOCIATION

Published By
Young Economists Association
37 Press Lane
Kokuvil
Sri Lanka